விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 30 வியாழக்கிழமை (15.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## யாழ்.பொது நூலகத்தில் அடாவடி புரிந்த நபர் கைது



23ஆம் பக்கம் பார்க்க...

## பரீட்சை மோசடி; இருவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலய பரீட்சை நிலையத்தில் நேற்று இடம்பெற்ற க.பொ.த சாதாரண தர கணிதபாட பரீட்சையில் பிறிதொரு நபருக்காக பரீட்சை எழுதிய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் கணிதபாட பரீட்சையில் சித்திபெறத் தவறிய ஒருவருக்கு பதிலாக பரீட்சை எழுதியவரே

24ஆம் பக்கம் பார்க்க....

## அன்ரன் பாலசிங்கத்தின் நினைவு நிகழ்வு



24ஆம் பக்கம் பார்க்க...

### முதலமைச்சரால் நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட்ட

# வடக்கு பட்ஜெட்டில் கல்விக்கு முன்னுரிமை

| கல்வி அமைச்சு | விவசாய அமைச்சு | சுகாதார அமைச்சு | மீன்பிடி அமைச்சு |
|---|---|---|---|
| ரூ.9670.871 மில்லியன் | ரூ.983.784 மில்லியன் | ரூ.5267.45 மில்லியன் | ரூ.420.726 மில்லியன் |

(யாழ்ப்பாணம்)

**கல்வித்துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வடக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் (பட்ஜெட்) முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நேற்று அவையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அடுத்த ஆண்டுக்கான மொத்த ஒதுக்கீடான 22 ஆயிரத்து 728.117 மில்லியனில் கல்வி அமைச்சுக்கு மீண்டுவரும் செலவினமாக 9 ஆயிரத்து 670.871 மில்லியனும், மூலதன செலவினமாக 666.5 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாண சபையின் 69 ஆவது அமர்வு நேற்றைய தினம் வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே வடக்கு மாகாண முதலமைச்சரும் வடக்கு மாகாண நிதி அமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை சபையில் சமர்ப்பித்தார்.

கடந்த வருடத்தை பார்க்கையில் இம்முறை மொத்த ஒதுக்கீடு குறைவாக காணப்பட்ட போதிலும்.

பல்வேறு புதிய மக்கள் நலத்திட்

24ஆம் பக்கம் பார்க்க....

### யாழின் இருவேறு பகுதிகளில்

## ரூ.62 இலட்சம் பெறுமதியான கேரள கஞ்சா பொதிகள் மீட்பு



23ஆம் பக்கம் பார்க்க...

### ஜப்பான் அரசாங்கத்தின்

## ரூ.32 ஆயிரம் மில்.நிதியுதவியுடன் வடக்கில் நீர்ப்பாசன-குடிநீர்த் திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் அரசாங்கத்தின் 32 ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி உதவியுடன் நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் திட்டம் ஐந்து வருடங்களுக்கு வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த திட்டம் வடக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் மேலதிக நிதி மூலங்கள் ஊடாக உள்வாங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின் போது மேற்படி திட்டங்கள் குறித்து முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால கூறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் தொடர்ந்து விபரிக்கையில்,

ஜப்பான் அரசின் ரூபாய் 32 ஆயிரம் மில்லியன் நிதி உதவியினூடான REACH திட்டம் ஐந்து ஆண்டுகளை கொண்டதாகும்(2016-2020).

24ஆம் பக்கம் பார்க்க....

## ரூ.74 ஆயிரத்து 172.52 மில்லியன் நிதி பட்ஜெட்டினூடாக வடக்கிற்கு ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் ஒருங்கிணைந்த கட்டமைப்பு ஊடாக ஐந்து மாவட்டங்களுக்கும் 74 ஆயிரத்து 172.52 மில்லியன் ரூபாய் 2017ஆம்ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத்திட்டத்தினூடாக ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் அடுத்தாண்டுக்கு என வட மாகாண சபையினால் கோரப்பட்ட நிதித்தேவையின் பிரகாரம் மீண்டெழும் செலவினத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதித்தேவை ரூபாய் 22 ஆயிரத்து 329.613 மில்லியன்களாக இருந்த போதிலும், ரூபாய் 19 ஆயிரத்து 321. 737 மில்லியன்களே இம்மாகாணத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகையாக கிடைக்கப்பெற்றுள்ளது.

வட மாகாணசபையில் ஒருங்கிணைந்த கட்டமைப்புக்கூடாக ஐந்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப் படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி ஆணைக்குழுவினால் 2017-ம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத்திட்டத்தினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விபரங்கள் வருமாறு, வட மாகாண சபைக்கு 2017 ஆம் ஆண்டுக்கு மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபாய் 19.321. 737 மில்லியனும், மூலதன செலவினங்களுக்காக ரூபாய் 2.208. 38 மில்லியனும், வெளிநாட்டு-

24ஆம் பக்கம் பார்க்க...



# ஆறுதிருமுருகனின் தாயார் காலமானார்



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகனின் தாயார் திருமதி சரஸ்வதி ஆறுமுகம் தனது 90வது வயதில் காலமானார். இவர் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் ஆசிரியராக, உப அதிபராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இவரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெறும்.

# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு

## 2017-ம் ஆண்டிற்கான மீள்கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள் இறைச்சிக் கடைகள் 2017-ம் ஆண்டு ஜனவரி மாதம் 01-ம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31-ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 15.12.2016 தொடக்கம் 26.12.2016, 3.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 27.12.2016 முற்பகல் 10 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 27.12.2016 முற்பகல் 10.30 மணி

01.கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 27.12.2016 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 27.12.2016 முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

02.கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்கள், நிபந்தனைகள் 17.11.2016 திகதிய தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

| இல. | விபரம் | மீளளிக்கப் படாதகேள்விப்படிவக் கட்டணம் (VAT,\ NBT) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT) நீங்கலாக |
|---|---|---|---|---|
| 01. முள்ளியவளை உப அலுவலகம் | | | | |
| 01 | முள்ளியவளை பொதுச்சந்தை | 1,500.00 | 30,000.00 | 1,029,600.00 |
| 02 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 1,500.00 | 50,000.00 | 1,861,300.00 |
| 03 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 1,000.00 | 5,000.00 | 120,400.00 |
| 04 | தண்ணீரூற்று ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 28,350.00 |
| 05 | சிலாவத்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 453,600.00 |
| 06 | சிலாவத்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 57,100.00 |
| 02. முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | |
| 01 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 1,500.00 | 40,000.00 | 1,153,700.00 |
| 02 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 45,000.00 | 1,604,800.00 |
| 03 | முல்லைத்தீவு ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 40,500.00 |
| 03. கொக்கிளாய் உப அலுவலகம் | | | | |
| 01 | கொக்குத்தொடுவாய பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 10,950.00 |
| 04. முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | | |
| 01 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 72,900.00 |
| 02 | முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 22,400.00 |
| 03 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 133,650.00 |
| 04 | முள்ளிவாய்க்கால் கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 10,950.00 |
| 05. செம்மலை உப அலுவலகம் | | | | |
| 01 | அளம்பில் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 32,800.00 |
| 02 | குமுழமுனை பொதுச்சந்தை | 1,000.00 | 10,000.00 | 268,450.00 |
| 03 | செம்மலை பொதுச்சந்தை | 1,000.00 | 3,000.00 | 41,050.00 |
| 04 | அளம்பில கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 4,000.00 | 63,900.00 |
| 05 | குமுழமுனை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 5,000.00 | 71,350.00 |
| 06 | குமுழமுனை ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 10,950.00 |

சீ.சபேசன்,
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.
15.12.2016

(சி-6688)

# இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்
## கல்வியாண்டு 2016/17

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| கற்கை நெறிகள் | அனுமதித் தகைமைகள் | மொழி | கற்கைநெறிக்கான காலம் | விண்ணப்பிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் Entrepreneurship and Small Business Management (ESBM) | ♦18 வயதிற்கு மேற்பட்டவர் அத்துடன்<br>♦பீடத்தினால் நடாத்தப்படும் அடிப்படைக் கற்கை நெறியில நிலை 1ஐ பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது<br>♦இ.தி.ப.கழகத்தினால் நடத்தப்படும் அடிப்படைக்கற்கை நெறியில் இரண்டு கணிப்பு விகிதத்தை அல்லது விலக்களிப்பை பெற்றிருத்தல் வேண்டும். அல்லது<br>♦க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் (6 பாடங்களில்) சித்தி | தமிழ்/ஆங்கிலம் | 01 வருடம் | 28.11.2016 30.12.2016 |
| முகாமைத்துவ பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (Bachelor of Management studies Degree) BMS | ♦க.பொ.த (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி. அல்லது<br>♦தொழில் உரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது<br>♦இ.தி.ப.கழகத்தினால் நடத்தப்படும் அடிப்படைக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். | தமிழ்/ஆங்கிலம் | 4 வருடம் | 28.11.2016 30.12.2016 |

**www.ou.ac.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து விண்ணப்பிக்க முடியும்.**

மேலதிக தகவல்களுக்கு பின்வரும் நிலையங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| நிலையம் | முகவரி | தொலைபேசி இல. |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 - 222 3374 |
| வவுனியா கற்கைநிலையம் | இல. 366, கண்டி வீதி, தேக்கவத்தை, வவுனியா | 024 - 222 2995 |
| கிளிநொச்சி கற்கைநிலையம் | 155ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சி | 021 - 228 3970 |
| முல்லைத்தீவு கற்கைநிலையம் | ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 071 - 352 2367 |
| மன்னார் கற்கை நிலையம் | தலைமன்னார் வீதி, மன்னார். | 077 - 562 5352 |

பதிவாளர்,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம். (சி-6689)

இணைய வருவழி மூலமே விண்ணப்பிக்க முடியும்

# மரண அறிவித்தல்



## திருமதி சபாலிங்கம் மேரிறீற்றா

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.107, கட்சன் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாலிங்கம் மேரிறீற்றா நேற்று முன்தினம் (13.12.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஆசீர்வாதம், மரியதாஸ், லீலா, காலஞ்சென்ற லில்லி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சகாயராசா (அதிபர் - வ/வேடர் மகிழங்குளம் வித்தியாலயம்), செல்வராசா (ஸ்ரீலங்கா ரெலிக்கொம், வவுனியா), ஜீவராசா (ஸ்ரீலங்கா ரெலிக்கொம், வவுனியா), சகாயரஜினி, திவ்வியராசா (அவுஸ்ரேலியா), அமலராசா (உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கரைச்சி பிரதேச செயலகம்), விமலராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி அன்றனிட்டா கலாதேவி சகாயராசா (பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வவுனியா தெற்கு வலயம்), மேரிஎணஸ்ரின் (கீதா), பரமேஸ்வரி (றாணி), மனுவல் (அதிபர் - கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), மரியா (அவுஸ்ரேலியா), தமிழ்ச்செல்வி (சிரேஷ்ட சுற்றாடல் அதிகாரி மத்திய சுற்றாடல் அதிகாரசபை), சந்திரவதனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மனோஜா, மொறின் சிறோமினி (றீனி), டிலோசன், நிரோசன், தனுசன், பிரேமினி, சுலக்ஸன், நிலக்ஸன், பெர்லின், விதுஷன், கஜீபன், அலன், ஓவியா, றிச்சட், லவீன், கொட்வின், சில்வியா, கெவின், மதுசனா, துஷாந்தன், செரீனா, மதுசிகா, நிக்சன், யதுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் தூய சூசையப்பர் ஆலயத்தில் நாளை (16.12.2016) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் மம்மில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.107, கட்சன் வீதி,
வட்டக்கச்சி.

(சி-6687)

தகவல்: குடும்பத்தினர்.
மனுவல் : 077 711 4057

# பாரிய மோசடிகள் குறித்த 171 விசாரணைகள் நிறைவு

## 6 அறிக்கைகள் ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

**பாரிய ஊழல் மோசடிகளுடன் தொடர்புடைய 171 முறைப்பாடுகள் சம்பந்தமான விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக பாரிய மோசடி விசாரணை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இந்த ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி வரை, பாரிய மோசடி விசாரணை ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு 1600 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததாக அந்த ஆணைக்குழுவின் செயலாளர் எச். டப்ளியூ குணதாச தெரிவித்தார்.

இருப்பினும் 165 முறைபாடுகள் அந்த ஆணைக் குழுவின் விதி மு றைக்கு அமைவானதாக இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

அதன் காரணமாக அதில 43 முறைப்பாடுகளை வேறு நிறுவனங்களுக்கு மாற்றியதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் கூறினார்.

பாரிய மோசடி விசாரணை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு கிடைத்த 357 முறைப்பாடுகள் விசாரணைப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 36 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது வரை பாரிய மோசடி விசாரணை ஜனாதிபதி ஆணைக்குழுவினால் நிறைவு செய்யப்பட்ட 06 விசாரணை அறிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மேலும் 6 விசாரணை அறிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாக பாரிய மோசடி விசாரணை ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எச். டபிள்யூ குணதாச தெரிவித்தார்.

அதனுடன் அந்த ஆணைக்குழுவின் முன்னேற்றம் குறித்த அறிக்கை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுவதுடன், அதுபோன்ற அறிக்கை ஒன்று எதிர்வரும் வாரத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## அம்பாந்தோட்டை மக்கள் ஆர்ப்பாட்டம்





அம்பாந்தோட்டை மக்கள் வீதியை மறித்து நேற்றுப் போராட்டம் நடத்தினர். கொழும்பு கதிர்காம வீதியை மறித்து அம்பாந்தோட்டையில் பாரியளவில் போராட்டம் நடத்தப்பட்டது.

சீன நிறுவனங்களுக்கு காணிகள் விற்பனை செய்யப்படுவதனை எதிர்த்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. அம்பாந்தோட்டை காணிகள் சீன நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படக் கூடாது என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கொழும்பு கதிர்காம வீதியில் மிரிஜ்ஜவல சந்தியில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## அரசியலமைப்பு உருவாக்கம் இலகுவான காரியம் இல்லை

### முன்னாள் அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டு

தற்போதைய அரசாங்கத்தினால் புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், அது இலகுவான காரியம் அல்ல என்று தற்போது புரிந்து கொண்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதை மறைப்பதற்காக தற்சமயம் விஷேட அபிவிருத்தி ஏற்பாடு என்ற பெயரில் சட்டமூலம் ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சிப்பதாக அவர் கூறினார்.

இந்த சட்டமூலம் மிகவும் பயங்கரமானது என்றும், இது தொடர்பில் எந்தவொரு ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

அதற்கு அமைச்சர் ஒருவரை நியமிப்பதால், பல அமைச்சுக்களை அந்த அமைச்சின் கீழ் இணைத்துக் கொள்ள முடியும் என்பதுடன், இதனூடாக அபிவிருத்தி உத்திகள் மற்றும் மீன்பிடித்துறை போன்ற சில அமைச்சர்களின் பதவிகள் பறிபோகும் நிலை உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இதனூடாக புதிய நீதிமன்றம் ஆரம்பமாவதுடன், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படும் என்று ஜீ.எல். பீரிஸ் கூறியுள்ளார்.

இதனூடாக ஊழல் மோசடிகளுக்கு அழைப்பு விடுக்கும் நடவடிக்கை இடம்பெறும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, அம்பாந்தோட்டை சம்பவத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதை கண்டிப்பதாக கூறினார்.

அத்துடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்கப் போவதில்லை என்று நிதியமைச்சர் கூறியிருந்த போதிலும், 80 வீதத்தை சீன நிறுவனத்திற்கு வழங்கியதனூடாக அதுபோன்ற செயற்பாடே இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார். (இ-10)

## தனது காணியை மீட்டுத்தரக்கோரி வயோதிபப் பெண் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

நபர் ஒருவர் அடாத்தாக பிடித்து வைத்துள்ள தனது காணியை மீட்டுத்தரக் கோரி மாற்றுத் திறனாளியான வயோதிபப் பெண் ஒருவர் நேற்றைய தினம் யாழ் சுப்பிரமணியம் பூங்காவுக்கு அருகில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.


கே.கே.எஸ் வீதியில் பெரியபுலம் மகா வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள காணி இரு பகுதியாக பிரிக்கப்பட்டு காணப்படுவதாகவும் அதில் ஒரு பகுதி மேற்குறித்த பெண்ணினுடையதும் இன்னொரு பகுதி வெளிநாட்டில் உள்ள ஒரு நபருக்கு சொந்தமானதாகவுள்ளது.

இந்த காணியின் சொந்தகாரர் வெளிநாட்டில் உள்ள காரணத்தால் பராமரிப்பதற்காக வந்த நபர் ஒருவர் போலி ஆவணத்தின் மூலம் தனதாக்கி கொண்டுள்ளார். அதனுடன் சேர்த்து குறித்த பெண் வசிக்கும் காணியையும் தனதுடைமை ஆக்குவதற்கு முயற்சித்து வந்துள்ளார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு குறித்த காணி தொடர்பில் யாழ்.மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டும் இப்போது வரை வழக்கு நிலுவையில் உள்ளது. சட்டத்தரணிகளாலும் தமக்கு எந்தவகையிலும் உதவிகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லையென்றும் இந்த நிலையில் குறித்த பெண்ணை அக் காணியில் குடியிருக்க விடாது அடாவடித்தனம் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தம்மால் எந்த பதில் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியவில்லை எனவும் தெரிவித்து தமக்கு உதவி செய்ய அரச அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் யாழ். மேல் நீதிமன்றில் முழு விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் கோரி நேற்றைய தினம் காலை 6 மணியில் இருந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்.




குறித்த விடயம் அறிந்து யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.முரளிதரன் குறித்த பெண்ணை தொடர்பு கொண்டு யாழ் மாவட்டச் செயலகத்துக்கு அழைத்து கலந்துரையாடினார். அதன் போது இது தனியார் பிரச்சினை என்றும் நீதிமன்று மூலம் இது தீர்க்கப்பட வேண்டும். உதவிகள் தேவைப்படும் இடத்து சட்ட உதவி ஆணைக்குழுவின் ஆலோசனைகளை பெற்றுத்தர முடியும் என தெரிவித்து குறித்த காணி தொடர்பான முழு விபரங்களையும் பெறுவதற்கு உத்தியோகத்தர் ஒருவரை அனுப்பியுள்ளார்.



அத்துடன் அடாத்தான வேலைகளை செய்வோருக்கு எதிராக பொலிஸாரிடம் முறைப்பாடுகளை செய்யுமாறு தெரிவித்து அவரை அனுப்பிவைத்தார்.

குறித்த பெண்ணுக்கு இரு கண்களும் தெரியாத நிலையில் அவரது மகள் அவருக்கு உதவியாக வந்து உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். (இ-ம)

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி சரஸ்வதி ஆறுமுகம்

யாழ்ப்பாண தமிழ்ச் சங்க உப தலைவர்
செஞ்சொற்செல்வர் கலாநிதி
ஆறு திருமுருகன் அவர்களின் அன்புத்
தாயார் திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
அவர்கள் அமரத்துவம்
அடைந்தமையையிட்டு
எமது கண்ணீரைக் காணிக்கை
ஆக்குகின்றோம். அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்**

(C-6693)

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி சரஸ்வதி ஆறுமுகம்

எங்கள் உயர்மதிப்புக்குரிய
செஞ்சொற்செல்வர் கலாநிதி
ஆறு திருமுருகன் (தலைவர்,
தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்)
அவர்களின் தாயார் திருமதி
சரஸ்வதி ஆறுமுகம் அவர்கள்
இறைபதம் அடைந்துவிட்டார் என்ற செய்தி
கேட்டு துயர் அடைவதோடு அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

**யூனியன் கல்லூரிச் சமூகம்,**
**தெல்லிப்பழை.**

(C-6695)

# கண்ணீர் அஞ்சலி



எங்கள் உயர்மதிப்புக்குரிய செஞ்சொற்செல்வர்
கலாநிதி திரு. ஆறுதிருமுருகன் ஐயா
(தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்)
அவர்களின் தாயாராகிய

## திருமதி
## சரஸ்வதி ஆறுமுகம்

அவர்கள் 14.12.2016 அன்று இறைபதம் அடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6937)

**இந்திய சிற்பக் கலைஞர்கள், உரும்பிராய்.**
**Jeyasunjan Construction, Urelu.**
**S.K.S Constructions, Rasavinthoddam.**

## ஆஸி - பாக் டெஸ்ட் இன்று

அவுஸ்திரேலிய - பாகிஸ்தான் ஆகிய இரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி இன்று பிரிஸ்பேனில் தொடங்குகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டியில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியாவுக்கு சென்று உள்ளது. இரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி இன்று பிரிஸ் பேனில் தொடங்குகிறது.

சமீபத்தில் அவுஸ்திரேலியா தனது சொந்த மண்ணில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்தது. இதனால் பாகிஸ்தான் டெஸ்ட் தொடரை கைப்பற்றும் கட்டாயத்தில் உள்ளது.

பாகிஸ்தான் அணி பயிற்சி ஆட்டத்தில் வெற்றி பெற்றது. இதனால் நம்பிக்கையுடன் களம் இறங்குகிறது. (க)

# கண்ணீர் அஞ்சலி



செஞ்சொற்செல்வர் கலாநிதி
ஆறு திருமுருகன் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி சரஸ்வதி ஆறுமுகம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர்
அஞ்சலியைக் காணிக்கையாக்கி
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்
பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி!

**வலம்புரி நிர்வாகம்**

# துயர் பகிர்கின்றோம்



**அமரர் ஞானமுத்து பிரான்சிஸ்கம்மா**

எமது பாடசாலை ஆசிரியரான ஞானமுத்து அன்ரன் சாள்ஸ் அவர்களின் அன்புத் தாயார் ஞானமுத்து பிரான்சிஸ்கம்மா அவர்கள் இறைபதமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்துக்கு அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம், புங்குடுதீவு மகா வித்தியாலயம்**

(C-6933)

# கண்ணீர் அஞ்சலி



(6935)

## திருமதி
## சரஸ்வதி ஆறுமுகம்

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி கேதீஸ்வரி
ஆனந்தரெட்ணம் அவர்களின்
பாசமிகு தாயார் திருமதி
சரஸ்வதி ஆறுமுகம் அவர்களின்
பிரிவுச் செய்தியை அறிந்து
ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**
**பாடசாலைச் சமூகம்**

# இதய அஞ்சலி



## திருமதி
## சரஸ்வதி
## ஆறுமுகம்

சிவபூமி அறக்கட்டளை தலைவர்
செஞ்சொற்செல்வர்
ஆறு திருமுருகன்
அவர்களின்
அருமைத்தாயார் திருமதி சரஸ்வதி
ஆறுமுகம் அவர்கள் அகவை 90இல்
அமரத்துவம் அடைந்தார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சிவபூமி குடும்பம்**

(6936)

# மின்சார சபை ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்




இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட சம்பள முரண்பாட்டை தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி இலங்கை மின்சாரசபை ஒன்றிணைந்த தொழில் சங்கங்களினால் நேற்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று யாழ்.பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபை கட்டடத் தொகுதி முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஏற்படுத்திய சம்பள முரண்பாட்டினை உடனடியாக நீக்க வேண்டும் எனவும், 1.6 விகிதாசாரத்துக்கு அனைத்து சம்பளங்களையும் உடனடியாக ஒழுங்கு செய்ய வேண்டும் எனவும், 90 வீதமான இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அநீதியினை சரிப்படுத்த வேண்டும் என்ற 3 பிரதான கோரிக்கைகளை முன்வைத்து அறிவூட்டல் மற்றும் போராட்டத்தினை நாடளாவிய ரீதியில் அனைத்து மாகாணங்களிலும் இ.மி.ச. ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. அம்பாறையில் ஆரம்பித்த இந்தப் போராட்டம் தொடர்சியாக சகல மாகாணங்களிலும் நடைபெறுகிறது.

2015 ஆம் ஆண்டு சம்பள அதிகரிப்பின் போது 2012 ஆம் ஆண்டு ஏற்பட்டது போன்றே 90 வீதமான ஊழியர்களுக்கு பாதகம் ஏற்பட்டது. குறித்த விடயம் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தும் எந்தவிதமான பதிலும் தரப்படவில்லை. வழங்க மறுத்த சம்பளத்தை தாமதித்தார்கள். பொறுத்திருந்தோம். தாமதித்தது போதும் சமருக்கு ஆயத்தமாவோம் என தெரிவித்து தொடர்போராட்டத்தின் ஒரு அங்கமாக நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக இலங்கை மின்சாரசபை ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணியின் செயலாளர் ரஞ்சன் ஜெயலத் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் சம்பள முரண்பாட்டில் ஏற்படுத்தப்பட்ட அநீதி தொடர்பில் எந்தவிதமான தீர்வும் இதுவரை எட்டப்படவில்லை. குறித்த விடயம் தொடர்பாக எமது ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் மூலம் ஏற்கனவே மின்சக்தி அமைச்சருக்கு தெரிவித்துள்ளோம். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் காரணமாக நாம் மாபெரும் போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம.

எமக்குரிய தீர்வை உடனடியாக வழங்காத பட்சத்தில் அனைத்து மின்சாரசபை ஊழியர்களையும் ஒன்றிணைத்து கொழும்பில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தின முன்பாக எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ள அப் போராட்டத்தால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். எனவே எமது பிரச்சினைகளை விரைவில் தீர்ப்பார்கள் என நம்புகிறோம். தொடர் போராட்டத்தை நாளை திருகோணமலையிலும் நாளை மறுதினம் அநுராதபுரத்திலும் முன்னெடுக்கவுள்ளோம் எனஅவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# வடமாகாண மீன்பிடி அதிகாரசபை அடுத்த வருடம் உருவாக்கப்படும்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

எமது எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி அடுத்த வருடம் வடமாகாண மீன்பிடி அதிகாரசபை உருவாக்கப்படும் என வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழில் நடைபெற்ற வடமாகாண மீன்பிடி அபிவிருத்திக்கான இணை முகாமைத்துவ செயற்பாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு பெற வேண்டும் எனில் அது மக்கள் போராட்டமாக மாறினால் தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும் அதேபோன்றே வடமாகாணத்தில் உள்ள மீன்பிடி தொடர்பான முகிய பிரச்சினைக்கு அதிகாரிகள், மீனவ சமூகம், பல்வேறு தரப்புக்கள் ஒற்றிணைந்து செயற்படவேண்டும். அது எதிர்கால செயற்பாட்டுக்கு அத்திபாரமாக அமையும்.

எமது அமைச்சினால் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறோம். இருப்பினும் அது போதுமானதாக இல்லை. எமது பண உதவிகளை பலவேறு தொழிலுக்காக பயன்படுத்தியுள்ளார்கள். நன்னீர மீன்பிடியில்ஈடுபடுபவர்கள் பலர் தற்போது ஒருநாள் வருமானமாக 5 ஆயிரம் ரூபா பெறுகிறார்கள். அவர்கள் ஏனையவர்களுக்கும் உதவி செய்கிறார்கள். அவர்களுக்கு மென்மேலும் உதவிகளை செய்து முன்னேற்ற வேண்டும்.

மாதாந்தம் நிலையான வருமானத்திற்கு உட்படுத்தும் உதவிகள் செய்ய வேண்டும். அப்போதுதான் எமது மாகாணத்தை சரியான முறையில் கட்டியெழுப்ப முடியும்.

ஆழ்கடல்மீன்பிடி மத்திய அரசுக்கு கீழ்ப்பட்டது. நன்னீர் மீன்பிடி மாகாணத்துக்கு உட்பட்டது. இந்திய மீனவர் வருகையால் ஏற்படும் கடல் வள அழிவு, தென்பகுதி மீனவர்களின ஆக்கிரமிப்பு, தடைசெய்யப்பட்ட உள்ளூர் மீன்பிடி போன்ற பிரச்சினைகள் தட்டிக்கழிக்க முடியாது. தீர்வு காண வேண்டிய அவசியம் உள்ளது.

எமது மாகாணத்தின் கடல் சார்ந்த விடயங்களை கையாள வேண்டும் என ஆலோசனை சபை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்கும் சிலரால் முட்டுக்கட்டை போடப்பட்டது. சட்டத்துக்கு முரணான தொழில் எதுவானாலும் தடை செய்ய வேண்டும். ஆனால் ஒரு சில மாகாண சபை உறுப்பினர்கள் கூட அதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருகிறார் கள் என்பது வேதனைக்குரிய விடயம். இதய சுத்தியோடு முன்வந்தால் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்க முடியும்.

2017 ஆம் ஆண்டை கடல் வள பாதுகாப்பு ஆண்டாக பிரகடனப்படுத்துவது வரவேற்கத்தக்கது. அதேபோன்று அடுத்த வருடம் மீன்பிடி அதிகார சபை உருவாக்கவுள்ளோம். அதற்கென இந்த வருட இறுதியில் நியதிச்சட்டம் உருவாக்கப்படும். இதனால் எதிர்காலத்தில் எமது சந்ததியினருக்கு நன்மையை ஏற்படுத்தி கொடுக்க முடியும்.

எம்மிடம் காணப்படும் ஒற்றுமையீனம் தீர்வுகளை எட்டாமல் இருக்க காரணமாக உள்ளது. ஒன்றுபட்டு செயற்பட அனைவரும் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

க.பொ.த(உ/த) 2018 உயிரியல்

மாதாந்தத் தொடர் பரீட்சை - நவம்பர் 2016

S.Ponthivakaran

| Index No. | Full Name | School | Marks | Rank |
|---|---|---|---|---|
| J/2082/B | சிவகரன் பிரகாஸ் | J/K.H.C | 94 | 1 |
| | விஜயதேவன் துவாரகன் | J/J.H.C | 91 | 2 |
| J/2012/B | எட்வின் ஜோய் விதுசன் | J/S.J.C | 90 | 3 |
| J/2218/B | சுப்பிரமணியம் சுபாசன் | J/J.H.C | 90 | 3 |
| J/2110/B | டுஷாரா தருமரெத்தினம் | J/C.G.C | 89 | 5 |
| Mu/2389/B | சிவராசா விநோதன் | Mu/M.C.C | 88 | 6 |
| J/2039/B | மகேந்திரராஜா ஜனகன் | J/J.H.C | 87 | 7 |
| J/2149/B | ஆதிரை மணிவண்ணன் | J/M.L.C | 87 | 7 |
| J/2081/B | நவராசா சங்கீர்த்தனன் | J/K.H.C | 85 | 9 |
| J/2057/B | கிறேசியன் ஜெனோசன் | J/S.H.C | 84 | 10 |
| J/2298/B | சுஜானா சிவயோகராசா | J/K.H.C | 84 | 10 |
| J/2334/B | பாஸ்கரன் பார்த்திபன் | J/K.H.C | 83 | 12 |
| J/2249/B | அபிவயா ஸ்ரீகரன் | J/J.H.L.C | 82 | 13 |
| J/2552/B | சிறியதாஸ் துவாரகன் | J/K.H.C | 81 | 14 |
| J/2146/B | செளயந்தி காயாரோகணன் | J/C.G.C | 80 | 15 |
| J/2053/B | ஜெயகுமார் தேஜஜன் | J/J.H.C | 79 | 16 |
| J/2053/B | ஜெயக்குமார் தேனுயன் | J/K.H.C | 79 | 16 |
| J/2143/B | அவிஸ் புளொரிடா இருதயநாதன் | J/K.H.C | 78 | 18 |
| J/2228/B | அகஸ்திகா வைத்திலிங்கம் | J/C.G.C | 78 | 18 |
| Mu/2290/B | கேதாரனி ஜெகராஜன் | Mu/P.M.V | 76 | 20 |
| J/2280/B | சங்கவி சகாயரூபன் | J/V.G.H.S | 75 | 21 |
| J/2282/B | லதாங்கி ரகுபதி | J/V.G.H.S | 75 | 21 |
| J/2579/B | சிஸ்மியா முருகவடிவேல் | J/C.G.C | 74 | 23 |
| J/2030/B | நுயாநேசன் சஞ்சீவன் | J/S.P.C | 73 | 24 |
| J/2294/B | ஸ்ரீஸ்மி வெஸ்லிபாஸ்கரதேவன் | J/V.G.H.S | 73 | 24 |
| J/2503/B | தேனுகா ஸ்ரீனிவாசன் | J/J.H.L.C | 73 | 24 |
| J/2091/B | விஜிந்திரா ரமேந்திரன் | J/L.C.M.V | 71 | 27 |
| J/2361/M | தீபிகா துரைராசசிங்கம் | J/V.G.H.S | 71 | 27 |
| J/2660/B | கம்சிகா முத்துலிங்கம் | J/V.G.H.S | 70 | 29 |
| J/2714/B | திவ்யா பிரபாகர் | J/J.H.L.C | 70 | 29 |
| J/2374/B | சங்கவி ரவீந்திரன் | J/C.G.C | 69 | 31 |
| J/2094/B | தனுராகவி கேதீஸ்வரன் | J/V.G.H.S | 68 | 32 |
| J/2153/B | ஆரணி துரைசிங்கம் | J/K.H.C | 68 | 32 |
| J/2235/B | சுஜலஷ்மி புஸ்பாகரன் | J/V.G.H.S | 68 | 32 |
| Mu/2535/B | கார்த்திகா புவனேந்திரன் | Mu/P.C.C | 68 | 32 |
| J/2328/B | கேதாரகௌரி துவராஜசிங்கம் | J/J.H.L.C | 67 | 36 |
| J/2667/B | கௌதமி பிரபாகரன் | J/R.C | 67 | 36 |
| Mu/2694/B | அக்ஷயா ஸ்ரீகுமார் | Mu/C.M.V | 67 | 36 |
| J/2467/B | பிரியந்தினி அருமைரத்தினம் | J/J.H.L.C | 66 | 39 |
| J/2679/B | பிரணவி கியூ, லோறன்ஸ் றொறன்ஸ் | J/K.H.C | 65 | 40 |
| | K.சஜிந்தன் | J/J.H.C | 65 | 40 |

NEW SCIENCE WORLD Brown Road, Jaffna.


# இராசி பலன்

15.12.2016

(கார்த்திகை 30, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு

துதியை பின்னிரவு 2.50 மணிவரை

திருவாதிரை முன்னிரவு 7.50 மணிவரை

சுபநேரம் 7.51-9.21 மணிவரை

இராகுகாலம் 1.51-3.21 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| செவ் கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கேட்டை, மூலம் | | |
| சுக் | | | ராகு |
| புத | சனி சூரி | | குரு |

**மேடம்** வம்பு வழக்குகளைக் சமாளித்து வளம் காணும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.

**இடபம்** ஆனந்தமான நாள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், நண்பர்களுடன் இணைந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம்.

**சிம்மம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசி வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள்.

**துலாம்** தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்** அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் காண வேண்டிய நாள், தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது நல்லது, பிரயாண பயமுண்டு.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், எடுத்த கருமங்களில் எளிதில் முன்னேற்றம் பெறுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை பெறுவீர்கள்.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.

# அபிவிருத்திப் பாதையை நோக்கி நாம் பயணிக்க வேண்டியுள்ளது

## பட்ஜெட் உரையில் வடக்கு முதலமைச்சர் வலியுறுத்து

நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தியையும் இலக்குகளையும் கவனத்திற்கொண்டு எமது அபிவிருத்திப் பாதையை நோக்கி நாம் பயணிக்க வேண்டியுள்ளது என வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான நான்காவது வரவு- செலவுத் திட்டத்தினை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் 69 ஆவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன் போதே அவர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எம் மக்களின் பல்வேறு இடப்பெயர்வுகள், மீள்குடியேற்றம் போன்ற சவால்களுக்கு முகம்கொடுத்துக் கொண்டே நீண்டகால இலக்குடன் கூடிய அபிவிருத்திப் பாதையை நோக்கி நாம் சென்றுகொண்டிருக்கின்றோம். வடக்கு மாகாணத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் கலை, கலாசார விழுமியங்களை உள்வாங்கி மக்களுக்கான வாழ்வாதார நடவடிக்கைகளை அதிகரிக்கச் செய்து தேசிய ரீதியில் வடமாகாணம் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வழங்கியுள்ளது. இம்மாகாணமானது 2015ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.6% ஆன பங்களிப்பினை பதிவு செய்துள்ளது. தேசிய ரீதியில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வடமாகாணத்தின் விவசாயத்துறையானது 5.8% பங்களிப்பினையும், கைத்தொழில் துறையானது 2.4% பங்களிப்பினையும், சேவைத் துறையானது 3.9% பங்களிப்பினையும் வழங்கியுள்ளன.

மாகாண ரீதியில் 2015 ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியை நோக்கும் போது வடமாகாணத்தின் விவசாயத்துறையானது 13% பங்களிப்பினையும், கைத்தொழில் துறையானது 19% பங்களிப்பினையும், சேவைத்துறையானது 68% பங்களிப்பினையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே 2017 ஆம் ஆண்டு வரவு- செலவுத்திட்டத்தினூடாக அரச, தனியார் துறைகளில் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கக்கூடிய செயற்றிட்டங்கள் மற்றும் வருமான வாய்ப்புக்களை உருவாக்கக்கூடிய துறைகளில் முதலீடுகளை ஊக்குவித்தல், மக்களின் வாழ்வாதாரத்தினை அதிகரிக்கக் கூடிய வகையிலான பெறுமதிசேர் / உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளுடாக வருமானத்தினை அதிகரிக்கச் செய்தல் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்புக்களை விருத்தி செய்தல் போன்றவற்றினூடாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு எமது மாகாணம் அதிகரித்த பங்களிப்பினை வழங்குவதற்கு ஏற்ற வகையில் அபிவிருத்திக்கான இலக்குகள் துறைசார் ரீதியாக இனங்காணப்பட்டுள்ளன.

இதேவேளையில் நாட்டின் மொத்த வேலைப்படையில் வடமாகாணம் 4.3 வீதமான பங்களிப்பினை கொண்டிருக்கின்றது. வடமாகாணத்தின் மொத்த வேலைப்படையில் 94.7 வீதமானோர் தற்போது பலவேறு துறைகளில் வேலைப்படையாக இயங்கும் அதே வேளையில் 5.3 வீதமானோர் வேலையற்றோராகக் காணப்படுகின்றனர். வடமாகாணத்தின் வறுமை நிலையினை நோக்கும் போது 2013ஆம் ஆண்டின் தரவுகளின் பிரகாரம் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் வறுமை கூடிய மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் அதாவது 28.8 வீதமான வறுமைக்குறிகாட்டியை பதிவு செய்துள்ளது. மேலும் மன்னார் மாவட்டம் 20.1 வீதமான வறுமை நிலையினையும், கிளிநொச்சி மாவட்டம் 12.7 வீதமான வறுமை நிலையினையும், யாழ்ப்பாண மாவட்டம் 8.3 வீதமான வறுமை நிலையினையும் வவுனியா மாவட்டம் 3.4 வீதமான வறுமை நிலையினையும் பதிவு செய்துள்ளன. எனவே வடமாகாணத்தின் பல்வேறு துறைகளிலும் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கக்கூடிய முதலீடுகளை உருவாக்கி வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்வதும், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கூடாக மக்களின் வருமானத்தினை அதிகரிக்கச்செய்வதும் இவ் வரவு- செலவுத் திட்டத்தினூடாக அடையப்படவேண்டிய இலக்குகளாக உள்ளன.

வடமாகாணம் தனது உள்ளக வள வாய்ப்புக்கள் ஊடாக வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல், மக்களுக்கான வருமான மட்டத்தினை அதிகரிக்கச்செய்தல், கிராமிய பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்தல், மாகாண மட்டத்தில் உணவுப்பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், சிறிய, நடுத்தர விவசாயிகள் மற்றும் முயற்சியாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தி ஊக்குவித்தல், சிறிய, நடுத்தர முயற்சியாளர்களது திறன்களை விருத்தி செய்தல், சுற்றுலா கைத்தொழிலை ஊக்குவித்தல், வறுமைத் தணிப்பு திட்டங்களை அமுலாக்குதல், போதைப்பொருட்களின் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள், சிறுநீரக நோய்த்தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், போசாக்கு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மனித வள மேம்பாட்டினை நோக்காகக்கொண்டு கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளுக்கு பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தல் போன்ற முக்கியமான விடயங்களிலும் 2017ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

அத்துடன் 70ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் பரிந்துரைகளுக்கு அமைவாக 2030ஆம் ஆண்டில் அடைய எதிர்பார்க்கப்படும் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளையும் கவனத்திற்கொண்டு எமது அபிவிருத்தி பாதையை நோக்கி நாம் பயணிக்க வேண்டியுள்ளது. வறுமை ஒழிப்பு, பசி ஒழிப்பு, நற்சுகாதாரம், தரமான கல்வி, பாலினச் சமத்துவம், தூய நீரும் துப்புரவும், மலிவான சக்தி, கண்ணியமான வேலைவாய்ப்பும் பொருளாதார மேம்பாடும், கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்புக்களை உருவாக்கல், சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், நிலையான நகரங்கள் - சமூகங்களை உருவாக்கல், பொறுப்புடைய உற்பத்தியும் நுகர்வும், காலநிலை நடவடிக்கை, நீர்வாழ் உயிரினங்களைப் பாதுகாத்தல், தரை வாழ் உயிரினங்களைப் பாதுகாத்தல், சமதானம், நீதி போன்றவற்றை மேம்படுத்தி உறுதியான சமூகங்களையும் அமைப்புக்களையும் உருவாக்கல் மற்றும் இலக்குகளை அடைய கூட்டுப் பங்காண்மையை உருவாக்கல் போன்ற 17 இலக்குகளை ஐக்கிய நாடுகள் அடுத்த 15 வருடாங்களில் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குகளாக 2015ஆம் ஆண்டில் அடையாளம் கண்டுள்ளது. இவற்றிக்கு எமது நாடும் கையெழுத்திட்டுள்ளது.

அந்த வகையில் இவ்வாறான இலக்குகளை அடைவதில் எமக்கும் எமது நாட்டு அரசாங்கத்திற்கும் கூட்டுப் பொறுப்புள்ளது. முக்கியமாக 16ஆவது இலக்கு எமக்கு மிகவும் பொருந்தும். அதாவது நிலைத்த அபிவிருத்திக்காக சமாதானத்துடன் எல்லோரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்கல் மற்றும் யாவருக்கும் நீதி கிடைக்கச் செய்தல் மேலும் தக்க உறுதியான அமைப்புக்களை சகல மட்டங்களிலும் உருவாக்கல் என்பன. இவற்றை மத்தியும் மாகாணமும் மதித்து நடந்து கொள்ள வேண்டிய கடப்பாடு எம் அனைவருக்கும் உள்ளது. எல்லோரையும் மதித்து உள்ளடக்கக் கூடிய நீதியுடனான சமூகங்களை உருவாக்க நாம் யாவரும் இணைந்தால் நாட்டில் சமாதானம் உருவாகும் என்பதில் எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது.

அடுத்து வடமாகாணத்தின் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பயனுறுதிமிக்கதாகவும், வினைத்திறனுடையதாகவும் செயற்படுத்துவதற்கு ஆளணிகள் முக்கியமானவையாவன. வடமாகாணத்திற்கு தேவைப்படும் ஆளணிகள் தொடர்பாக சேவைப் பிரமாணக்குறிப்புக்களைத் தயாரித்து மாகாண சபைக்குட்பட்ட வெற்றிடங்களை முறையே நிரப்புவது இன்றியமையாததாகும். அந்த வகையில் 2016ஆம் ஆண்டில 2005 வெற்றிடங்கள் பல்வேறு பதவி நிலைகளிலும் நிரப்பப்பட்டுள்ளன. மிகுதியாகவுள்ள வெற்றிடங்கள் சம்பந்தமாக சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் ஆட்சேர்ப்புத்திட்டத்தை தயாரித்து அவ வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு 2017 இல் நடவடிக்கை எடுக்கப்படும். இதேவேளை மத்திய அரசினது வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவையுமுள்ளது. எனவே 2017 ஆம் ஆண்டு மத்திய மாகாண அரசுகளின் கீழ் இனங்காணப்பட்டுள்ள ஆளணிப்பற்றாக் குறையை பூர்த்தி செய்வது இன்றியமையாததாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# வெல்டிங் கடை முற்றாக நாசம்







புன்னாலைக்கட்டுவன் சந்தியில் அமைந்துள்ள வெல்டிங் (கம்மாலை) கடை ஒன்றில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மின்ஒழுக்கு காரணமாக திடீரெனத் தீப் பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் சந்திப் பகுதியில் உள்ள வெல்டிங் கடையின் பின்புறத்தில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் திடீரெனத் தீ பற்றிக் கொண்டது. இதனையடுத்து அங்கு வந்த உரிமையாளர், பணியாளர்கள் மற்றும் அயலவர்களுடன் இணைந்து தீயைக் கட்டுப்படுத்த முயன்ற போதும் அது முடியாமல்போனது.

பின்னர் யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீ அணைப்பு வாகன உதவி கோரப்பட்டு சம்பவ இடத்துக்கு விரைந்த தீ அணைப்புப் பிரிவினரின் உதவியுடன் தீ முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும் கடையிலிருந்த பொருட்கள் மற்றும் கூரை வளை என்பன தீயில் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. தீ பரவியமைக்கான காரணம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (இ-9-78)

# 17 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கடந்த இரு மாதங்களில் புனரமைப்பு

தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 14 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள 17 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கடந்த இருமாதங்களில் புனரமைப்புச் செய்யப்பட்டு புதிய நிர்வாகங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக குறித்த பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு, பெருங்காடு, நயினாதீவு, மண்டைதீவு ஆகிய இடங்களிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களே இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளன.

சரவணை, வேலணை, மண்கும்பான் மற்றும் அல்லைப்பிட்டி ஆகிய இடங்களைச்சேர்ந்த மிகுதி 16 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் எதிர்வரும் ஆண்டில் புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாகங்களும் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சமூகசேவையில் ஆர்வமுள்ள படித்தவர்கள் இவ்வாறான நிர்வாகத்தெரிவுக் கூட்டங்களில் பங்குபற்றி நிர்வாகப்பதவிகளில் இருந்தாலே பிரதேச அபிவிருத்தி தொடர்பான விடயங்களை கையாளமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## தவறிவிட்டது

கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட கைலாசப்பிள்ளை சற்குணலிங்கம் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் கொக்குவில் சந்திக்கு அண்மையில் தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

☏ தொடர்புகளுக்கு:-077 927 3249

# தெற்காசியாவில் மருந்து தயாரிப்புத் துறையாக இலங்கையைத் தரமுயர்த்துவதே அரசின் திட்டம்

## அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவிப்பு

தெற்காசியாவில் மருந்து தயாரிப்புத் துறையாக இலங்கையை தரமுயர்த்துவதே அரசாங்கத்தின் திட்டம் என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் புதிய மருந்துக் கொள்கையின் கீழ் அரச ஔடத கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மருந்து தயாரிப்பதற்காக 22 நிறுவனங்கள் கைச்சாத்திட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டளவில் நாட்டிற்குத் தேவையான மருந்து வகைகளை உள்ளூரிலேயே தயாரிப்பது இதன் நோக்கமாகும். இந்த வேலைத்திட்டத்திற்கு அமைவாக எட்டப்பட்ட உடன்படிக்கையின் கீழ் மருந்து தயாரிப்பு தொழிற்றுறையில ஈடுபட்டுள்ள தொழிற்சாலையை அமைச்சர் அண்மையில் பார்வையிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், 2018 ஆம் ஆண்டளவில் 10 தொழிற்சாலைகள் இந்நாட்டில் மருந்து தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமென்று தெரிவித்தார். 48 அத்தியாவசிய மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப்பட்டதனால் 6 மில்லியன் ரூபா சந்தை வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு முடிந்துள்ளது. மருந்து வகைகளை உள்ளூரில் தயாரிப்பதன் மூலம் பெருந்தொகைப் பணத்தை சேமிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

மருந்து ஊசி மற்றும் 10 அத்தியாவசிய மருந்து வகைகள் இந்த தொழிற்சாலைகளில் தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன. ஹொறண மில்லாவ மற்றும் கல்கஹவெல ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் தயாரிப்பு நடவடிக்கைகள் அடுத்த வருடம் மே மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மேலும் அமைச்சர் தெரிவித்தார். (இ-10)


## வேலையாட்கள் தேவை

டயானா பிளாஸ்ரிக் தொழில் நிறுவனத்துக்கு பிளாஸ்ரிக் ஒட்டு வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புவர்களும் தேவை.

முகவரி:-டயானா பிளாஸ்ரிக்
மீள்சுழற்சி
இல.108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-021 222 8680
077 592 5088
(6681)


# மகிந்தவை தலைவராக்கும் வழக்கு நேற்று ஒத்திவைப்பு

ஸ்ரீலங்கா சுதந்திர கட் சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நியமிக்குமாறு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயற்குழு உறுப்பினரான அருன பிரியசாந்த மற்றும் அசங்க சிறிநாத் ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கோ அல்லது விசாரணை செய்வதற்கோ எவ்வித சட்டத் தேவையும் இல்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்க தனது சட்டத்தரணியூடாக நீதிமன்றுக்கு தெரிவித்தார்.

விடயங்களை ஆராய்ந்த நீதிபதி சனத் ஜே மொரவக்க, வழக்கை பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (இ-10)


# பாராட்டி வாழ்த்துகின்றேன்

பொறியியற் பட்டதாரியும் அரசியற் கைதியுமான சிவலிங்கம் ஆரூரன் எழுதிய 'யாழிசை' என்னும் நாவல் 08.09.2016 இல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து அரச இலக்கிய விருதையும் (சாகித்திய விருது)

மற்றும்

கொழும்பு தமிழ் இலக்கிய நிறுவகமும் லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து நடத்திய 2016 ஆம் ஆண்டிற்கான இரா. உதயணன் இலக்கிய விருதையும் பெற்றுள்ளது.

அன்பு அண்ணாவே!

நீங்கள் விடுதலையாகி இன்னும் பல நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் படைக்க எமது அப்பாவின் 70 ஆவது (15.12.2016) பிறந்த நாளான இன்று உங்களை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

நிலாவில் அல்வாய் வடமேற்கு,
அல்வாய்.
தொ.பே.0778581024

உங்கள் அன்புத் தம்பி
சிவலிங்கம் செந்தூரன்.B.Sc(Jaf)
(கனடா)

(6923)


## ஜனாதிபதிக்கு விசேட விருது

(கொழும்பு)

சிறுநீரகநோயைக் கட்டுப்படுத்துவதற்காக வழங்கியுள்ள பங்களிப்பை மதித்து ஜனாதிபதிக்கு விருது வழங்குவதாக சிறுநீரக நோய் தடுப்பு ஜனாதிபதி செயலணி அறிவித்துள்ளது.

சர்வதேச அமைப்பொன்றினூடாக ஜனாதிபதிக்கு இந்த விருதை வழங்க இருப்பதாக அந்த வேலைத திட்டத்தின் பணிப்பாளர் அசேல தெரிவித்தார்.

இதேவேளை பௌத்த தர்மத்தின் தத்துவங்கள் நடைமுறை வாழ்க்கையில் அமைய வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்

அதுவே சமூகத்தில் உள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என்றும் ஜனாதிபதி கூறினார.

நெல்லிகல சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார் (இ-10)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் நாளை மறுதினம் 17 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரை இரத்த தான முகாம் இடம் பெறும். (இ-3)

## அறிவித்தல்

இனியவாழ்வு இல்லம்
தேவிபுரம் "அ" பகுதி புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு
Regd. At NCPD No: MSEW/NSPD/2/10/R-202
Regd.At Div.Sec.No:-MU/PKI/DS/VSSO/02

நிறைவேற்றுச் செயலணி தெரிவு

இனியவாழ்வு இல்லம் கட்புலன், செவிப்புலன் பேச்சுத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் பதிவு பெற்ற ஒரு தொண்டு நிறுவனம் ஆகும்.

2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் கீழ் குறிப்பிடப்படுவோர் காப்பாளர் சபை உறுப்பினர்களாக ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்கள்.

திருமதி. ரூபவதி-கேதீஸ்வரன
-மாவட்டச்செயலர், முல்லைத்தீவு
திரு.என். வேதநாயகன்
-மாவட்டச் செயலர், யாழ்ப்பாணம்
திரு.எம். பிரதீபன
-பிரதேச செயலர், புதுக்குடியிருப்பு
திரு.எஸ். ஜெயக்காந்த
பிரதேசசெயலர், நெடுந்தீவு
திரு. வீ. சுப்பிரமணியம்
ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்
திருமதி.ஜீ. நவநீதன
சமூகசேவை உத்தியோகத்தர், புதுக்குடியிருப்பு
திரு. வீ. கைலாசபிள்ளை
தலைவர், மனிதநேயம்

அத்துடன் நிறைவேற்றுச் செயலணி உறுப்பினர்களாக கீழ் வருவோர் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்:- திரு.எஸ்.நாகரட்ணம்
ஓய்வுநிலை வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
உப தலைவா :-திரு.எஸ்.றூபராஜா
தலைவர், வன்னி விழிப்புலனற்றோர் சங்கம்
செயலாளா :- திரு.என். தசரதராஜகுமாரன்
முல்லைமாவட்டசமூகசேவைஉத்தியோகத்தர்
உபசெயலாளா :-திரு.என். கிரியாகரன்
முகாமையாளர், சணச காப்புறுதி நிறுவனம்
பொருளாளர் :- திரு.எம்.ஜே. றெஜினோல்ட்.
பிரதம கணக்காளர், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு.

ஏனைய நிறைவேற்று செயலணி உறுப்பினர்கள்

திரு. பீ. பேரின்பநாயகம்
ஓய்வுநிலை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்
திரு. கே. இராஜேந்திரம--ஓய்வுநிலை அதிபர்
திரு. வீ. கோணேஸ்வரன -முகாமைத்துவ உதவியாளர்
திருமதி. கண்மணி கிறிஸ்ரியன
ஆசிரியர்-உடையார்கட்டு ம.வி.
திரு.எஸ். பிரதீபன் யாழ்.பல்கலைகழக மாணவன்
திரு. ஏ. ஞானேஸ்வரன்
அதிபர், தேராவில் அ.த.க.பாடசாலை

மேலும் இல்ல நிர்வாக நிறைவேற்று முகாமையாளராக
திரு.எஸ். திருச்செல்வம்
(ஓய்வுநிலை சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி)
அவர்கள் பணியாற்றி வருகின்றார்.தொ.பே.இல:-077 775 2566
Tel: 021 320 0333 , 021 206 1949
E.mail:iniyavazhvu@yahoo.com
Bank:BOC:72966208
தகவல்: கௌரவ செயலாளர்
திரு.என். தசரதராஜகுமாரன்


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 22செவ் 8இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: B/6601

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சித்திரை
தகைமை/தொழில்:QS
லண்டன் PR
தொ.இ: B/6602

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 11சூரிசெவ் 10 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/6607

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 13செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BScQSடுபாய்
தொ.இ: B/6609

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1978RC
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/6605

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 24
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6613

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: G/6619

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 30சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:BA
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6622

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# அதிகரிக்கும் வீதி விபத்துக்களைக் குறைக்க வீதி சமிக்ஞை விளக்குகளை பொருத்துக

## மத்திய நெடுஞ்சாலை அமைச்சரிடம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கோரிக்கை

வவுனியா நகரில் வீதி சமிக்ஞை விளக்குகளை பொருத்துமாறு மத்திய நெடுஞ்சாலை அமைச்சரிடம் வடக்கு சுகாதார அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை குறைக்க வவுனியா நகரப்பகுதியின் பிரதான வீதிகளில் வீதி சமிக்ஞை விளக்குகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய நெடுஞ்சாலை உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வவுனியா நகரம் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பிரதான நகரமாகும். வடக்கிற்கான நுழைவு வாயிலாக காணப்படும் இந்த நகரினூடாக நாளாந்தம் பெருமளவிலான வாகனங்கள் பயணிக்கின்றன. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக முக்கிய சந்திகளில் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன.

இதனை கருத்தில் கொண்டு வவுனியா நகரில் காணப்படும் முக்கிய சந்திகளான மணிக்கூட்டுக்கோபுரச் சந்தி, வைத்தியசாலை சுற்றுவட்டம் மற்றும் கச்சேரி சுற்றுவட்டம் என்பவற்றில் வீதிப் போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கில் வீதி சமிக்ஞை விளக்குகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2-250)




# கனரக வாகனம் மோதி யானைக்குட்டி காயம்

## மாங்குளம் பகுதியில் சம்பவம்



(பரந்தன்)

மாங்குளம் கிழவன்குளம் பகுதியில் கனரக வாகனம் ஒன்று மோதியதில் யானைக் குட்டியொன்று காயம் அடைந்துள்ளது.


இச் சம்பவம் நேற்று அதிகாலை நடைபெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த ஆறு தொடக்கம் ஏழு மாதம் ஆன யானைக் குட்டியை கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள வன ஜீவராசிகள் மருத்துவப்பிரிவின் அலுவலகத்திற்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த யானைக்குட்டியின் இடுப்புப்பகுதி விபத்தில் உடைந்துள்ளதாக வனஜீவராசிகள் மருத்துவப் பிரிவு வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-312)

# இந்திய கலைஞர்களுடன் வவு.கலைஞர்கள் சந்திப்பு

(குருமன்காடு)



இந்திய கலைஞர்களுக்கும் வவுனியா மாவட்ட கலைஞர்களுக்குமிடையில் நேற்று வவுனியாவில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய கலைஞர்கள் வடக்கு நோக்கிய பயணத்தின் ஓர் கட்டமாக வவுனியாவிற்கு நேற்று நண்பகல் 12 மணியளவில் சென்றிருந்தனர்.

இதன்போது வவுனியா மாவட்ட கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் அனுசரணையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் கலைஞர்கள் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் இந்தியாவை சேர்ந்த இஸ்லாமிய கலைஞர்கள் அதிகளவில் பங்கேற்றிருந்தனர். இதன்போது இலங்கைக்கும் இந்தியாவிற்குமான கலை ரீதியான தொடர்புகள் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்தன.

இந் நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், கொழும்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் பாஸ்கரா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# கிளிநொச்சி சர்வதேச விளையாட்டு மைதானப் பணிகள் மந்த கதியில்

கிளிநொச்சி நகரப் பகுதியில் கடந்த 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானப் பணிகள் இன்று வரைக்கும் பூர்த்தி செய்யப்படவில்லை என கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய அரசினால் 220 மில்லியன் ரூபாவில் அமைக்க திட்டமிட்ட சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானப் பணிகள் மந்த கதியில் இடம்பெறுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்ட போது, விளையாட்டு மைதான ஆரம்பப் பணிகள் இடம்பெறும்போது இரண்டு ஆண்டுத் திட்டமாகவே, திட்டமிடப்பட்டபோதும் சில தடங்கல்கள் காரணமாக காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த மைதானத்திலேயே 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதன் பணிகள் முடிவுறாதமையினால் அவை கைகூடவில்லை.

இம் மைதானம் 2017 ஆம் ஆண்டு முழுமையாக பூர்த்தி செய்ய முயற்சிக்கப்படும். என மாவட்ட அரசாங்க அதிபர் கூறியுள்ளார்.

மேலும் திட்டத்தின்படி 2016 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மேற்படி திட்டம் நிறைவு பெற்றிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (2-312)

# சிறையில் இருந்து தப்பியோடி தலைமறைவாகிய கைதி கைதானார்

## தர்மபுரம் கல்லாறு கிராமத்தில் சம்பவம்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தினால் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டு சிறையில் இருந்து ஒரு வருடத்திற்கு முன்னர் தப்பி ஓடி தலைமறைவாகியிருந்த கைதி ஒருவர், தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய தருமபுரம் கல்லாறு கிராமத்தில் தலைமறைவாகியிருந்த நிலையில்தருமபுரம்பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி எம்.எம்.என்.டீ.சதுரங்க தலைமையில் சென்ற பொலிஸ் அணியினர் கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இக் கைது நடவடிக்கை கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்லாறு கிராமத்தில் வசித்த மேற்கூறப்பட்ட சந்தேக நபர் கசிப்புக் காய்ச்சியது உட்பட பல குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் தப்பி ஓடியுள்ளார்.

கைதான நபரை நீதிமன்றத்தில் முற்படுத்திய போது விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளதுடன் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (2-15)

# தாராபுரம் அரசினர் வைத்தியசாலைக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் தளபாடங்கள்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள தாராபுரம் அரச வைத்தியசாலைக்கு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தனது வடக்கு மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒரு தொகுதி தளபாடங்கள் வழங்கி வைத்துள்ளார்.

இந் நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை நடைபெற்றுள்ளது.

பொருட்களை வைத்தியர் அன்ரன் சிசிலிடம் வடமாகாண சபை உறுப்பினரும் பிரதம எதிர்க்கட்சி கொறடாவுமான றிப்கான் பதியுதீன் வழங்கி வைத்துள்ளார்.

இதன்போது வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர். (2-15)

# மாற்றுவலுவுள்ளோர் கௌரவிப்பு கிளிநொச்சியில் இன்று நடைபெறும்

(பரந்தன்)

கிளிநொச்சியில் மாற்றுவலுவுள்ளோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கம் அறிவித்துள்ளது.

இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி டிப்போச் சந்தியிலிருந்து ஊர்வலமாக கூட்டுறவாளர் மண்டபத்தை சென்றடைந்து அங்கு மாற்றுவலுவுள்ளோர் கௌரவிப்பும் மற்றும் ஏனைய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. எனவே இதில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மாற்றுவலுவுள்ளோர்களையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (2-312)

# 108 சிறார்களுக்கு புத்தாடைகள்

(மல்லாவி)

புலம்பெயர் உறவான லண்டன் வாழ் அன்பர் ஒருவரின் பிறந்த நாளை முன்னிட்டு முள்ளியவளையில் உள்ள பாரதி பெண்கள் சிறுவர் இல்லத்தில் உள்ள 108 சிறார்களுக்கு புத்தாடைகள் தைப்பதற்காக துணிகள் மற்றும் சொக்லேட் என்பவற்றை வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினூடாக வழங்கி வைத்துள்ளார். (2-15)

## வன்னிவிளாங்குளம் காட்டுப்பகுதியில்

# சட்டவிரோத மரம் அரிவுதளம் சுற்றிவளைப்பு

# பாலைமரக் குற்றிகள், தீராந்திகள் சிக்கின

### மாங்குளம் பொலிஸார் அதிரடி



முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட மாங்குளம் பொலிஸ் நிலையப்பிரிவில் உளள வன்னிவிளாங்குளம் காட்டுப்பகுதிக்குள் சட்டவிரோதமாக இயங்கிய மரம் அரிவு செய்யும் தளம் ஒன்று சுற்றிவளைக்கப்படடு சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறு மதியான பாலைமரக் குற்றிகள், அரிவு செய்யப்பட்ட தீராந்திகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக மாங குளம் பொலிஸ் நிலையத் தகவ லில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மாங்குளம்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரேரோவின் உத்தரவுக்கமைய மாங்குளம் பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் பிரியதர்சனா மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் அ.சியாளன் ஆகியோர தலைமையில் பொலிஸ கொஸ்தபல்களான வசந்த (13816), ரட்ணயக்கா( 48 040), மில்ரோய் (88695) ஞானவர்த்தனா(41696), ஆகியோரடங்கிய பொலிஸ் குழுவின் அதிரடி நடவடிக்கையினால் சட்டவிரோதமாக இயங்கிய மரம் அரிவுதளம் நிர்மூலமாக்கப்படடுள்ளது.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ள சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாகவும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)

## புதிதாக நியமனம் பெற்ற முல்லை.கல்விப்பணிப்பாளர்

### கடமைகளை பொறுப்பேற்றார்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளராக திருமதி உமாநிதி புவனராசா நியமிக்கப்பட்டு நேற்றைய தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் கிளிநொச்சி வலய ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோ சகராகவும் பிரதிக் கல்விப்பணிப்பாளராக 19 வருட அர்ப்பணிப்பு சேவையை செய்துள்ளார். முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப் பாளராக பணியாற்றிய திருமதி உதயராணி முனீஸ்வரன் கடந்த 13-11-2016 அன்று ஓய்வு நிலை பெற்றதை அடுத்து இவருக்கான நியமனம் வழங் கப்பட்மை குறிப்பிடத்தக்கது. (2)

## சர்வதேச மனித உரிமைகள் தினம்

# கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்பட்டது

(மல்லாவி)



கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் பிரஜைகள் குழுவின் தலைவர் சி.சின்னராசா தலைமையில் சர்வதேச மனிதவுரிமைகள் தின நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது பொதுச் சுடரை யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஏற்றி வைத்துள்ளார்.

அடுத்து மனிதவுரிமைசெயற்பாட்டாளர்களான மறைந்த வணபிதா கருணாரட்ணம் மற்றும் மறைந்த ஆசிரியர் ஆனந்தராசா ஆகியோருடைய திருவுருப்படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றப்பட்டுள்ளது.

அடுத்த மறைந்த மனித வுரிமை செயற்பாட்டாளரான ஆசிரியர் ஆனந்தராசா ஞாபகார்த்த நினைவுப் பேருரையை கமநலசேவை உத்தியோகத்தர் நடராசா சுந்தரமூர்த்தி நிகழ்த்தியுள்ளார்.

இந் நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நீதி சமாதான ஆணைக்குழு தலைவரும் யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட வண. பிதா எஸ் வி.மங்களராஜா நல்லிணக்கத்திற்கான சவால்களும் தடைகளும் எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

மேலும் இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம்சிறிதரன், அருட்தந்தைகளான ஜெயபரட்டணம் நிக்சன் மற்றும் மனிதவுரிமை ஆர்வலர்கள், சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள்எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# மக்களின் கோரிக்கைக்கு செவிமடுக்காது

# முழுவீதியும் ஒரே தடவையில் புனரமைப்பு

### பயணத்துக்கு மாற்றுப்பாதை இல்லாத நிலையிலேயே செயற்பாடு முன்னெடுப்பு

(பனிக்கன்குளம்)



முள்ளியவளையிலிருந்து பொன்னகர் கிராமத்துக்கு செல்லும் பிரதான வீதி புனரமைப்பு பணி காரணமாக தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி புனரமைப்பு பணி ஆரம்பிக்கும் போது வீதியின் அரைவாசியை முதலில் செய்து மற்றைய பகு தியை பிறகு செய்யுமாறும் அதிகாரிகளையும் ஒப்பந்தகாரரையும் கோரியும் மக்களின் கோரிக்கையை செவிசாய்க்காது முழு வீதியையும் ஒரேதரமாக செய்வதால் போக் குவரத்து செய்ய முடியாது தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவக்கின்றனர்.

தமது பயணத்துக்கு மாற்றுப்பாதை இல்லாத நிலைமையில் இந்த செயற்பாடு காரணமாக தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பாக இங்கு காணப்படும் 50 வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்தலைமைத்துவ குடும்பங்கள் ஆகியோர் மிகவும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இந்த 50 வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட ஒருவர் ஆட்டோ ஓடியே தனது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதாகவும் இவர்களின் இந்த வீதித் திருத்த பணி காரணமாக இன்றுவரை ஆட்டோவை கொண்டு செல்லமுடியாது வீட்டிலிருப்பதாகவும் இவ்வாறு இருப்பின் எவ்வாறு தனது வாழ்வாதாரத்தை கொண்டுசெல்வது எனவும் மிகவும் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

எனவே இந்நிலைமைகளை கருத்தில் கொண்டு அபிவிருத்தி எமக்கு எதிரானதாக இருக்காது ஒருகரையை முதலில் செய்து பின்னர் மறுகரையை செய்யுமாறும் எமது அன்றாட வாழ்வை கருத்தில் கொண்டு செயற்படுமாறும் உடனடியாக எமக்கு இதற்கான தீர்வை பெற்றுத்தருமாறும் உரிய அதிகாரிகளை கோருகின்றனர் பாதிக்கப்பட்டவர்கள். (2-281)




## இளைஞர் பாராளுமன்ற தேர்தல்

# முல்லையில் ஒருவரை தெரிவு செய்ய

# 27 பேர் களத்தில் வேட்பாளராக குதிப்பு

### 4 ஆயிரத்து 276 பேர் வாக்களிக்கத்தகுதி

(பனிக்கன்குளம்)

தேசிய கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால 2017 ஆம் ஆண்டுக்கான இளைஞர் பாராளுமன்ற வேலைத் திட்டத்தை தேசிய மட்டத்திலே நடத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

இத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இடம்பெறுவதோடு இத்தேர்தலானது முல்லைத்தீவு மாவட்டம் தழுவிய ரீதியிலும் எட்டு வாக்குச்சாவடிகளில் இடம்பெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் திருமதி. கே.சரோஜா தெரிவித்துள்ளார்.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் 28 பேர் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் ஒருவர் நீக்கப்பட்டுள்ளார். இதனடிப்படையில் தற்போது 27 வேட்பாளர்கள் போட்டியிட தகுதி பெற்றுள்ளதாகவும் இவர்களிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கென ஒரு பிரதிநிதி தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் மாவட்ட ரீதியில் எட்டு வாக்குசாவடிகள் அமைக்கப்படவுள்ளதாகவும் இந்த வாக்குச்சாவடிகளில் மொத்தமாக 4 ஆயிரத்து 276 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாகவும் தெரிவித்த அவர்,

2016 டிசெம்பர் 02ஆம் திகதி தொடக்கம் 2016 டிசெம்பர் 16ஆம் திகதி நள்ளிரவு வரை தேர்தல் பிரசாரம் நடத்த முடியும். வாக்கெண்ணும் செயற்பாடுகள் 2016 டிசெம்பர் 18ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

இதனடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் அமைக்கப்படவுள்ள வாக்குச்சாவடியில் 711 பேர் வாக்களிக்கவுள்ளதாகவும் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் கலைமகள் வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள வாக்குச்சாவடியில் 666 பேர் வாக்களிக்கவுள்ளதாகவும் துணுக்காய் பிரதேச செயலகத்தில் அமைக்கப்படவுள்ள வாக்குச்சாவடியில் 593 பேர் வாக்களிக்கவுள்ளதாகவும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் மாங்குளம் கிராம அலுவலகத்தில் அமைக்கப்படவுள்ள வாக்குச்சாவடியில் 380 பேர் வாக்களிக்கவுள்ளதாகவும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டவுள்ள வாக்குச் சாவடியில் 579 பேர் வாக்களிக்கவுள்ளதாகவும் மாந்தைகிழக்கு பிரதேச செயலகத்தில் அமைக்கப்படவுள்ள வாக்குச்சாவடியில் 474 பேர் வாக்களிக்கவுள்ளதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் அமைக்கப்படவுள்ள வாக்குச்சாவடியில் 665 பேர் வாக்களிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-281)

# தையற்கலை கண்காட்சியும் பரிசளிப்பும்




வவுனியா மாவட்டத்தில் அற்புத கரிசனை இல்லத்தின் ஏற்பாட்டில் தையற்கலை கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை காலை முதல் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இதன் போது கரிசனை இல்லத்தின் நிதியுதவியுடன் பயிற்சிகளை நிறைவுசெய்த 53 மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆடைகள், மற்றும் கைவினைப்பொருட்கள் என்பன காட்சிக்கு வைக் கப்பட்டிருந்தன. அத்துடன் பயிற்சியினை நிறைவு செய்த மாணவிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த கண்காட்சியில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஆர்வலர்கள் உட்பட பலரும் கலந்து கண்டுள்ளனர். (2-15)

# வரிகுறைகேள் அலுவலகம் மற்றும் தேசிய வரிமன்றம் ஸ்தாபிக்கப்படும்



(தொடர்ச்சி)

**ஏனைய கட்டணங்களும் அளவீடுகளும்**

484.நீதிமன்ற கட்டணங்கள்/வழக்குத் தாக்கல் செய்வதற்கான கட்டணங்கள் காரணமாக அதிக எண்ணிக்கையான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமல் நீதமன்றங்களில் தேங்கிக் கிடப்பதானது ஒட்டுமொத்த நீதிமன்ற முறைமைக்கும் சவாலாக அமைகின்றது. விசாரணைக்கு எடுத்துக் கொள்வதில் தாமதத்தை ஏற்படுத்துவதனால் நீதியினை பெறுவதில் தாமதங்களும் ஏற்படுவதனால் அத்துடன் அவை அரசாங்கத்திற்கு பலத்த சுமையினையும் ஏற்படுத்துகின்றது. ஆதலால், ஏதேனும் நீதிமன்றம் ஒன்றில் ஒருவர் வழக்குத் தொடரும் போது அதற்காக வழக்குத் தொடர் கட்டணம் ஒன்றினை அறவிடுவதற்கும் நான் முனமொழிகின்றேன்.

485. போக்குவரத்து சட்டதிட்டங்களை மீறுவோர் மீது அறவிடப்பட்ட தண்டப்பணங்களை அதிகரித்தல், வீதி விபத்துக்கள் காரணமாக நாளாந்தம் பலர் உயிரிழக்கின்றனர். போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறுவதுதான் விபத்துக்களுக்கு காரணம் என கண்டறியப்பட்டுள்ளது. ஆதலால், போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறுவோர் மீது ஆகக் குறைந்தது தண்டப்பணம் என்ற வகையில் ரூபா 2000வரை அதிகரிப்பதறகும் நான் முன்மொழிகிறேன்.

486.நீதவான் நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கிக் கிடப்பதனைத் தீர்க்கும் வகையில், தற்போது நீதிமன்றங்களினால் மாத்திரம் அறவிடப்படுகின்ற தண்டப் பணங்களை சம்பவ இடத்திலேயே அறவிடுவதற்கும் இயலுமாக்கும் வகையில் மோட்டார் வாகனப் போக்குவரத்து சட்ட திட்டங்களை திருத்தியமைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். மோட்டார் வாகன சாரதியின் தண்டப் பணங்களை கைத்தொலைபேசி மூலம் செலுத்துவதற்கான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

487.விசாக் கட்டணங்கள் திருததப்படும்.

**தொலைக்காட்சி நாடக வரி**

488.நாட்டினுள் கொண்டு வரப்படுகின்ற மீள் ஒலி/ ஒளிப்பதிவு கொள்ளப்பட்டு நாடகங்கள் மூலம் உள்நாட்டு நாடகக் கைத்தொழில் மீது ஏற்படுத்திய தாக்கம் கருத்திற் கொள்ளப்பட்டு சிங்களம்,தமிழில் அல்லது வேறொரு மொழியில் ஒலி/ஒளிப்பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாடகங்களுக்காக ஏற்புடையதான தொலைக்காட்சி நாடக அறவீடு அதிகரிக்கப்படுகிறது.

**பீடி இலை இறக்குமதி உரிமப் பத்திரம்**

489.பீடி இலைகளை இறக்குமதி செய்வதற்கான ஆண்டொன்றுக்கு ரூபா. 5 மில்லியன் உரிமக் கட்டணம் ஒன்றினை செலுத்தி உரிமப் பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

**இறக்குமதி உரிமக கட்டணம்**

490.தங்கம், உராய்வு நீக்கிகள் மற்றும் பிட்மனட் கார் வகைகளை இறக்குமதி செய்வதற்காக இறக்குமதி உரிமப் பத்திரம் வழங்கப்படுகிறது.

**சுடுகலன்கள் மீதான வருடாந்த உரிமக் கட்டணம்**

491.சுடுகலன்கள் மீது வருடாந்த உரிமக் கட்டணமாக ரூபா 20,000 அறவிடப்படும். விவசாய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் சுடுகலன்கள் இவ்வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. எவரேனும் நபரொருவர் சுடுகலன் அனுமதிப் பத்திரத்தினை பெறாமல் அல்லது அதனைப் புதுப்பிக்காமல் வைத்திருப்பாராயின், அந்நபர் மீது ரூபா 5 மில்லியனை அபராதமாக செலுத்துதல் வேண்டும்.

**புத்தகம் இறக்குமதி மீதான வரி**

492.அப்பியாசக் கொப்பிகள் தவிர்ந்த ஏனைய புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் நாளேடுகள் என்பவற்றின் மீது து.வி.சு.அ, தே.க.வ மற்றும் பெறுமதிசேர் வரி என்பவற்றிலிருந்து விலக்களிப்புச் செய்யப்படுகின்றது.

493.உராய்வு நீக்கி வர்த்தகங்களின் உராய்வு நீக்கி உடன்படிக்கைகளின் மீது செலுத்த வேண்டிய அரையாண்டு பதிவுக் கட்டணம் ரூபா 2.5 மில்லியன் அல்லது மொத்த விற்பனைப் பற்றுச் சீட்டுப் பெறுமதியில் 0.75 சதவீதத்தில் எது கூடியதோ என்றவாறு 2017 ஜன வரி அமுலுக்கு வரும் வகையில் மீள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**வரி நிர்வாகம் மீதான மறுசீரமைப்புக்கள் உள்நாட்டு இறை வரித் திணைக்களம்**

494.உள்நாட்டு இறைவரித் திணைக்களச் சட்டத்தின் மீள் வரைவுச் செயற்பாடானது பூரணப்படுத்தப்படுவதோடு, இணக்கப்பாடு மற்றும் வரி அடிப்படைகளை அதில் ஒருங்கிணைக்கப்படுகிறது. வரி தவிர்ப்பு மற்றும் வரி தொடர்பான சட்ட திட்டங்களை மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும். மேலும், வரி தொடர்பான கையேடு ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

# பட்ஜெட் - 2017

நல்லாட்சி அரசாங்கத்தின் இரணடாவது வரவு - செலவுத் திட்டம் அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...

495. இலத்திரனியல் வர்த்தகமானது பல்வகை அதிகார எல்லைகளுள் பல கொடுக்கல்- வாங்கல்களை நிகழ்த்தி வரி நிர்வாகத்திற்கும் பிரதான சவாலாக அமைந்துள்ளது. இதனால் கொடுக்கல் -வாங்கல மீது வரி விதிப்பனவு செய்யப்படுவதற்கான முறைமை ஒன்றும் உருவாக்கப்படவேண்டியுள்ளது.

496.வரி அதிகாரங்கள் வரி செலுத்துவோரை நெருங்கும் வகையில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள நிர்வாகம் பன்முகப்படுத்தப் படவுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களஅதிகாரிகளை தேர்தல் தொகுதி வாரியாக நியமிப்பதன் மூலம் வரி, கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் என்பவற்றினை திரட்டும் செயற்பாடானது உறுதிசெய்யப்படும். மேலும், வருமான கண்காணிப்பு பிரிவும் பொது திறைசேரியில் ஸ்தாபிக்கப்படும்.

497. சபாநாயகர் அவர்களே, உள்ளூர் மட்டத்தில் முறையாக திரட்டப்படாத கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் என்பன அதிகமாகக் காணப்படுகின்றன. ஆதலால் இத்தகைய வருமானங்கள் ஏற்கனவே பிரதேச செயலகங்களில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளினால் திரட்டப்படல் வேண்டுமென நான் முன்மொழிகின்றேன்.

498.RAMISகருத்திட்டம் பூரணமாக செயற்படுத்தப்படும் என்பதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்கள உத்தியோகத்தர்களது தலையீடின்றி மெய்நிகர் (Virtual Office) அலுவலகம் ஸ்தாபிக்கப்படும்.

499.மதிப்பீடுகள், மேன்முறையீடுகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் என்பவற்றிற்கான காலச் சட்டகம் குறைக்கப்பட்டு வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படுவதன் மூலமும், அங்கத்தவர்களை அதிகரிப்பதன் மூலமும் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினை பலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

500. 2002 ஆம் ஆண்டில் சட்டமாக்கப்பட்ட பெறுமதிசேர் வரி சட்டமானது கடந்த வருடாங்களில் இற்றைப்படுத்தப்படாமை காரணமாக பாவனையாளர்கள் அதனை விளங்குவதில் பல சிக்கல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆதலால், பெறுமதிசேர் வரிச் சட்டம் மீதான திருத்தங்களை கூட்டிணைத்து இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

501.சேர் பெறுமதி வரி மீளளிப்பு நடைமுறையினால் ஏற்படுகின்ற தாமதங்களை குறைக்கும் வகையில், வங்கி உத்தரவாதம் கிடைக்கப்பெற்றவுடன், அவற்றினை மீள செலுத்துவது தொடர்பில் ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

502.சேர் பெறுமதிக்காக பதிவு செய்யப்பட்ட நபர்களினால் விற்பனைப் புள்ளியில் பயன்படுத்தப்படும் வகையில் Smart e invoice உபகரணங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் சேர் பெறுமதி வரியினைத் திரட்டும் செயற்பாடானது இலகுவானதாகவும், செயற்றிறன் மிக்கனவாகவும் அமையும். இம்முறையானது மது வரித் திணைக்களத்திற்கும் விரிவுபடுத்தப்படும்.

503.வழக்காடலைத் தவிர்க்கும் வரி முறைமைகள் மீது வரி செலுத்துவோர்களது மனக் குறைகளைத் தவிர்த்து வைப்பதற்காக பாராளுமன்றச் சட்டம் ஒன்றினால் வரி குறைகேள் அலுவலகம் மற்றும் தேசிய வரி மன்றம் என்பன ஸ்தாபிக்கப்படும்.

504.முன்னைய வரவு- செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட பிரதிபலன்கள் மற்றும் அங்கீகாரம் என்பவற்றினை உறுதிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், சிறப்புரிமைகள் என்பன வரிசெலுத்துபவர்களுக்கும் வழங்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**சுங்க நிர்வாகம்**

505.சபாநாயகர் அவர்களே, உலக வர்த்தக நிறுவனத்தின் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையினை நாம் பின்னுறுதிப்படுத்தியுள்ளோம். இது எல்லை நடபடிமுறைகளின் விரைவு மற்றும் வினைத்திறன் என்பவற்றினை முன்னேற்றுவதற்கு குறிப்பிடத்தக்க வாய்ப்பினை வழங்குவதுடன் அதன் மூலம் வர்த்தகச் செலவினம் குறைவடைந்து இன்றைய சர்வதேச வர்த்தக பண்புகளைக் கொண்ட உலக பெறுமதிச் சங்கிலியின் பங்களிப்பு அதிகரிப்புக்கும் காரணமாக அமையும். நாம் தேசிய வர்த்தக வசதியளிப்புக் குழுவினையும் நியமித்துள்ளோம். அதற்கு மேலதிகமாக,சுங்க நடபடிமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான சட்டதிருத்தங்களை மேற்கொள்வதற்கு பின்வரும் நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும்.

506.அனைத்து இறக்குமதியாளர்களையும் சுங்கத் திணைக்களத்துடன பதிவு செயதல்- விடுவிப்புச் செயன்முறையில் உரிய மட்டத்தில் வசதியளிப்பதற்கு அதன் மூலம் ஏற்பாடு செய்யப்படும். இது 2017 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும்.

507.இறக்குமதியாளர்களின் துரிதமான விடுவிப்புச் செயன்முறையில் குறைந்தளவான ஆபத்திற்கு உதவக்கூடிய இறக்குமதியாளர் ஆபத்து விபரமொன்று உருவாக்கப்படும்.

**508.முன்வருகை செயன்முறைகள்**

இறக்குமதி ஆவணங்களை சமர்ப்பித்தல், பொருட்கள் வருகைக்கு முன்னரான செயன்முறைகள் உள்ளடங்கலான தகவல் என்பன விரைவான விடுவிப்பினை உறுதி செய்வதுடன் துறைமுகத்துக்கு பொருட்கள் வந்தடைந்ததுடன் விடுவிக்கப்படும் ஒழுங்குகளைப் பின்பற்றுகின்ற இறக்குமதியாளர்களுக்கான பொருட்களை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வது உறுதிப்படுத்தப்படும்.

**509.விடுவிப்பு மற்றும் அனுமதிக்கான சராசரியான காலம்**

எதிர்பார்க்கப்படும் வகையில் குறித்தகால நேரத்தினை உறுதிப்படுத்துவதற்கு சுங்கத் திணைக்களம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான சராசரி நேரத்தினையும் பொருட்களை விடுவிப்பதற்கான காலஅவகாசத்தினையும் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் ஏற்றுமதி வசதியளிப்பு நிலைய த்தில் கப்பலேற்றுவதற்காக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து 2 மணித்தியாலத்திற்குள் ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் கொள்கலன்கள் தயார்படுத்தப்படுவதனை சுங்கத் திணைக்களம் உறுதிப்படுத்தும். அத்துடன் இறக்குமதிகள் தொடர்பான ஆவணங்கள் 3 மணித்தியாலத்திற்குள் தயார்படுத்தப்படுவதுடன் கொள்கலன்கள் 24 மணி நேரத்திற்குள் விடுவிக்கப்படும் என நாம் உறுதியளிக்கின்றோம்.

(தொடரும்)

# ஜெயலலிதா மரணத்தின் மர்மங்கள்!



தனித்திருந்து பொதுவாழ்க்கை வாழ்ந்த பெண்களின் வாழ்வு பெரும்பாலும் கேள்விக்குறியில் தான் நிறைவுபெறுகிறது. ஜெயலலிதாவின் இறுதி நிமிடங்களும் அதற்கு விதிவிலக்கு அல்ல.

செப்டெம்பர் 22ஆம் திகதி அப்பலோவில் அனுமதிக்கப்பட்டார் ஜெயலலிதா. அவரது உடல்நிலை சீராகி வருவதாக அப்பலோ நிர்வாகமும், அ.தி.மு.க. பிரமுகர்களும் சொல்லி வந்த நிலையில், டிசெம்பர் 4 ஆம் திகதி மாலை திடீரென அவருக்கு இதய முடக்கம் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டது. இதைத் தொடர்ந்து அவசர தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அவர் மாற்றப்பட்டார். 'எக்மோ' உள்ளிட்ட இதய இயக்கவியல் கருவிகள் அவருக்குப் பொருத்தப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டதாக அப்பலோ அறிக்கை வெளியிட்டது.

அதேசமயம் அப்பலோ வைத்தியசாலையின் அதிகார பூர்வ 'டுவிட்டர்' வலைத்தளமும், அப்பலோ வைத்தியசாலையின் செயல் இயக்குநர் சங்கீதா ரெட்டியின் வலைத்தளமும் முதல்வருக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தன. 4 ஆம் திகதி இரவு ஏழு மணியளவில், சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் புனிதநீரும் அப்பலோவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. எதற்கும் தயாராக தமிழகம் இருந்த சூழலில், 5 ஆம் திகதி பிற்பகல 2:30 மணியளவில் 'முதல்வரைக் காப்பாற்ற தொடர்ந்து எங்களால் இயன்றதை மேற்கொண்டு வருகிறோம். ஆனால், அவர் அபாயக்கட்டத்தில்தான் இருக்கிறார்' என மீண்டும் அப்பலோ டுவிட்டர் பக்கத்தில் செய்தி வெளியானது. தமிழகம் பதைபதைப்புக்கும் பரபரப்புக்கும் ஆட்பத்துமாக்கிக்கொள்ளத் தொடங்கிய நேரமும் அதுதான். பாடசாலைகள் விடுமுறை அறிவிக்கப்பட்டு, மக்களும் அவரவர் வீடுகளுக்குச் சென்று அடங்கினர். அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டன.

மாலை 4 மணியளவில் கூட்டம் அப்பலோவை முற்றுகையிடத் தொடங்கியது. மத்திய சுகாதார அமைச்சர் ஜே.பி. நட்டா, பிரதமருக்கு தமிழக முதல்வரின் உடல்நிலை பற்றி அப்டேட் செய்து கொண்டிருக்க, எய்ம்ஸில் இருந்து மீண்டும் வைத்தியர்கள் சென்னை அப்பலோவுக்கு விரைவதாக அறிவிக்கப்பட்டது. அதன்படி டாக்டர் கில்நானி, டாக்டர் த்ரிகா, டாக்டர் நரங் மற்றும் டாக்டர் தல்வார் கொண்ட குழு அப்பலோ வந்தனர். முதல்வர் உடல்நிலை குறித்தான பரிசோதனைகள் நடந்து கொண்டிருப்பதாகச் சொல்லப் பட்டது.

சிகிச்சை நடந்துகொண்டிருந்த அதேசமயம், 5 மணிக்கு அப்பலோவில் வரிசைகட்டி நின்ற அம்புலன்ஸ்"கள் வழியாக அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த ஏனைய நோயாளிகள் அப்பலோவிலிருந்து மற்றைய அப்பலோ கிளைகளுக்கு மாற்றப்பட்டனர். 'அபாயக்கட்டம்' என்று சங்கீதா ரெட்டியே கூறிவிட்ட நிலையில், அங்கு ஏதேனும் அசம்பாவிதம் நிகழ்ந்தால் அதிலிருந்து ஏனைய நோயாளிகளைக் காப்பாற்ற இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கிடையே அப்பலோ முன் கூடியிருந்த மாவட்டச் செயலாளர்களிடம், "4 மணிக்கு தகவல் வெளியாகும். எதற்கும் தயாராக இருங்கள்" என மேலிட ஆணை செய்தியாகப் பரப்பப்பட்டிருக்கிறது.

மாலை 5.30 மணியளவில் அ.தி.மு.கவின் அதிகாரபூர்வ தொலைக்காட்சியான ஜெயா தொலைகாட்சி தொடங்கி தந்தி, புதிய தலைமுறை என அத்தனை செய்திச் சனல்களும் 'முதல்வர் ஜெயலலிதா காலமானார்' என்னும் செய்தியை வெளியிட்டன. ஒரு சில நிமிடங்களிலேயே 'காலமானதாக தகவல்' என்றும், 'அதிகாரபூர்வ அறிக்கை வெளியிடப்படவில்லை' என்றும் தொலைக்காட்சிகள் தங்களுடைய நிலைப்பாட்டை மாற்றின. அப்பலோவும் 'ஜெயலலிதா தொடர்ந்து சிகிச்சையில் இருக்கிறார். அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கின்றனர், சில தொலைக்காட்சிகள் முதல்வர் உடல்நிலை பற்றி தவறான செய்திகளை ஒளிபரப்பின' என்றும் தகவல் வெளியிட்டது.

தகவல் வெளியிட்டுத் திரும்பப்பெற்ற அந்த இடைப்பட்ட நேரத்தில், அப்பலோ வாசலில் கலவரம் தொடங்கியது. மக்கள், தடுப்புகளை உடைக்கத் தொடங்கினார்கள். அப்பலோவின் முகப்பில் இருந்த அவசரசிகிச்சை பகுதி என அறிவிப்பு தாங்கிய பலகைகளை மக்கள் துவம்சம் செய்தனர். நாற்காலி உட்பட கையில் கிடைத்த பொருட்களை எல்லாம் வைத்து பொலிஸ்காரர்களைத் தாக்கத் தொடங்கினார்கள். சுமார் 15 நிமிடங்களுக்கு மேல் நடந்த இந்தக் கலவரத்தை கட்டுக்குள் கொண்டுவர பொலிஸ்காரர்கள் தடியடி நடத்தினர். பின்னர் பொதுமக்களையும், அ.தி.மு.க தொண்டர்களையும் வைத்தியசாலை வாசல் பகுதியை விட்டு சுமார் நூறு மீற்றர் தொலைவில் நிறுத்தி, பாதுகாப்பு வேலி அமைத்து தடுத்து நிறுத்தினர். மறுபக்கம் அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தின் வெளியே நின்றுகொண்டிருந்த மக்கள் கதற, அங்கேயே சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி தற்கொலைக்கு முயன்றார். கட்சிக்கொடியும் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டது. 'முதல்வர் இறந்ததாக வெளியான செய்தி தவறு' என்ற செய்தி வந்ததும் தொண்டர்கள் மீண்டும் கொடியை முழுக் கம்பத்துக்கு ஏற்றி, 'புரட்சித் தலைவி அம்மா வாழ்க' என கோஷம் எழுப்பினார்கள்.

அப்பலோவில் பரபரப்பு ஒருவாறு கட்டுக்குள் வந்ததும் பொலிஸ் படைப்பிரிவுகள், சி.ஆர்.பி.எஃப் படைவீரர்கள், என்.எஸ்.ஜி. கமாண்டோக்கள் மற்றும் பவுன்சர்களும் வைத்தியசாலையின் முன் குவிக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் தொண்டர்கள் வெளியேற்றப்பட்டனர். எந்த ஒரு தவறான செய்திகளும் தமிழக மக்களுக்குச் சென்று விடக்கூடாது என்பதற்காக, அனைத்து இணையத்தளங்களும் சில நிமிடங்களில் தடை செய்யப்பட்டன. இதனிடையே, சென்னை பொலிஸ் ஆணையர் ஜார்ஜ், வைத்தியசாலைக்குள் சென்று பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்துவிட்டு இரவு சரியாக 10.45 இற்கு வைத்தியசாலையை விட்டு வெளியேற, அவரைத் தொடர்ந்து ஏனைய பொலிஸ் அதிகாரிகள் தடுப்புக்கயிறு கொண்டு இருபுறமும் பாதுகாப்பு ஏற்பாடு செய்யத் தொடங்கினர்.

பொலிஸார் மற்றும் என்.எஸ்.ஜி.படைவீரர்கள் பாதுகாப்பை தீவிரமாக பலப்படுத்த, அப்பலோ வைத்தியசாலை நிர்வாகம், "முதல்வர் ஜெயலலிதா உடல் நிலை சரியில்லாத காரணத்தால், கடந்த செப்டெம்பர் மாதம் தொடங்கி சிகிச்சை பெற்றுவந்தார். உடல் நிலை சீராக இருந்த நிலையில், அவருக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட, அதற்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் சிகிச்சை பலனளிக்காமல் 11.30 மணியளவில் உயிரிழந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்" என 12.03 இற்கு அறிக்கை வெளியிட்டது. இதனால், நூறடித் தொலைவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அ.தி.மு.க தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கூச்சலிட்டு அழத்தொடங்கி, வைத்தியசாலை நோக்கி முன்னேறத்தொடங்கினர். பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாக இருந்ததால் அனைத்தும் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. பின்னர் ஜெயலலிதாவின் உடலை போயஸ் கார்டன் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அப்பலோ வைத்தியசாலை முதல் கிரீம்ஸ் வீதி வழியாக போயஸ் கார்டன் வரை அனைத்து போக்குவரத்துகளும் தடை செய்யப்பட்டு, வீதிகளின் ஓரங்களில் வரிசையாக காவலர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

அறிவிப்பு வெளியாவதற்கு முன்பு தான் அ.தி.மு.க கட்சி அலுவலகத்தில், கட்சி எம்.எல்.ஏ-க்கள் கூட்டம் நடைபெற்றது. அதையடுத்து ஆளுநர் மாளிகை விரைந்தது ஓ.பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி தலைமையிலான குழு. ஆளுநர் மாளிகையில் எளிய முறையில் ஓ.பன்னீர்செல்வத்துக்கு முதல்வருக்கான பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. 32 அமைச்சர்கள் பதவியேற்றுக்கொண்டனர். அதே சமயம் அப்பலோவிலிருந்து, அரச கார்களில் ஷீலா பாலகிருஷ்ணன் உள்ளிட்டவர்கள் ஒவ்வொருவராக வெளியேறினார்கள். முதல்வர் இறப்பின் மீதான அதிகாரபூர்வ அறிவிப்பும், புதிய முதல்வர் பதவிப்பிரமாணமும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில்தான் நடைபெற்றன.

முதல்வரின் உடல் எந்நேரமும் அப்பலோவிலிருந்து போயஸ்கார்டன் கொண்டு செல்லப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அ.தி.மு.க அமைச்சர்கள் அதிகாலை 1.50 மணிக்கு அப்பலோ வைத்தியசாலைக்குள் சென்று ஆலோசனை நடத்தினர். பின் சரியாக அதிகாலை 2.26 இற்கு பலத்த பாதுகாப்போடு, ஜெயலலிதாவின் உடல் அப்பலோ வைத்தியசாலையை விட்டு வெளிவந்தது. தங்க ப்ளேட்டிங் செய்யப்பட்ட ஐஸ் பெட்டியில் அவரது உடல் வைக்கப்பட்டிருந்தது. அந்தப்பெட்டி ஃப்ளையிங் ஸ்க்வாட் அம்புலன்ஸ் சர்வீஸில் இருந்து வாங்கப்பட்டது. "வி.ஐ.பி-க்களுக்கும், சாதாரண மக்களுக்கும் தனித்தனியே ஐஸ்பெட்டி உண்டு. ஜெயலலிதா இறந்துவிட்டார். அவரது உடலை வைக்க எங்களுக்கு ஐஸ்பெட்டி வேண்டும் என அப்பலோ தரப்பிலிருந்து அழைப்பு வந்த நிலையில், அவருக்கென தனியாக அதிக நேரம் குளிர்ந்த நிலையில் இருக்கும், தங்க ப்ளேட்டிங் செய்யப்பட்ட புது ஐஸ் பெட்டியைத் தயார் செய்து அனுப்பினோம். அதன் பெறுமானம் 1 இலட்சம் ரூபாய்க்கு மேல் இருக்கும்" என்றார் அதன் உரிமையாளர் சாந்தகுமார்.

இரவு 11.30 மணிக்கு இறந்ததாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட ஜெயலலிதாவுக்காக, அதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பே அதாவது 11 மணிக்கே ஐஸ் பெட்டி கேட்கப்பட்டிருக்கிறது. அதே சமயம் மாலை 5.30 மணிக்கு இறந்ததாக அறிவிக்கப்பட்டு, தொலைக்காட்சி ஊடகங்கள் மீண்டும் அந்த செய்தியை திரும்பப் பெற்றுக் கொண்டது கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.






"4 ஆம் திகதி இரவு 7 மணிக்கு முதல்வருக்கு கார்டியாக் அரெஸ்ட் ஏற்பட்டது. அப்போதே அவரது இதயத்தின் செயற்பாடு நின்றுவிட்டது. அதன் பிறகு சிகிச்சை முயற்சிகள் எடுக்கப்பட்டதாகச் சொல்வது சந்தேகமாக இருக்கிறது. எம்.எல்.ஏக்களிடம் கையெழுத்து, ஓ.பன்னீர்செல்வம் முதல்வராக பதவியேற்பு ஆகியவை நடக்கும் வரை அனைத்தும் இரகசியமாக வைக்கப்பட்டன" என்று நம்பத்தகுந்த வட்டாரங்களில் வலம் வருபவர்கள் சொல்ல ஆரம்பித்து இருக்கிறார்கள். உடலை 'எம்பாமிங்' செய்ததற்கான அடையாளம் ஜெயலலிதாவின் கன்னத்தில் இருப்பதைப் பார்க்கும்போது இப்படித்தான் நம்பத் தோன்றுகிறது!

**காட்சிகள் விரியும்**

ஜூனியர் விகடன்

# சிரியாவில் வெளியேறும் மக்களை சுட்டுக் கொல்கிறது இராணுவம்

## ஐ.நா. சபை குற்றச்சாட்டு

**(பெய்ரூட்)**

***சிரியாவில் உள்நாட்டு போர் நடைபெற்று வருவதால் அங்கிருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர். அவ்வாறு வெளியேறுபவர்களை இராணுவம் சுட்டுக் கொல்வதாக ஐ.நா. சபை குற்றம்சாட்டியுள்ளது.***

சிரியாவில் கடந்த 5 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது. ஜனாதிபதி பஷர் அல்- ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போராடி வருகின்றனர். அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் சில பகுதிகளை வைத்துள்ளனர்.

ரஷ்ய இராணுவ உதவியுடன் அவற்றை சிரிய இராணுவத்தினர் கைப்பற்றி வருகின்றனர். இந்த நிலையில் கிளர்ச்சியாளர்களிடம் உள்ள பெரிய நகரமான அலெப்போவை மீண்டும் கைப்பற்ற கடும் சண்டை நடக்கிறது.

இதனால் அங்கிருந்து மக்கள் வெளியேறி வருகிறார்கள். அவ்வாறு வெளியேறுபவர்களை இராணுவம் சுட்டுக் கொல்கிறது. இத்தகவலை ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

இதுவரை தங்களுக்கு கிடைத்த தகவல்படி 82 பேர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அவர்களில் 11 பேர் பெண்கள் மற்றும் 13 பேர் குழந்தைகள் அடங்குவர்.

இராணுவத்தின் இத்தகைய தாக்குதலால் பொது மக்கள், அலெப்போ பகுதியை விட்டு வெளியேற முடியாமல் சிக்கி தவிக்கின்றனர். இதற்கிடையே அலெப்போ நகர் முழுவதும் தங்கள் கட்டுப்பாட்டில் வந்து விட்டதாக சிரிய இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-3)

## நைஜீரியாவில் 80ஆயிரம் குழந்தைகள் பட்டினியால் பலியாகும் அபாய நிலையில்

நைஜீரியாவில் பசி பட்டினியால் 80 ஆயிரம் குழந்தைகள் பலியாகும் அபாயம் இருப்பதாக 'யுனிசெப்' நிறுவனம் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக கடந்த 7 ஆண்டுகளுக்கும் மேலாக தாக்குதல் உள்ளிட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அந்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக 'போர்னோ' மாகாணம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் உணவின்றி தவிக்கின்றனர்.

கடந்த 7 ஆண்டுகளாக நடைபெறும் தீவிரவாதிகளின் தாக்குதலால் 26 இலட்சம் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். உணவில்லாததால் 4 இலட்சம் குழந்தைகள் பசி பட்டினியால் தவிக்கின்றனர்.



தற்போதைய சூழ்நிலையில் இவர்களுக்கு சர்வதேச நாடுகள் உணவு, மருந்து உள்ளிட்ட அடிப்படை உதவிகள் வழங்காவிடில் 5இல் ஒரு பங்கு குழந்தைகள் உயிரிழக்கும். அதாவது 80 ஆயிரம் குழந்தைகள் பலியாகும் அபாயம் உள்ளது. இத்தகவலை ஐ.நாவின் யுனிசெப் செயல் இயக்குநர் அந்தோனி லேக் தெரிவித்துள்ளார்.

எனவே தீவிரவாதிகளின் பிடியில் சிக்கி பசி, பட்டினியால் தவிக்கும் குழந்தைகளுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் ஐ.நாவும், சர்வதேச தனியார் நிறுவனங்களும் நன்கொடை பெறுவதற்காக மிகவும் திரித்து கூறுவதாக நைஜீரிய ஜனாதிபதி முகமது புகாரி குற்றம் சாட்டியுள்ளார்.

ஒரு வருடத்துக்கு முன்பே போகோஹராம் தீவிரவாதிகள் தோற்கடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நைஜீரியாவும், அண்டை நாடுகளும் அவர்கள் கைப்பற்றிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் இருந்து விரட்டியடித்து விட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## சிரியாவில் பல சிறுவர்கள் உயிருடன் எரித்துக்கொலை





சிரியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது.

அப்பாவி சிறுவர்கள், பெண்கள் உட்பட இலட்சக்கணக்கான மக்கள் பலியாகியுள்ளனர், எனினும் இன்னும் போர் முடிந்தபாடில்லை.

ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து சிரியாவின் முக்கிய நகரான அலெப்போவை கைப்பற்ற இராணுவத்தினர் கடுமையாக போராடி வருகின்றனர்.

இராணுவத்தினர் முன்னேறிவரும் நிலையில், மக்களை கேடயங்களாக ஐ.எஸ். தீவிரவாதிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சிறுவர்களை உயிருடன் எரிப்பது போன்றும், படுகொலை செய்வதும் போன்ற வீடியோ வெளியாகி அதிர வைத்துள்ளது.

பலரும் டுவிட்டரில் தாங்களுக்கு நடக்கும் கொடுமைகளை பற்றி பேசி வருகின்றனர்.

பெண் ஒருவர், அனைவருக்கும் இதை நான் கூற விரும்புகிறேன், அலெப்போவில் படுகொலைகள் நடந்து வருகின்றன, இதுவே என்னுடைய கடைசி வீடியோவாக கூட இருக்கலாம் என தெரிவித்துள்ளார். (இ-3)

## அலெப்போவில் இராணுவ நடவடிக்கை அனைத்தும் பூர்த்தியானதாக அறிவிப்பு

(அலெப்போ)

சிரியாவின் கிழக்கு அலெப்போவின் இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதுவர் விட்டலி சர்கின் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பிராந்தியத்தின் முழுமையான கட்டுப்பாட்டை சிரியாவின் படையினர் பெற்றுள்ளதுடன் இந்த பகுதிகளில் இருந்து சிரிய எதிர்க்கட்சிப் போராளிகள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான உடன்படிக்கை ஒன்றும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. இதனை போராளிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் அங்கு இராணுவ நடவடிக்கைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.




எவ்வாறாயினும், சிரிய படையினர் வீடு வீடாகச் சென்று பொதுமக்களை சுட்டுக் கொல்வதாக ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்வாறு 80க்கும் அதிகமானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகம் தெரிவித்துள்ளது. (இ-3)

# தமிழகத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பவராக சின்னம்மா சசிகலா இருப்பார்; எப்படி?

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அதிமுகவின் பொதுச்செயலாளர் பொறுப்பை யார் ஏற்கப்போகிறார் என்பதுதான் இன்றைய பேசு பொருள். தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தொடங்கி கட்சியின் மூத்த, முன்னணி நிர்வாகிகள் பலரும் சசிகலாவே பொதுச்செயலாளராக வர வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளனர். நேரடியாகப் பார்த்தால், வெறும் கட்சிப் பதவிபோலத் தோற்றம் அளித்தாலும், ஆளும்கட்சியான அதிமுகவின் பொதுச்செயலாளர் என்பவர் மறைமுகமாக தமிழகத்தின் கடைக்கோடி நிர்வாகம் வரை தீர்மானிக்கும் வல்லமை படைத்தவர். எப்படி?

அதிமுக தொடர்பான அத்தனை நிர்வாக நடவடிக்கைகளுக்கும் பொறுப்பேற்கக்கூடிய பொதுச்செயலாளர் கட்சியின் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களால் மட்டுமன்றி, கட்சியின் அடிப்படைத் தொண்டர்களின் பங்களிப்போடு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதுதான் அதிமுகவின் அடிப்படை விதி. மற்றக் கட்சிகளில் இல்லாத விதிமுறை இது. பொதுச்செயலாளர் தேர்தலில் தமிழ்நாட்டுக் கட்சித் தொண்டர்கள் மட்டுமன்றி, கட்சியின் கிளைகள் இருக்கின்ற புதுச்சேரி, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, அந்தமான் என அனைத்து மாநில அடிப்படை உறுப்பினர்களும் தேர்தலில் வாக்களித்து அல்லது ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

### நிர்வாகிகளை நியமிக்கும் அதிகாரம்

கட்சியின் அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பொதுச்செயலாளர், கட்சியின் அடிப்படை உறுப்பினர்களிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணைப் பொதுச் செயலாளர்கள், பொருளாளர், தலைமைக்கழகச் செயலாளர்களை நிர்வாக வசதிக்கேற்ப நியமித்துக்கொள்ளலாம். கட்சியின் செயற்குழு, பொதுக் குழுவை உருவாக்கும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கே உண்டு. அவற்றைக் கூட்டுகின்ற உரிமையும் அவருக்கே உண்டு. கட்சியின் துணை அமைப்புகளுக்கான நிர்வாகிகளை நியமிக்கும் அதிகாரம் பெற்ற பொதுச்செயலாளர், கட்சியின் பொதுக்குழு, செயற்குழுவின் வழிகாட்டுதலோடு கட்சிக்கான கொள்கைகளை உருவாக்குவது, செயற்றிட்டங்களை வகுப்பது ஆகியவற்றை மேற்கொள்ளலாம். பொதுச்செயலாளர் விரும்பினால், கட்சியின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரத்தியேகத் துணைச் செயலாளரை நியமிக்கலாம். அதேபோல, இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்களையும் நியமித்துக் கொள்ளலாம். ஒருவேளை, கட்சி நிர்வாகப் பதவிகளில் மூன்றில் ஒரு பங்கு இடம் பெண்களுக்குக் கிடைக்கப்படாத பட்சத்தில், அதை ஈடு செய்யும் வகையில், குறிப்பிட்ட பொறுப்புகளில் பெண்களை நியமிக்கும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கு உண்டு. வெறுமனே பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தைத் தாண்டி, இந்த ஷரத்தை நோக்கினால், உள்ளார்த்தம் விளங்கும்.

### ஒழுங்கு நடவடிக்கை அதிகாரம்

கட்சியின் விதிமுறைகள், கொள்கைக் கோட்பாடுகள் ஆகியவற்றுக்கு எதிராகச் செயற்படுவோர், கட்சி நலனுக்குக் குந்தகம் விளைவிப்போர் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கு உண்டு. ஒழுங்கு நடவடிக்கை விடயத்தில் இறுதிமுடிவு எடுக்கும் உச்ச பட்ச அதிகாரம் பொதுச்செயலாளருடையது அல்லது அவர் எடுப்பதுதான் இறுதி முடிவு.

முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் மாற்றங்கள் நிகழும் போது, கட்சியின் நிர்வாகக் குழுக்களைக் கூட்டுவதற்குப் போதுமான கால அவகாசம் இல்லாதபோது, முடிவெடுக்கும் அதிகாரம் பொதுச் செயலாளருக்கு உண்டு. அந்த முடிவுக்கு அடுத்த பொதுக் குழுவில் ஒப்புதல் பெற்றுக் கொள்ளலாம். பொதுச்செயலாளர் விரும்பினால், கட்சி நிர்வாகிகளின் கருத்துக்களைக் கடிதம் வழியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

### தேர்தல் சார் அதிகாரம்

கட்சியின் உட்கட்சித் தேர்தல்களை நடத்தும் அதிகாரமும் பொதுச்செயலாளருக்கே உண்டு. அதில் போட்டியிடுவதற்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. குறிப்பாக, ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளானவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு நிபந்தனைகள் இருக்கின்றன. ஆனால், அவற்றைத் தளர்த்திக் கொள்ளும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கு உண்டு.

உட்கட்சித் தேர்தலைத் தாண்டி, சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தேர்வுசெய்வது ஆட்சி மன்றக் குழுவுக்கு உண்டு. ஆனால், அவர்களுக்குக் கட்சியின் இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கீடு செய்ய பொதுச செயலாளரின் கையெழுத்து அவசியம். ஆட்சிமன்றக் குழு கூடுவதற்குக் கால அவகாசம் இல்லாதபோது, வேட்பாளர் தேர்வு விடயத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கு உண்டு.

கட்சியின் நிர்வாகப் பதவிக்குப் போட்டியிடக் கூடியவர், தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு, எவ்வித இடைவெளியுமின்றி உறுப்பினராக நீடித்திருக்க வேண்டும் என்கிறது கட்சியின் விதி 30 பிரிவு 5. கடந்த 19 டிசெம்பர் 2011 அன்று கட்சியிலிருந்து நீக்கப்பட்ட சசிகலா, பிறகு மன்னிப்புக் கடிதம் கொடுத்து, 1 ஏப்ரல் 2012 அன்று மீண்டும் கட்சியில் சேர்ந்து கொண்டார். அதன்படி பார்த்தால், அவர்



கட்சியில் மீண்டும் சேர்ந்து ஐந்தாண்டுகள் நிறைவடைய இன்னும் நான்கு மாதங்கள் இருக்கின்றன. ஆகவே, அவர் பொதுச் செயலாளராக வர முடியாது என்கிறார்கள் சிலர். தவிரவும், பொதுச்செயலாளர் நினைத்தால், இந்த நிபந்தனையைத் தளர்த்த முடியும். ஆனால், இங்கே பொதுச் செயலாளர் பதவியே காலியாக உள்ளதால், அதற்கும் வாய்ப்பில்லை என்று சொல்லி, சசிகலா பொதுச்செயலாளராக வர கட்சியின் சட்ட விதிகளில் இடமில்லை என்கிறார்கள்.

ஆனால், மேற்கண்ட விதியின் உட்பிரிவுகளை நுணுக்கமாக ஆய்வுசெய்தால், இன்னொரு அம்சம் காணக் கிடைக்கிறது. மேலே சொல்லப்பட்ட 'ஐந்தாண்டு நிபந்தனை' தேர்தல்களில் கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்டதற்காகக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு, பிறகு சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களுக்குத்தான் பொருந்தும். ஆனால், சசிகலா நீக்கப்பட்டது வேறு காரணங்களுக்காக. ஆகவே, அவருக்கு இந்த ஐந்தாண்டு நிபந்தனை பொருந்தாது. ஆகவே, அவர் கட்சியின் பொதுச்செயலாளராக ஆவதற்குக் கட்சி விதிகள் குறுக்கே நிற்கவில்லை என்பதுதான் யதார்த்தம்.

**சசிகலாவே இனி தீர்மானிப்பவராக இருப்பார்**

ஆக, அதிமுக விதிகளைப் பொறுத்த அளவில் சர்வ வல்லமை மிக்க பதவி பொதுச்செயலாளர் என்பதாலேயே சசிகலா அப்பதவி நோக்கி நகர்கிறார். அதிமுகவின் முதல்வர், அமைச்சரவை, நாடாளுமன்ற உறுப்பினர்களில் தொடங்கி உள்ளாட்சியின் வட்ட உறுப்பினர்கள் செயற்பாடுகள் வரை - பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் - இனி சசிகலா (சின்னம்மா) தீர்மானிப்பவராக இருப்பார்!

## வர்தா புயலால் பாதிக்கப்பட்ட
# பொதுமக்களைச் சந்தித்து முதல்வர் ஓ.பி.எஸ்.ஆறுதல்



வர்தா புயல் பாதித்த சில பகுதிகளுக்கு முதலமைச்சர் ஓ.பனனீர்செல்வம் நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் முதலமைச்சர் பன்னீர்செல்வம் சென்னை மாநகராட்சி செயற்படும் ரிப்பன் மாளிகைக்கு வந்து ஆலோசனை நடத்தினார். சென்னையில் புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை விரைந்து செயற்படுத்தவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை விரைந்து முடிக்கவும், மண்டல அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதன் பிறகு அங்கிருந்து புறப்பட்ட முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோர் பாடி பகுதிக்கு சென்றனர். அங்கிருந்து மாத்தூர் சென்ற முதலமைச்சர் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்த்துவிட்டு, பெரிய பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஒரு தனியார் உணவகத்தில் உணவு அருந்தினார்.

அதை தெரிந்து கொண்ட பெரியபாளையம் நெடுஞ்சாலை அருகே உள்ள எம்.ஜி. ஆர். நகரை சேர்ந்த பொதுமக்கள் 70 இற்கும் மேற்பட்டோர் திரண்டு வந்து உணவகத்தின் வாசல் முன்பு கூடினர்.

தங்கள் பகுதிகளில் பல வருடங்களாக மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லை. அதிகாரிகளிடம் இதைபற்றி கூறியும் அவர்கள் அதை சரி செய்யவில்லை. இதனால் முதல்வர் எங்கள் பகுதிக்கு வந்து பார்வையிட்டு, அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்து தந்தால் தான் நாங்கள் இங்கிருந்து கலைந்து செல்வோம் என்று அவர்கள் கூறினர்.

இதை உணவகத்தில் இருந்து பார்த்த முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், பொது மக்கள் அருகே வந்து, அவர்களின் குறைகளை கேட்டறிந்து அதை உடனே நிவர்த்தி செய்ய தலைமை செயலாளர் ராமமோகன ராவுக்கு உத்தரவிட்டார்.

அங்கிருந்து புறப்பட்ட முதலமைச்சர் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பழவேற்காடுக்கு சென்றார். அங்கே பாதிப்புக்குள்ளான பகுதிகளை பார்வை யிட்டு, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

அவர்கள் அளித்த மனுக்களை வாங்கி படித்து பார்த்துவிட்டு, கூடிய விரைவில் உங்கள் பிரச்சினை சரிசெய்யப்படும் என்று உறுதி மொழி அளித்தார்.

அதன்பின்பு, அங்குள்ள முகதுதுவாரத்துக்கு (ஏரி) சென்று பார்வையிட்டார். அதை முதலமைச்சர் பன்னீர் செல்வத்தை பார்த்த சந்தோஷத்தில் அவரை பொது மக்கள் சுற்றிக் கொண்டனர். அவர்களிடம் முதலமைச்சர் கை குலுக்கி பேசினார். அதன் பின்பு அங்கிருந்து புறப்பட்ட முதலமைச்சர் பொன்னேரி பகுதியில் புயலினால் பாதிக்கப்பட்டு, தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த பொதுமக்களை பார்த்து ஆறுதல் சொல்லி, நிவாரண உதவிகளை வழங்கினார். கத்திவாக்கம் பகுதியில் நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள வர்களுக் காக சமைக்கப்பட்ட உணவை பரிசோதித்த அவர் அங்குள்ளவர்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார். (இ-3)

# கிரண் ரிஜிஜூ ஊழல் விவகாரம் பாராளுமன்றில் அமளி-துமளி

450 கோடி ரூபாய் ஊழலில் தொடர்புள்ளமத்திய இணை அமைச்சர் கிரண் ரிஜிஜூ உடனடியாக பதவி விலக வேண்டும என்றும் காங்கிரஸ் எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டதால் நேற்று பாராளுமன்ற மக்களவை ஒத்தி வைக்கப்பட்டது. அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் பாயும பிச்சோம் மற்றும் டெங்கா ஆற்றின் நீரை மையமாக வைத்து கடந்த 2005 ஆமஆண்டு காமெங புனல் மின் சார நிலையம் திறக்கப்பட்டது.

இந்த புனல் மின்சார நிலையத்தை அமைக்கும் பணியில் சுமார் 450 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடைபெற்றதாகவும், இந்த ஊழலில் மத்திய உள்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜிஜூ மற்றும் அவரது உறவினர் கோபோய் ரிஜிஜூ ஆகியோருக்கு தொடர்புள்ளதாக காங்கிரஸ் கட்சியை சேர்ந்த முக்கிய தலைவர்களில் ஒருவரான சந்தீப் சுர்ஜேவாலா குற்றம்சாட்டியுள்ளார்.

இந்த மின்சார நிலையைத்தை கட்டித்தந்த ஒப்பந்ததாரர்களுக்கு உடனடியாக பணத்தை விடுவிக்கும்படி கிரண் ரிஜிஜூ எழுதியிருந்த ஒரு கடிதத்தை ஆதாரமாக வைத்து அண்மையில் சில ஊடகங்களில் செய்தி வெளியானது. இது தவிர தன்னிடம் மேலும் பல ஆதாரங்கள் உள்ளதாக சந்தீப் சுர்ஜேவாலா தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பான விசாரணை முடியும்வரை அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என காங்கிரஸ் கட்சி வலியுறுத்த தொடங்கியுள்ளது. வெளிப்படையான ஆட்சி நிர்வாகம் என்று கூறிவரும் பிரதமரின் நிலைப்பாடு தற்போது கேள்விக்குறியாகி விட்டது. இந்த ஊழல் விவகாரத்தில் பிரதமரின் நடவடிக்கை என்ன? என்று மக்கள் கவனிக்க தொடங்கி விட்டார்கள் என்றும அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ள கிரண்ரிஜிஜூ, இதெல்லாம கட்டுக்கதை குற்றச்சாட்டாகவே எடுத்துக்கொள்ளக்கூடாது என்று தெரிவித்தார். இந்நிலையில், நேற்று பாராளுமன்றம் கூடியதும் கிரண் ரிஜிஜூ மீதான ஊழல் குற்றச்சாட்டை மையமாக வைத்து மக்களவையில் எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டனர். உடனடியாக அவர் பதவி விலக வேண்டும், இதுதொடர்பாக உயர்மட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியது. இதனால் அமளி துமளி ஏற்பட்டது.

பண ஒழிப்பு நடவடிக்கை தொடர்பாகவும் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து கூச்சலிட்டதால் மக்களவையை பிற்பகல் வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் சுமித்ரா மகாஜன் அறிவித்தார். (இ-3)

## 2015 ஆம் ஆண்டு 2 பிள்ளைகளின்

# தாயைக் கொலைசெய்தவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது

(கொழும்பு)

இரு பிள்ளைகளின் தாயைக் கொலை செய்தவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பெண்ணொருவரை கொலை செய்த குற்றதில் நபரொருவருக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் இந்த மரண தண்டனையை விதித்துள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் திகதி இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தாயான குறித்த பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாக குறித்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அதன்படி சட்டமா அதிபர் திணைக்களத்தால் அநுராதபுரம் மேல்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், கலேன்பிந்துனு வெவ பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

குறித்த வழக்கின் தீர்ப்பை அறிவித்த அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்தார்.

கலேன்பிந்துனுவெவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கே இவ்வாறு நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (இ-10)



கேலிச்சித்திரம்

## யுத்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதனால்

# படையினரின் கௌரவத்தை பாதுகாப்பது மிகவும் சிரமம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**யுத்தக் குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளாது இலங்கை இராணுவம் உட்பட அரச படையினரின் கௌரவத்தை பாதுகாப்பது மிகவும் சிரமமான காரியம் என ஜனாதிபதி அரச படைத்தளபதிகள் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.**



இலங்கை இராணுவம் உட்பட பாதுகாப்புப் படையினரின் உலகின் மிகவும் பயமான தீவிரவாதக் குழுவொன்றை இராணுவ ரீதியாக தோற்கடித்து மகத்தான வெற்றியை ஈட்டிய போதிலும் சர்வதேச அரங்கில் அந்த வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமானது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சப்புகஸ்கந்த மாகொல பகுதியிலுள்ள இராணுவ கலாசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பட்டமளிப்பு நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் இராணுவத் தளபதி, முப்படைகளின் தளபதிகள் உட்பட படைகளின் உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பயங்கரவாதத்திற்கு எதிராக வெற்றியீட்டுவது என்பது உள்நாட்டில் இராணுவ ரீதியாக எதிர்த்தரப்பை தோற்கடிப்பது மாத்திரமன்றி சர்வதேச அரங்கில் அனைத்து மட்டத்திலும் குறித்த வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதாகும் என்று தெரிவித்துள்ளார்.

தான் ஜனாதிபதி பதவிக்கு வந்த நாள் முதல் இதற்காக பாடுபட்டு வருவதாவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இலங்கை இராணுவத்திற்கு சர்வதேச ரீதியாக நிராகரிக்கப்பட்டுள்ள ஒத்துழைப்பை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் படையில் கடமையாற்றிய போது சிறுவர் பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகிய நிலையிலேயே இலங்கை ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

சிறுமிகள் உட்பட பெண்களை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய குற்றத்திற்காக 2007 ஆம் ஆண்டு ஹெய்ட்டியில் கடமையாற்றிய ஐ.நா. அமைதி காக்கும் படையணியில் இருந்த 114 இலங்கை இராணுவத்தினர் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கிய படையினரை பாரதூரமான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்திருந்தது. அதேவேளை இனிவரும் காலங்களில் இலங்கை இராணுவம் உட்பட அரச படையினரை ஐ.நா. அமைதிகாக்கும் படைக்காக இணைத்துக் கொள்ளும் போது கட்டளைத் தளபதி உட்பட படையினர் தொடர்பில் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று ஜெனீவாவில் கடந்த மாதம் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகளுக்கு எதிரான குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-10)

## உலக சந்தையில் பெற்றோலியத்தின் விலை அதிகரிப்பு

உலக சந்தையில் பெற்றோலியத்தின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுவரை எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 60 அமெரிக்க டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கமைய அடுத்த வருடம் ஜனவரி மாதம் இந்த விலை இரட்டிப்பாகும் எனவும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடம் ஜூலை மாதத்திற்கு பிறகு இவ்வாறான விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை இம்முறையே எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் ஒபெக் அமைப்பானது எண்ணெய் உற்பத்தி செய்யும் ஏனைய நாடுகளுடன் அன்றாட எண்ணெய் உற்பத்தியை குறைப்பது தொடர்பில் செய்துகொண்ட உடன்படிக்கைக்கமையவே எண்ணெய் விலை அதிகரிப்புக்கு காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-10)

## இலங்கையில் தஜிகிஸ்தான் ஜனாதிபதி பிரதமர், சபாநாயகருடன் சந்தித்து பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்துள்ள தஜிகிஸ்தான் ஜனாதிபதி எமோமாலி ரமோனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த சந்திப்பில் முக்கிய விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட தஜிகிஸ்தான் ஜனாதிபதி சபாநாயகர் கரு ஜயசூரியவையும் சந்தித்தார்.

தஜிகிஸ்தான் தூதுக்குழுவினர் உலக வர்த்தக நிலையத்தில் அமைந்துள்ள இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண பரிமாற்றல் விடயங்களிலும் கவனம் செலுத்தினர்.

இரு நாடுகளுக்கும் இடையில் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணத்துறையில் உள்ள வர்த்தக நடவடிக்கைகளையும் ஆராய்வதே இந்த விஜயத்தின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)



# அம்பாந்தோட்டை சம்பவத்திற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி கறுப்புப்பட்டிப் போர்

(கொழும்பு)

**அம்பாந்தோட்டை துறைமுக தாக்குதல் சம்பவத்திற்கு எதிர்ப்பு வெளியிடும் நோக்கில் கூட்டு எதிர்க்கட்சியினர் கறுப்புப் பட்டி போராட்டமொன்றை நடத்த உள்ளதாக கட்சியின் அழைப்பாளர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

அம்பாந்தோட்டை ஊழியர்கள் மற்றும் ஊடகவியலாளர் மீதான தாக்குதலை கண்டித்து இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் நாட்களில் கூட்டு எதிர்க்கட்சியினர் பங்கேற்கும் அரசியல் நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கூட்டு எதிர்க்கட்சியினர் கறுப்புப் பட்டிகளை அணிந்து எதிர்ப்பை வெளியிட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடற்படைத் தளபதி ஊடகவியலாளர் மீது நடத்திய தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதல்களுக்கு அரசாங்கம் பூரண பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதாக உறுதியளித்து ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட அரசாங்கம் பட்டப் பகலில் ஊடக சுதந்திரத்தை மீறுவதாக கூறியுள்ளார்.

மேலும், நல்லாட்சி அரசாங்கம் ஜனநாயகத்தை முற்று முழுதாக மீறிச் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (இ-10)

# நாட்டை பிரிக்கும் சமஷ்டியை தோற்கடிக்க ஆளும் கூட்டணியின் 28 பேர் தயார்!

## கூறுகிறார் உதய கம்மன்பில



நாட்டை பிரிக்கும் சமஷ்டி யாப்பினை தோற்கடிக்க ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாட்டை நேசிக்கும் பலர் தம்முடன் இணைந்துள்ளதாக பிவிதுரு ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் தலைவர் உதய கம்மன்பில, நாட்டை 9 பிரிவுகளாக பிரிக்கும் யாப்பினை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார்.

"எங்களிடம் 51 பேர் இருக்கின்றனர். இந்த யாப்பினை தடுப்பதற்கு 76 வாக்குகள் தேவை, ஆகவே மேலதிகமாக 25 பேரின் ஆதரவு எமக்குத் தேவை. ஜே.வி.பியின் நிலைப்பாடு குழப்பமாகவே காணப்படுகின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக வந்த 13 ஆவது திருத்தத்திற்கு எதிராக குரல் எழுப்புவதற்கு பல உயிர்களை பலிகொடுக்க வேண்டி ஏற்பட்டது.

13 ஆவது திருத்தத்தையும் மீறி அதிகாரத்தை பகிர்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜே.வி.பியின் அரசியல் வரலாற்றை நோக்குமிடத்து அன்றைய தினத்தை விடவும் இன்று அவர்கள் இதற்கு தமது எதிர்ப்பை வெளியிட வேண்டும்.

அதனைவிடவும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சியில் உள்ள கட்சியை விடவும் நாட்டை நேசிக்கின்ற 28 பேர் புதிய யாப்பிற்கு எதிராக வாக்களிக்க எமக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். எனினும் இறுதி நேரத்தில் எதுவேண்டுமானாலும் நடக்கலாம்.

28 பேரை நாங்கள் 35 பேராக அதிகரித்துக்கொள்ள எதிர்பார்க்கின்றோம். ஆகவே சர்வஜன வாக்கெடுப்பின்றி, நாடாளுமன்றில் நிறைவேற்றி இந்த நாட்டை 9 பிரிவுகளாக பிரிக்கும் சமஷ்டி யாப்பினை தோல்வியடையச் செய்ய நாட்டை நேசிக்கும் அரசியல்வாதிகளிடமிருந்து ஆதரவு கிடைக்குமென நாம் நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# அம்பாந்தோட்டை துறைமுகம் கடற்படையினரின் வசமானது

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் அன்றாடப் பணிகள் அனைத்தும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டை துறைமுகப் பணியாளர்கள் நேற்று முன்தினம் ஏழாவது நாளாகவும் தொடர்ச்சியாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட நிலையிலேயே அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

துறைமுக அதிகார சபையின் நிரந்தர பணியாளர்களாக தம்மை இணைத்துக் கொள்ளுமாறு வலியுறுத்தி அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ துறைமுகப் பணியாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். எனினும் இதுவரை அவர்களது கோரிக்கை நிறைவேற்றப் படாத நிலையில் போயா தினமான நேற்று முன்தினம் விரதமிருந்து தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்தனர். பௌத்த பிக்குகளையும் அழைத்து அவர்களின் பௌத்த போதனைகளுக்கு செவிமடுத்த வண்ணம் இந்தப் போராட்டத்தை துறைமுக பணியாளர்கள் மேற்கொண்டனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் 1036 வாகனங்களை ஏற்றிய கப்பலொன்று அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு சென்றுள்ளது. இந்த கப்பலுக்குத் 'தேவையான வசதிகளை செய்து கொடுப்பதற்காக கொழும்பு துறைமுகத்திலிருந்து' துறைமுகப் பணியாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். குறிப்பாக தனியார் நிறுவனமொன்றில் இருந்தே இந்தப் பணியாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் தெரிவித்தனர்.

துறைமுகப் பணிகளை வழமையாக மேற்கொள்ளும் பொருட்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக துறைமுக அதிகார சபை அறிவித்துள்ளது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை முதல் அம்பாந்தோட்டை துறைமுகம் கடற்படையின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கமைய அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் அனைத்துப் பணிகளும் கடற்படையினராலேயே மேற்கொள்ளப்படவுள்ளன. (இ-10)

## இன்று ஒரு தகவல்

# நம் நன்மைக்கே

நம்மைப் பாராட்டுபவர்களையே நமக்கு அதிகம் பிடிக்கிறது.

ஏதேனும் குறை ஒன்றைக் கண்டு பிடித்துச் சொன்னாலோ நமக்குக் கோபம் வருகிறது.

''ஏங்க ஓரமாப் போறது! இப்படியா நடு ரோட்டில நடக்கிறது?'' என்று ஒரு சைக்கிளோட்டியோ ஒரு காரோட்டியோ சொன்னால் நமக்கு அவர் மீது எரிச்சல் வருகிறது. "ஏன் நீங்க ஒதுங்கிப் போறது தானே!'' என்று எதையாவது பதிலுக்குச் சொல்லி வைக்க வேண்டும் என்று நமக்கு வேகம் வருகிறதே தவிர, ஓகோ ஏதோ சிந்தனையில் நாம் நடுரோட்டுக்கே வந்துட்டோமோ தப்புத்தான் என்று எண்ணத் தோன்றுகிறதா? இல்லை நம்மை முன்னேற விடாமல் செய்ய இந்த ஒரு கணம் போதும்.

யார் என்ன சொன்னாலும் "எல்லாம் எனக்குத் தெரியும். நீ சொன்னதற்காக வேனும் அதை நான் பின்பற்ற மாட்டேன்'' என்று ஒரு வீம்புக் குணத்தை வேறு மெல்ல வளர்த்துக் கொள்கிறோம்.

நம் வீட்டிலிருப்பவர்கள் வேண்டுமானால் நாம் விரும்புகிற மாதிரி எதையும் பக்குவமாக எடுத்துச் சொல்வார்கள். ஆனால் தெரிவில் வருகிறவர்கள், போகிறவர்கள், முன்பின் தெரியாதவர்கள் அப்படி நடந்து கொள்வார்கள் என எதிர்பார்க்க வேண்டாம். இவர்கள் முரட்டு முறையில்தான் எதையும் சொல்லித் தருவார்கள்.

நம்மைக் காரணத்தோடு கண்டிக்கும் எவரும் நமக்கு நன்மை செய்பவர்களே என்பதை நாம் முதலில் நம்பத் தொடங்க வேண்டும். நாம் விரும்புகிற வகையில் இவர்களுக்கு எடுத்துச் சொல்லத் தெரியவில்லை என்பதைத் தவிர இவர்கள் மீது எந்தக் குறையும் இல்லை.

இவர்கள் நமக்குப் பலாப்பழத்தை நீட்டுகிறவர்களைப் போல, அதைக் கையில் வாங்கும்போது சிறு முட்கள் குத்தும். ஆனால் நாம் உள்ளே உள்ள இனிப்பை எண்ணித் தான் அமைதியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

''நாலு கருத்தைச் சொன்னா நல்லதை எடுத்துக்குவா(ன்-ள்)'' என்று எப்போது நம் வட்டத்தில் பெயர் எடுக்கிறோமோ அப்போது தான் நம் வாழ்க்கையில் நல்ல திருப்புமுனைகள் அமையும்.

"சரிதான் போய்யா! எனக்குத் தெரியாததை நீ சொல்ல வந்துட்டே!'' என்று எதைச் சொன்னாலும் எதிர்வாதம் சொல்லி, தர்க்கம் பேசி, மற்றவர்களை மடக்குவதில் கவனம் செலுத்த ஆரம்பித்தால் இதுகிட்ட பேசிப் புண்ணியமில்லே! என்ற முடிவுக்கு நம்மை மாற்றியிருப்பவர்கள் வந்து விடுவார்கள். பிறகு, ''நீ கிணற்றில் விழப் போகிறாயாமே, நீ செய்வது ரொம்பக் கரெக்ட் !'' என்கிற அளவுக்குப் போய் விடுவார்கள். யார் சொல்கிறார்கள் என்பதைவிட என்ன சொல்கிறார்கள் என்பதையும் எப்படிச் சொல்கிறார்கள் என்பதைவிட, என்ன சொல்கிறார்கள் என்பதையும் அதில் நம்மீது இழையோடும் பாசமுகமான அக்கறையையும் பார்ப்பதுதான் புத்திசாலித்தனம்.

எதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடன் மனக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டால் வாழ்வில் வளர்ச்சி நிச்சயம்.

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






"இந்த உலகத்தின், மிகவும் கடினமான வேலை எனக்குப் பணிக்கப்பட்டாலும், நான் அதற்கு என்னைத் தயார் செய்துகொள்வேன்." - இது நடிகையாக புகழ்பெற்ற பின் ஜெயலலிதா சொன்னது. ஆனால், தொடக்கத்திலிருந்தே அவர் அப்படியான மனநிலையில் தான் இருந்திருக்கிறார். நடிக்க விருப்பமில்லை. ஒரு கட்டாயத்தின் பேரில் தான் நடிக்கத் தொடங்கினார். ஆனால், அதை அம்மு விளையாட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. படிப்பில், நாட்டியத்தில் எப்படித் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு, உச்சங்களைத் தொட்டாரோ அது போலத்தான் நடிப்பையும் கையாண்டார். விடுமுறை நாட்களில் தனக்குப் பிடித்த வேலையைச் செய்ய முடியவில்லையே என்ற எந்த ஆயாசமும் அவருக்கு இல்லை. தன் ஆன்மாவிலிருந்து சிறந்ததை எடுத்து வழங்கினார். அதனால் தான் என்னவோ... அவர் வேண்டாம் வேண்டாம் என்றாலும் அவருக்கு வாய்ப்பு வந்துகொண்டே இருந்தது.



ஆம், 'எபிசில்' ஆவணப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போதே... அவருக்கு அடுத்த வாய்ப்பு வந்தது. வாய்ப்புகள் யாருக்காகவும் காத்திருக்காது. அது, வரும் போது இறுகத் தழுவிக்கொள்ள வேண்டும் என்பார்கள். ஆனால், அவருக்காக வாய்ப்புக் காத்திருந்தது. நாட்கள் கணக்கில் அல்ல... மாதக்கணக்கில். அமெரிக்க நகைச்சுவை நடிகர் மில்டன், "வாய்ப்புகள் கதவைத் தட்டவில்லை என்றால், கதவுகளை நீங்களே உருவாக்குங்கள்..." என்றார். அம்முவுக்கு ஏறத்தாழ ஒன்பது மாதகாலம், வாய்ப்பு கதவைத் தட்டிவிட்டு, அவர் திறப்பார் என்று வாசலிலேயே காத்துக்கிடந்தது.

**காத்திருந்த வாய்ப்பு!**

சந்தியா அப்போது, 'நன்ன கர்த்தவ்யா' என்ற கன்னடப் படத்தில் நடித்துக்கொண்டிருந்தார். அதில், அவருக்கு மாமியார் வேடம். படத்தின் நாயகி, ஒரு பால்ய விதவை. அந்தக் கதாபாத்திரத்தில் நடிக்கச் சரியான நபர் கிடைக்கவில்லை. படத்தின் இயக்குநர் ராகவய்யா இதற்காக ஒரு நெடிய தேடுதல் வேட்டையையே நடத்திவிட்டார். ஆனால், பொருத்தமான நபர்தான் கிடைக்கவில்லை. ஒரு கட்டத்தில் சலிப்படைந்து, அந்தக் கதாபாத்திரம் சம்பந்தப்பட்ட காட்சிகளை விட்டுவைத்துவிட்டு, மற்ற காட்சிகளை எடுக்கத் தொடங்கிவிட்டார்கள். அந்தச் சமயத்தில்தான் மீண்டும் காலம், தன் விளையாட்டைத் தொடங்கியது. ஆம், ஒருநாள் வேறொரு வேலையாக சந்தியாவின் வீட்டுக்கு வந்த தயாரிப்பாளர்கள், அம்முவைப் பார்க்கிறார்கள். திரைப்படத்தில் ஒரு முக்கியமான காட்சியின் அதிர்வை பார்வையாளனுக்குக் கடத்த அலை, பறவைகள் எல்லாம் சில நொடிகளுக்கு உறைந்து நிற்குமே.... அதுபோல நின்றதா என்றெல்லாம் தெரியவில்லை. ஆனால், நிச்சயம் அந்தத் தயாரிப்பாளர்கள் இருவரும் திகைத்துத் தான் போய்விட்டார்கள். அதில், ஒருவர் வாய்விட்டே கூறிவிட்டார். "நாங்கள் தேடிய முகப் பொலிவுள்ள கதாநாயகி இதோ இங்கேயே இருக்கிறாரே... உங்கள் பெண்ணையே எங்கள் கதாநாயகியாகப் போடப் போகிறோம்" என்றார், ஒரு வாய்ப்பை வழங்கிய மனநிலையில். ஆனால், அதற்கு சந்தியா சம்மதிக்கவில்லை.

"முடியாது. அவளுக்கு அதில் விருப்பம் இல்லை. எனக்கும் கூடத்தான்... அவள படிக்க விரும்புகிறாள். தயவு செய்து வேறொரு நபரை தேடிக் கொள்ளுங்கள்" என்றார் மென்மையான மொழியில். வந்தவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அரை மனதுடன் கிளம்புகிறார்கள்.

ஆறு மாதங்கள் உருண்டோடிவிட்டன. முக்கியக் கதாபாத்திரம் இல்லாததால், நத்தை வேகத்தில் படப்பிடிப்பு நடந்துகொண்டு இருக்கிறது. அந்தச் சமயத்தில் மீண்டும் அந்தத் தயாரிப்பாளர்கள் சந்தியாவைச் சந்தித்து, "இன்னும் எங்கள் படத்துக்குக் கதாநாயகி அமையவில்லை. உங்கள் பெண்ணையே தயவு செய்து நடிக்க அனுமதியுங்கள்" என்கிறார்கள். மீண்டும்... மீண்டும் கேட்கிறார்கள். இவர்களை உதாசீனப்படுத்தவும் முடியாது. அதே சமயத்தில், அம்முவை நடிக்க அனுப்பவும் முடியாது. சரி... இன்னும் கொஞ்சம் காலத்தைக் கடத்திப் பார்ப்போம்.

ஒருவேளை, அதற்குள் இவர்கள் வேறொரு நாயகியைக் கண்டடையலாம் என்று சமயோசிதமாக யோசித்து இப்படியாகச் சொல்கிறார். "அம்முவின் படிப்புக் கெடக் கூடாது. அவளுக்குக் கோடை விடுமுறை வரும்வரை காத்திருப்பீர்களா?" என்று ஒப்புக்குக் கேட்கிறார். முடியாது என்று சொல்லி விட்டால் சந்தோஷம்... காத்திருக்கிறோம் என்று சொன்னாலும் பிழை இல்லை. இன்னும் மூன்று மாதங்கள் இருக்கின்றன. இதுதான் அப்போதைக்கு சந்தியாவின் எண்ணம்.

"சரி காத்திருக்கிறோம்..." என்கிறார்கள் தயாரிப்பாளர்கள். அந்த வாய்ப்பு மூன்று மாதகாலம், காதலிக்கு காத்திருக்கும் காதலன்போல, அம்முவின் வீட்டு வாசலிலேயே காத்திருக்கிறது. கோடை விடுமுறை வருகிறது. அந்தத் தயாரிப்பாளர்களும் வருகிறார்கள். "தொடர்ந்து நடிக்கச் செய்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி... உங்கள் மகளை இந்த முறை மட்டும் நடிக்க அனுமதியுங்கள்" என்று கேட்கிறார்கள். சந்தியாவுக்கு பலமான யோசனை. நிலைமை எல்லை மீறிப் போய்விட்டது. இனி எதுவும் செய்ய முடியாது. அம்முவை நடிக்க அனுப்பத்தான் வேண்டியதுதானோ... என்ற எண்ணம் எழுகிறது. சரி, அம்முவிடமே கேட்டுவிடுவோம் என்ற முடிவுக்கு வருகிறார்.



அம்முவிடம் நடந்த எல்லாவற்றையும் சொல்கிறார். "என்ன சொல்கிறாய் அம்மு...? எனக்கும் விருப்பம் இல்லை தான். தொடர்ந்து கேட்கிறார்கள். புறந்தள்ள முடியவில்லை... என்ன செய்யலாம்" என்று கேட்கிறார். அம்மு இதற்கு ஒப்புக்கொள்ளவே மாட்டார் என்பதுதான் சந்தியாவின் எண்ணமாக இருந்தது.

ஆனால், அன்று அம்மு என்ன மனநிலையில் இருந்தார் என்று தெரியவில்லை. "நான் திறமையாக நடிப்பேன் என்று உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் எனக்கு ஆட்சேபனை இல்லை" என்கிறார்.

வாசலில் ஒன்பது மாதகாலமாகக் காத்திருந்த வாய்ப்பு அம்முவை உற்சாகமாகத் தழுவிக்கொள்கிறது.

**கேட்காததையும் கொடுத்த கர்ணன்!**

"தேடுவதை நிறுத்து... விரும்பியது கிடைக்கும்" என்பார் ஓஷோ. ஆனால், அம்முவுக்குத் தொடர்ந்து விரும்பாதது எல்லாம் கிடைத்தது. ஆம், அம்முவுக்கு மீண்டும் இன்னொரு வாய்ப்பு வருகிறது. 'கர்ணன்' திரைப்படத்தின் 100 நாள் கொண்டாட்ட விழா ஒருங்கிணைக்கப்படுகிறது. அந்தப் படத்தில் சந்தியாவும் நடித்து இருந்தார் என்பதால், அவரும் விழாவுக்குச் செல்கிறார். கூடவே அம்முவும்.

அந்த நிகழ்ச்சியில் அம்முவைக் கண்ட இயக்குநர் - தயாரிப்பாளர் பி.ஆர்.பந்துலு, அம்முவை தான் எடுக்கப்போகும் கன்னடப் படத்தில் நடிக்கக் கேட்கிறார். மிக முக்கிய இயக்குநரிடமிருந்து வாய்ப்பு... மீண்டும் சந்தியாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. தயக்கத்துடன் மறுத்துப் பார்க்கிறார். ஆனால், பந்துலுவும் இந்தக் கோடை விடுமுறையிலேயே படப்பிடிப்பை முடித்துக்கொள்வதாகக் கூறுகிறார். அம்மு, 'சின்னட கோம்பே' படத்தில் ஒப்பந்தமாகிறார்.

பரபரப்பான சினிமா வாழ்வில் அம்மு அடி எடுத்து வைத்தது... சொல்லப்போனால், இந்தப் புள்ளியில் தான். கேட்பதைக் கொடுப்பவன் தான் கர்ணன். அந்த ராசிதானோ என்னவோ...? அதன் வெற்றி விழாவில் கலந்துகொண்ட அம்முவுக்குக் கேட்காததெல்லாம் கிடைத்தது.

ஒருவேளை, அன்று அந்தத் தயாரிப்பாளர்கள் வந்தபோது, அம்மு விளையாடப் போயிருந்தால் அல்லது நாட்டிய வகுப்புக்குச் சென்றிருந்தால்... சந்தியா, அம்முவை 'கர்ணன்' திரைப்படத்தின் வெற்றி விழாவுக்கு அழைத்துச் செல்லாமல் இருந்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்...? இன்று, தமிழக அரசியல் நிலவரம் எப்படி இருந்திருக்கும் என்றெல்லாம் தெரியவில்லை. ஆனால், எதுவெல்லாம் இருந்திருக்காது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

ஓ.பன்னீர்செல்வம் இரண்டு முறை முதல்வராக இருந்திருக்கமாட்டார். 'கபாலி' படத்தை ஜாஸ் சினிமாஸ் வெளியிட்டு இருக்காது. இதுக்கெல்லாம் மேலாக நீங்கள், இப்போது இந்தக் கட்டுரையைப் படித்துக் கொண்டிருக்க மாட்டீர்கள்.

(தொடரும்)

# ஆயிரத்து 548 மில்லியனை அரசு இன்னும் வழங்கவில்லை

## வடக்கு மாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு

வடக்கு மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான நிதியில் சுமார் ஆயிரத்து 548 மில்லியன் அரசாங்கம் இன்னமும் தரவில்லை என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டியுள்ளார். வடக்கு மாகாண சபையின் 69 ஆவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன்போது மாகாண ஒதுககீடு குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் வரையான காலப்பகுதியை நோக்கும் போது மீண்டுவரும் செலவீனத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 19,157.16 மில்லியன் தொகையில் ரூபா 17,522.29 மில்லியன் (92 வீதம்) செலவு செய்யப்பட்டுள்ளது. பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 475 மில்லியன் தொகையில் ரூபா 311.45 மில்லியன் (66 வீதம்) 30.11.2016 வரை செலவு செய்யப்பட்டுள்ளது. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 3,199.3 மில்லியன் தொகையில் ரூபா 1,941.78 மில்லியன் 30.11.2016 வரையில் (60வீதம்)செலவு செய்யபபட்டுள்ளது. எல்லா அமைச்சுக்களையும் சேர்த்தெடுத்துப் பார்த்தால் நடைமுறை முன்னேற்றம் 83 வீதம் வரை நடந்துள்ளது. எனினும் சுமார் 1548 மில்லியன் எமக்கு இன்னமும் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்க வேண்டியுள்ளது. வெளிநாட்டு நிதியுதவியின் கீழான மத்திய, மாகாண நிதி ஆளுகைக்குட்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்யபபட்ட ரூபா 4,993.7 மில்லியன் தொகையில் ரூபா 2,862.51 மில்லியன் (57 வீதம்) செலவு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் முக்கிய துறைகளை கவனத்திற் கொள்ளும்போது விவசாயத்துறையில் விவசாய உற்பத்திகளில் அதிகளவு வெளியீட்டுத்தன்மையை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தரமான உயர்ந்த இன விதை வகைகள், நவீன தொழில்நுட்ப வசதிகள், காலத்தின் தேவைக்கேற்ப விவசாயிகள், விவசாயத்துறை அலுவலர்களிற்கான வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உட்கட்டுமான வசதிகளின் விருத்தி ஆகியவற்றின் மூலம் இவ்வருடம் கணிசமான முன்னேற்றத்தினை காணக் கூடியதாகவுள்ளது. இதே போல் கால்நடைத்துறையும் மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தக்கூடிய துறையாக காணப்படுகின்றது. நாட்டின் தேசியக் கொள்கைக்கு அமைவாக உணவுப் பாதுகாப்புக் கொள்கையின் அடிப்படையில் போசாக்கான உணவு வகைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள், சந்தைப்படுத்தல் வசதிகள், நவீன பால் பதனிடும் முறைகள் மற்றும் நவீன நுட்பங்கள் உள்வாங்கப்பட்டு கால்நடைத்துறையானது வடமாகாண நடுத்தர மற்றும் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.


விவசாயம் மற்றும் கால்நடை ஆகிய துறைகளை மேலும் வலுவூட்டக்கூடிய வகையில் நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்தியும் முக்கிய பங்காற்றுவதை இவ்விடத்தில் கூறிவைக்க வேண்டியுள்ளது. வட மாகாணத்தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டமான இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டமானது துரிதமாக புனரமைப்புச செய்யப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எதிர் காலத்திலும் இவை அனைத்தும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமைவன என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை. வடமாகாணத்தில் கல்வித்துறையினை நோக்கும் போது பல்வேறு நிதிமூலங்களூடாக உட்கட்டுமான வசதிகள், நவீன தொழில்நுட்ப வசதிகளை உட்புகுத்தல், தளபாடங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கல் மற்றும் கல்வித்துறைசார் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்வேறு செயற்றிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் குறிப்பிடத்தக்களவில் ஆசிரியர் பற்றாக்குறையும் வருடாந்தம் நிவர்த்தி செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இருந்தாலும் வடமாகாணத்தின் கல்வி நிலையினை ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது அதிக கவனம்செலுத்த வேணடிய தேவைப்பாடு இன்றியமையாததாகவுள்ளது.

சுகாதாரத்துறையும் வட மாகாணத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றுகின்றது. 2016ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தினூடாக வைத்தியசாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய சுகாதார நிலையங்கள் அபிவிருத்தி, வைத்தியர்கள் மற்றும் தாதிகளுக்கான விடுதிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களுக்கான உட்கட்டுமான அபிவிருத்திகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இம்மாகாணத்தின் சுகாதாரக்குறிகாட்டிகள் முன்னேற்றம் அடைந்திருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. எதிர்காலத்தில் வடமாகாணத்தின் சுகாதாரத்துறை மேம்பாட்டினை தொடர்ச்சியாகப் பேணும் வகையில் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவன.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்புக்களுக்கூடாக வட மாகாணத்தின் வீதி அபிவிருத்திச் செயற்பாடுகளும் கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்திருப்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இருப்பினும் வடமாகாணத்தில் காணப்படும் C மற்றும் D தரத்திலான 1,747.77 கிலோ மீற்றர் வீதிகள் புனரமைக்க வேண்டியிருப்பதுடன் 6,170.42 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளும் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன. 2017ஆம் ஆண்டு வீதி அபிவிருத்திப் பணிகள், கிராமியப்பாலங்கள் அமைத்தல் போன்றவற்றிற்கான ஐரோட் போன்ற புதிய முதலீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறை, வீடமைப்பு போன்றவற்றுக்கான அதிக தேவைப்பாடுகள் காணப்படினும் எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி மூலம் சிறிய அளவிலானதான தேவைப்பாட்டினையே எம்மால் பூர்த்தி செய்ய முடிகின்றது. இவற்றிற்காக இனங்காட்டப்பட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுப்பது இன்றியமையாததாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 928

**ரவிந்த்**





**மரியதாஸ்**



**சங்கவி**




**கார்த்தி**




**ஜெசி**




**றாதை**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# சிறுவர் அரங்கம்

## ராமுவின் ஆசை

லட்சுமிபுரம் என்ற குக்கிராமத்தில் வசித்து வந்த ராமு மிகவும் கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தான்.

தினசரி கூலி வேலை செய்து அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தை வைத்து காலம் கழிப்பது மிகவும் கடினமாக இருந்தது.


அவனுடைய மனைவி அவனிடம் பட்டணத்திற்குச் செல்லுமாறு பலமுறை கூறியும் அவனுக்கு அதில் விருப்பமில்லை.

ஓரிரவு உறக்கத்தில் வடை சாப்பிடுவது போல கனவு கண்ட ராமு, மறுநாள் அதைப் பற்றித் தன் மனைவியிடம் சொன்னான்.

அதற்கு அவள், "குடிப்பதற்கு கஞ்சிக் குக்கூட வக்கில்லை. இதில் வடை சாப்பிடும் ஆசை தேவைதானா?" என்று இளக் காரமாகக் கேட்டாள்.

தொடர்ந்து, "எத்தனை நாட்களாக உங்களைப் பட்டணம் சென்று சம்பாதிக்கச் சொல்லி கொண்டு இருக்கிறேன்! கேட் கிறீர்களா? இங்கு இவ்வாறு உட்கார்ந்து இருந்தால், நாம் வாழ்நாளெல்லாம் வேத னைப்பட வேண்டியதுதான்!" என்று மிகவும் அலுத்துக் கொண்டாள்.


பிறந்ததிலிருந்து தன் கிராமத்தை விட்டு வெளியே சென்றறியாத ராமுவிற்கு முன்பின் தெரியாத பட்டணம் செல்வது இனமறியாத பயத்தை உண்டாக்கியது.



"சரிசரி! வாங்க, வந்து கஞ்சியைக் குடித்து விட்டுப் போங்க!" என்று அவன் மனைவி அழைக்க, அவன் கஞ்சிக் கலயத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தான்.

அப்போது, பக்கத்து வீட்டுக் குழந்தை தள்ளாடித் தள்ளாடி அவர்களுடைய வீட்டிற் குள் மெல்ல நுழைந்தது.

அவ்வாறு அது நடந்து வரும்போது, அதனுடைய கால் பட்டு இடறி, கஞ்சிக் கலயம் கவிழ்ந்து, கஞ்சி தரையில் கொட்டியது. அன்று முழுப்பட்டினியுடன் ராமு கூலி வேலை தேடிச் சென்றான்.



கிராமத்து கணக்குப் பிள்ளை வீட்டை அடைந்து அவரிடம் ஏதாவது வேலை இருக்கிறதா என்று கேட்டான்.

அப்போது அவர் வீட்டிலிருந்து வடை சுடும் வாசனை வீசியது. "இன்று எங்கள் வீட்டில் என் தந்தைக்கு சிரார்த்தம் நடக்கிறது. நீ கிணற்றிலிருந்து நீர் இரைத்துத் தொட்டியை நிரப்பு!" என்று வேலை கொடுத்தார். ராமு மிக உற்சாகமாக வேலையில் இறங்கினான்.

வேலை செய்து முடித்தவுடன், கணக்குப் பிள்ளையின் மனைவி அவனுக்குக் கூலி கொடுத்தாள்.

ஆனால் கூலியுடன் வடையையும் எதிர்பார்த்த ராமு வெட்கத்தை விட்டு, "அம்மா! எனக்கு இரண்டு வடை கொடுங்களேன்!" என்று கெஞ்சினான்.

"வடையா? எனக்கே வடை கிடைக்கவில்லை! போய்வா!" என்று அவள் அனுப்பி விட்டாள். ஏமாற்றத்துடன் ராமு செட்டியார் கடையை நோக்கி நடந்தான்.

அவனைக் கண்டதும் செட்டியார் உற்சாகத்துடன், "வா ராமு! எங்கள் வீட்டில் வடை சுடப் போகிறார்கள்! இருந்து, சாப்பிட்டுப் போ! அதுவரையில், அரிசி மூட்டைகளை எடுத்துவை!" என்றார்.

உடனே ராமு உற்சாகத்துடன் வேலை செய்ய ஆரம்பித்தான்.

அப்போது, செட்டியார் வீட்டுப் பையன் ஓடி வந்து, வடை சுடும் போது அம்மாவின் கையில் கொதிக்கும் எண்ணெய் கொட்டி விட்டது!" என்று கூற, செட்டியார் கடையை மூடி விட்டு விரைந்து சென்றுவிட்டார்.

போகுமுன், அவனுக்குக் கூலியாக சிறிது அரிசிக் குருணை தந்து விட்டுச் சென்றார். (தொடரும்...)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2016
15

- 1256 - மொங்கோலியப் பேரரசன் குலாகு கான் அலாமுட் (இன்றைய ஈரானில்) என்ற இடத்தைக் கைப்பற்றி அழித்தான்.
- 1799 - முற்றிலும் உள்ளூர் மக்களைக் கொண்ட முதலாவது ஆங்கில செமினறி கொழும்பில் அமைக்கப்பட்டது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கூட்டமைப்புப் படைகளை டென்னசியில் முற்றாகத் தோற்கடித்தனர்.
- 1891 - ஜேம்ஸ் நெய்ஸ்மித் கூடைப்பந்தாட்டத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தினார்.
- 1905 - அலெக்சாண்டர் புஷ்கினின் கலாசாரப் பழமைகளைப் பேணும் பொருட்டு சென் பீட்டர்ஸ் பேர்க்கில் புஷ்கின் மாளிகை அமைக்கப்பட்டது.
- 1914 - ஜப்பானில் மிட்சுபிஷி நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 687 பேர் கொல்லப்பட்டனர்.
- 1941 - பெரும் இன அழிப்பு: உக்ரேனின் ஆர்க்கிவ் நகரில் 15,000 யூதர்கள் நாசிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1960 - மன்னர் மகேந்திரா நேபாளத்தின் அரசைக் கலைத்து நாட்டின் முழு அதிகாரத்தையும் தனதாக்கிக் கொண்டார்.
- 1965 - த சவுண்ட் ஒஃப் மியூசிக் திரைப்படம் வெளியானது.
- 1967 - ஒகையோவில் ஒகையோ ஆற்றிற்கு மேலே செல்லும் வெள்ளிப் பாலம் உடைந்து வீழ்ந்ததில் 46 பேர் கொல்லப்பட்டனர்.
- 1970 - சோவியத் ஒன்றியத்தின் வெனேரா 7 விண்கலம் வெள்ளி கோளின் மேற்பரப்பில் மெதுவாக இறங்கிய முதலாவது கலமாகும். இதுவே வேறொரு கோளின் மீது இறங்கிய முதலாவது விண்கலமாகும்.
- 1970 - தென் கொரியப் பயணிகள் கப்பல் கொரிய நீரிணையில் மூழ்கியதில் 308 பேர் கொல்லப்பட்டனர்.
- 1978 - மக்கள் சீனக் குடியரசை அங்கீகரிப்பதாகவும் தாய்வானுடனான உறவுகளைத் துண்டிப்பதாகவும் அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் அறிவித்தார்.
- 1994 - இணைய உலாவி நெட்ஸ்கேப் நவிகேட்டர் 1.0 வெளியிடப்பட்டது.
- 1995 - ஈழத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து திருச்சியில் "அப்துல் ரவூஃப்" என்பவர் தீக்குளித்து இறந்தார்.
- 1997 - தஜிகிஸ்தான் விமானம் ஒன்று ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜா விமானநிலையத்திற்கு அருகில் வீழ்ந்து நொறுங்கியதில் 85 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997 - தென் கிழக்கு ஆசியாவை அணுவாயுதமற்ற பகுதியாக அறிவிக்கும் உடன்படிக்கை பாங்கொக்கில் கையெழுத்திடப்பட்டது.
- 2001 - பீசாவின் சாயும் கோபுரம் 11 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டது.
- 2006 - கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கொழும்பில் இனம் தெரியாத ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 37 - நீரோ மன்னன், ரோமப் பேரரசன். (இ.68)
- 1832 - அலெக்சாந்தர் கஸ்டவ் ஈபல், பிரெஞ்சுப் பொறியியலாளர். (இ. 1923)
- 1852 - ஹென்றி பெக்கெரல், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர். (இ. 1908)
- 1936 - சோ. ந. கந்தசாமி, தமிழறிஞர்.
- 1945 - வினு சக்ரவர்த்தி தமிழ் திரைப்பட நடிகர்.
- 1971 - ஜீவ் மில்க்கா சிங், இந்திய கோல்ஃப் விளையாட்டு வீரர்.

### இறப்புகள்

- 1675 - ஜொஹானெஸ் வெர்மீர், நெதர்லாந்து நாட்டு ஓவியர் ஆவார். (பி. 1632)
- 1950 - சர்தார் வல்லபாய் பட்டேல், இந்திய அரசியல் தலைவர். (பி. 1875)
- 1966 - வால்ட் டிஸ்னி, கார்ட்டூன் ஓவியர். (பி.1901)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 | 80 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 110 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 | 150 | 80 | 120 | 60 |
| தக்காளி | 50 | 80 | 45 | 70 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 40 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 30 | 80 | 20 | 30 | 60 | 60 | 50 |
| கரட் | 100 | 80 | 90 | 80-120 | 90 | 160 | 100 |
| பூசணி | 40 | 50 | 35 | 50 | 40 | 60 | 50 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 | 50 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 80 | 45 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 95 | 100 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 180 | 600 | 180 | 200 | 180 | 240 | 150 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 100 | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 70 | 80 | 60 |
| பயற்றங்காய் | 140 | 250 | 150 | 180 | 140 | 200 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 95 | 100 | 120 | 160 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 50 | 60 | 60 | 120 | 60 |
| கறிமிளகாய் | 150 | 140 | 130 | 200 | 140 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 350 | -- | 200 | 300 | 180 | 160 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 200 | 200 | 140 | 200 |
| கத்தரித்தம்பு ள்ள | 70 | – | 50 | 60 | – | 60 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 50 | – | 40 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 400 | 400 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 50 | 20-40 | 50 | 25 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 350 | 600 | – | – | 300 | – | 300 |
| வெங்காயப்பூ | 200 | 200 | – | – | -- | – | -- |
| முள்ளங்கி | 60 | 100 | 50 | 60 | 50 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 30 | 15 | 10 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | 120 | – | 80 | 60 | 80 | 60 |

# இலங்கையும் சித்திரவதைகளும்



இலங்கையில் அரசியல் மாற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்புத் தொடர்பாக வாக்குறுதிகளை வழங்கியதன் மூலம் ஆச்சரியமூட்டும் வகையில் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார்.

தற்போதைய இலங்கை அரசாங்கமானது தன்னால் வழங்கப்பட்ட இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் எவ்வளவு தூரம் பணியாற்றியுள்ளது என்பது தொடர்பாக கடந்த புதனன்று சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபை ஆணைக்குழு வினவியது.

இலங்கை பொலிஸாரால் தொடர்ந்தும் சித்திரவதைகள் முன்னெடுக்கப்படுதல் தொடர்பாகவும் இந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியதுடன், 2009 இல் நிறைவுற்ற 26 ஆண்டுகால கொடிய யுத்தத்தின் இறுதியில் இலங்கை பாதுகாப்புப் படையினரால் பல்வேறு போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்ட போதிலும் அவை தொடர்பாக துரித விசாரணை மேற்கொண்டு தண்டனை வழங்குவதற்கு இலங்கையின் தற்போதைய அரசாங்கம் தவறியுள்ளதாகவும் ஐ.நா. ஆணைக்குழு சுட்டிக்காட்டியது.

ஜெனிவாவில் நவம்பர் மாத முடிவில் இரண்டு நாட்கள் இடம்பெற்ற ஐ.நா.ஆணைக்குழுவான 'சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழு'வில் மாநாட்டின் போது இலங்கையில் தொடரப்படும் சித்திரவதைகளும் ஆராயப்பட்டன. இலங்கை பொலிஸாரின் குற்றப் புலனாய்வுப் பிரிவுத் திணைக்களத்தால் தொடர்ந்தும் இவ்வாறான சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதற்கான வலுவான ஆதாரங்கள் காணப்படுவது தொடர்பில் கவலை கொள்வதாக சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழு தெரிவித்தது.

இவ்வாறான சித்திரவதைகள் தொடர்பாக விசாரணை செய்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் வெளிப்படையாகத் தயக்கம் கொள்வது தொடர்பாகவும் சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழு தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

'பாதுகாப்புத் துறையில் நிறுவக ரீதியான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை' என இலங்கையின் மனித உரிமை நிலைப்பாடு தொடர்பாக ஆராய்ந்த ஆணைக்குழுவில் அங்கம் வகித்த இரண்டு வல்லுநர்களில் ஒருவரான பீலிஸ் டி.காயர், ஜெனீவாவில் நடந்திய ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

'இலங்கையினால் வாக்குறுதி வழங்கப்பட்ட பல்வேறு விடயங்கள் இன்னமும் நிறைவுபடுத்தப்படாது உள்ளன. ஆகவே இங்கு தொடர்ந்தும் சித்திரவதைகள் இடம்பெறுகின்ற போதிலும் அது தொடர்பாக விசாரணை செய்யப்படாத நிலை காணப்படுகிறது' என காயர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவும் நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்துவதாக வாக்குறுதி அளித்த போதிலும், நாட்டின் பலம்மிக்க பாதுகாப்புத் துறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதில் அச்சம் கொள்வதன் காரணமாக இதில் தாமதம் காணப்படுவதாக சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழுவால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது மனித உரிமைச் செயற் பாட்டாளர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு யுத்தத்தின் இறுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது 40 ஆயிரம் வரையான தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக ஐ.நா. வல்லுநர் குழு மதிப்பீடு செய்தது.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் பலவந்தமாகக் காணாமற் போதல்கள் போன்ற பல்வேறு பயங்கரமான மீறல்கள் இடம்பெற்றுள்ளதை விசாரணையாளர்கள் விரிவாக ஆவணப்படுத்தியுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றி கொண்ட பின்னர், உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக் குழு ஒன்றை உருவாக்குவேன் எனவும் போரின் போது காணாமற்போன பல பத்தாயிரக் கணக்கான பொதுமக்களுக்கு என்ன நடந்தது என்பதை விசாரணை செய்வதற்கான அலுவலகம் ஒன்றையும் உருவாக்குவேன் எனவும் கடந்த காலத்தில் இடம் பெற்ற பல்வேறு மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கான நீதிசார் பொறிமுறை ஒன்றை உருவாக்குவேன் எனவும் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

இந்நிலையில், இலங்கையால மேற்கொள்ளப்பட வேண்டிய மனித உரிமை தொடர்பான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கூறல் போன்றவற்றிலிருந்து தனது நாட்டை விடுவிப்பதற்கு உதவுமாறு அமெரிக்காவில் தற்போது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் **ஜே ட்ரம்ப்பிடம் எழுத்து மூலம்** ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மாதம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் இந்த விடயத்தில் உதவுமாறு தற்போது ஐ.நா. செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள போர்த்துக்கலைச் சேர்ந்த அன்ரோனியோ குரேரெசிடமும் கோரிக்கை விடுவதற்கும் மைத்திரி திட்டமிட்டுள்ளார்.

'மைத்திரி தனது நாட்டை போர்க் குற்ற வழக்கிலிருந்து விடுவிப்பதற்கு ட்ரம்ப்பிடம் உதவி கோருவது உண்மையாக இருந்தால் இது ஏற்கனவே நடைமுறையிலுள்ளதையே மீளவும் செயற்படுத்தத் தூண்டுகிறது' என அனைத்துலக நெருக்கடிகள் குழுவைச் சேர்ந்த இலங்கை வல்லுநர் அலன் கீனன் தெரிவித்தார்.

'ஏற்கனவே ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாது காலத்தை இழுத்தடிக்கிறார்கள் என்கின்ற சந்தேகம் காணப்படுகிறது. ஆனால் காலம் செல்லச் செல்ல இந்தச் சந்தேகம் மேலும் அதிகரித்துள்ளது' என அலன் கீனன் தெரிவித்தார்.

கடந்த யுத்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பணியாற்றுவதற்காக மைத்திரிபால சிறிசேனவால் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான தேசிய திட்டம் போன்ற சில பொறிமுறைகள் உருவாக்கப்பட்ட போதிலும் கடந்த காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாகவும் பல்வேறு மீறல்கள் தொடர்பாகவும் விசாரணை செய்து குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கான எவ்வித சட்ட நடவடிக்கையையும் மைத்திரி முன்னெடுக்கவில்லை என சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இலங்கையில் தற்போதும் தொடரும் வெள்ளை வான கடத்தல்கள், மறைவான தடுப்புச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் காணாமற்போனவர்கள் போன்ற பல்வேறு மீறல்கள் தொடர்பாகவும் சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் நம்பகமான சாட்சியப் பாதுகாப்பற்ற நிலையில் தொடர்ந்தும் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் குழுவில் இலங்கையின் தேசிய புலனாய்வுப் பொறுப்பதிகாரி சிசிர மெண்டிஸ்ம் அங்கம் வகித்தமை இலங்கையில் எவ்வளவு தூரம் மனித உரிமை மதிக்கப்படுகிறது என்பதற்கான ஒரு எச்சரிக்கையை எழுப்பியுள்ளதாகவும் காயர் குறிப்பிட்டார்.

மெண்டிஸ் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற ஜூன் 2009 இற்கு முன்னர் 15 மாதங்களாக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் பிரதி பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றியிருந்தார்.

'யுத்தத்தின் நிறைவில் இலங்கையில் இயங்கிய தடுப்பு நிலையங்களுக்குமான கட்டளைப் பொறுப்பு நிலையை மெண்டிஸ் வகித்திருந்தார். இவர் இந்தப் பதவியை வகித்த காலப்பகுதியில் பல்வேறு பயங்கரமான மீறல் சம்பவங்கள் இடம்பெற்றன' என காயர் சுட்டிக்காட்டினார்.

சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழுவால் மெண்டிஸிடம் பல்வேறு வினாக்கள் வினவப்பட்ட போதிலும், அவர் கூட்டத்தொடரில் இருந்த போது ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என காயர் மேலும் தெரிவித்தார்.

ஆங்கில மூலம் - NICK CUMMING-BRUCE
வழிமூலம் - New York Times
மொழியாக்கம் - நித்தியபாரதி

# செய்தித்துளிகள்

## ஜெய்ப்பூர் நிறுவனம் பூட்டப்பட்டிருக்கும்

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனமானது வருடாந்த விடுமுறைக்காக எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 30.12.2016 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பூட்டப்பட்டிருக்கும் என்பதை அரச திணைக்களங்கள், மாகாண சமூக சேவைகள் திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நிறுவனப் பயனாளிகளின் கவனத்திற்காக அறியத் தருகின்றோம்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஜெய்ப்பூர் நிறுவனம் மீளவும் தனது வழமையான கடமைகளை ஆரம்பிக்கும் என தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (இ-3)

## திருவாசக முற்றோதல் வெள்ளியன்று

யாழ்.சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறும். பங்குபற்ற விரும்பும் அடியார்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சகல வசதிகளுடன் பல் வைத்தியசாலை

நாட்டின் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையுடன் இணைந்ததாக சகல வசதிகளையும் கொண்ட பல் வைத்தியசாலையொன்று விரைவில் அமைக்கப்படுமென்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். கொழும்பு தேசிய வைத்தியசாலை சகல மருத்துவ வசதிகளையும் கொண்ட வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்ய 130 கோடி ரூபா முதல் கட்டமாக ஒதுக்கப்பட இருப்பதாகவும் 150 கோடி ரூபா இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளுக்கென வழங்கப்பட இருப்பதாகவும் நம்பிக்கை வெளியிட்டார். (இ-10)

## 'தேடும் சிட்டுக்கள்' சிறுவர் சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று

சுகவாழ்வு நிலையத்தின் தேடும் சிட்டுக்கள் எனும் சிறுவர் சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள கலைத்தூது கலையகத்தில் சுகவாழ்வு நிலைய இயக்குநர் அருட்பணி அ.ம.பி.செலஸ்ரீன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமலமரித் தியாகிகள் சபையின் யாழ்.மாகாண முதல்வர் அருட்பணி செ.எட்வின் வசந்தராஜா,சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன், யாழ்.மாவட்ட செயலக உளவளத் துணை இணைப்பாளர் ந.உதயகுமார், கொழும்புத்துறை இறையியல் கல்லூரி அதிபர் ஆ.டேனியல், உரும்பிராய் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயக் குருக்கள் சிவ பிரம்மஸ்ரீ இராஜகந்தசன் நிர்மலேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் "தேடும் சிட்டுக்கள்" சஞ்சிகை மதிப்பீட்டாளராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (இ-3-5)

## மறைந்த முதல்வர்கள் நினைவு கூரல்




கார்த்திகை தீபம் ஏற்றி மறைந்த தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவினையும் எம்.ஜி. இராமச்சந்திரனையும் நினைவு கூர்ந்தார் யாழ் எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கம். (இ-4)

## புத்தகங்கள் கையளிப்பு



யாழ்.நீர்வேலி சி.சி.த.க. பாடசாலைக்கு ஒரு தொகுதி புத்தகங்கள், யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜனால் அன்பளிப்பாக பாடசாலை அதிபர் எஸ்.ரவீந்திரனிடம் நேற்றைய தினம் யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. (இ-சி)

# முதலமைச்சரால் வீடு கையளிப்பு



வட மாகாண முதலமைச்சரின் அமைச்சின் 2016 ஆம் ஆண்டிற்கான வீடமைப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வரும் வீடுகளில் யாழ்ப்பாணம் கைதடி மத்தியில் புதிதாக கட்டப்பட்ட வீடு ஒன்றினை வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றைய



தினம் பயனாளியிடம் கையளித்தார்.

ஒவ்வொரு ஆண்டிலும் வீடமைப்புத் திட்டத்திற்காக ஒதுக்கப்படுகின்ற குறைந்தளவு நிதியில் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் மத்திய அரசின் வீடமைப் புத்திட்டங்களில் உள்ளடக்கப்படாது விடப்பட்டு வீடு அவசியம் தேவையாக உள்ள குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றவர்களுக்கு இந்த நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இந்தவருடம் யாழ் மாவட்டத்தில் 6 வீடுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 3 வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 வீடுகளும் மற்றும் மன்னார், வவுனியா மாவட்டங்களில் தலா 2 வீடுகளுமாக மொத்தமாக 17 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அமைச்சின் நிதி 7 இலட்சத்து 50 ஆயிரம் (750,000) ரூபாவும் பயனாளியின் பங்களிப்பு தொகை ஒரு இலட்சத்து 55 ஆயிரம் (155,000) ரூபாவுமாக மொத்தம் ஒவ்வொரு வீடும் தலா 9 இலட்சத்து 5 ஆயிரம் (905,000) ரூபா பெறுமதியில அமைக்கப்பட்டு வருகிறது. இதில் பயனாளியின் பங்களிப்பினை அவர்களால் முற்றாக வழங்க முடியாத நிலையில் அவர்களது குடும்பங்கள் காணப்படுவதால் 2017 ஆம் ஆண்டில் அமைச்சால் ஒதுக்கப்படும் தொகையினை அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

# தேவாலய தாக்குதலுக்கு ஐ.எஸ். பொறுப்பேற்பு

(கெய்ரோ)

கெய்ரோவில் உள்ள மிகப்பழமை வாய்ந்த கிறிஸதவ தலைமை தேவாலயத்தில் அண் மையில் 25 உயிர்களை பறித்த மனிதகுண்டு தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் பொறுப்பேற் றுள்ளது.

பண்டைக்காலத்தில் எகிப்து நகரின் தலைநகராக விளங்கிய அல்க்ஸாண்ட் ராவில் கிறிஸ்துவுக்கு பின்னர் முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களில் ஒரு வரான மாற்கு உருவாக்கிய பழைமை யான தேவாலயம் ஒன்று அமைந் துள்ளது.

எகிப்து நாட்டின் கிறிஸ்தவ மதத்தினருக்கான தலைமை மதகுரு வாழும் இந்த தேவாலயம் மாற்கு தேவாலயம் என்றும் அழைகக்கப்படு கிறது. தற்போதைய கெய்ரோ நகரின் அப்பாஸியா பகுதியில் அமைந்துள்ள இந்த தேவாலயத்தின் அருகே கடந்த ஞாயிற்றுக் கிழமை தீவிரவாதிகள் நடத்திய மனிதகுண்டு தாக்குதலில் 25இறதும் அதிகமானோர் உயிரிழந ததோடு பலர படுகாயம் அடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு தற் போது ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. மேற்கண்ட தாக்குதலை நடத்திய தற்கொலைப் படை தீவிரவாதியான அபு அப்துல்லா அல்-மஸ்ரி என்பவனை தியாகியாக புகழ்ந்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் செய்திக்குறிப்பு, எகிப்தில் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான எங்கள் போர் தொடரும் என்றும் எச்சரித்துள்ளது. (இ-3)

# கல்லறையில் கல்யாணம்



சென்னை மெரீனாவில் உள்ள மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் சமாதிக்கு முன்பு கொளத்தூரைச் சேர்ந்த ஒரு ஜோடி திருமணம் செய்து கொண்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதி தமிழக முதல்வர் ஜெயலலிதா காலமானார. அவரது உடல் சென்னை மெரீனாவில் உள்ள எம்.ஜி.ஆர். சமாதி அருகே அடக்கம் செய்யப்பட்டுள் ளது.

இந்த நிலையில், சென்னை கொளத்தூரைச் சேர்ந்த பிரான் சிஸ்-ரெஜலா ப்ரீத்தி ஜோடிக்கு வரும் பெப்ரவரி முதலாம் திகதி திருமணம் நடக்க இருந்தது.

இந்த திருமணத்தில் கலந்து கொள்வதாக ஜெயலலிதா தரப்பில் உறுதி அளிக்கப்பட்டதாம். இதனிடையே, ஜெயலலிதா மரணம் அடைந்தார்.

இந்த நிலையில், நேற்று மெரீனாவில் உள்ள ஜெயலலிதா சமாதிக்கு பிரான்சிஸ்-ரெஜலா ப்ரீத்தி ஜோடி உறவினர்களும் வந்து திருமணத்தை நடத்தியுள்ளனர்.

சமாதி முன்பு இருவரும் மாலை மாற்றிக் கொண்டு திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு உறவினர்கள் வாழ்த்து தெரிவித்தனர். (இ-10)

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 12

"மேடம் நீங்கள் நல்லபடியாக வீடு போய் சேர்ந்தீர்கள் என்ற செய்தி வரும் வரை நான் சாப்பிடாமல் தான் இருப்பேன். நல்லபடியாக சென்றடைந்தீர்கள் என்ற தகவல் வந்த பிறகே சாப்பிடுவேன். அதனால் நீங்கள் நல்லபடியாக சென்றடைந்தேன் என்ற தகவலை எனக்கு கிடைக்க வழி செய்தால் எனக்கு நிம்மதி என்று நான் கூறியபோது அவரும் சாந்தமான முகத்தோடு ஒன்றும் பிரச்சினை இல்லை. அப்படியே செய்கிறேன் என்று கூறிவிட்டு கிளம்பிப்போனார்."



...அதை அவர் விரும்பவில்லை. 'அவர்களும் நிரபராதிகள்தான்' என்று சொல்ல வந்தேன். 'ஒரு தேசத்தின் மிகப் பெரிய தலைவர், முன்னாள் பிரதமரின் கொலை வழக்கு, இவ்வளவு மோசமாகவா விசாரணை நடத்தப்பட்டது?' என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாகவும் அவரது கோபம் இருந்திருக்கலாம்.

எங்களின் சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கு மேல் நீண்டது. 50 நிமிடங்கள் வரை நான் சொன்ன விளக்கத்தை எல்லாம் உள்வாங்கிக் கொண்டே, சின்னச் சின்னக் கேள்விகளை எழுப்பியிருந்தார். நான் பேசி அவர் கேட்க வேண்டும் என்ற அவசியமே இல்லை. அவருக்கு வேண்டிய விளக்கங்களை, சந்தேகங்களைப் பெற்றுக் கொள்ள எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஆனால், அதையெல்லாம் பார்க்காமல், என்னிடம் வந்தார். என்னைச் சுதந்திரமாகப் பேசவிட்டு கேட்டுக்கொண்டிருந்தார். தேவையான இடங்களில் மட்டுமே குறுக்கிட்டுப் பதில் பெற்றார். மற்றபடி என்னை முற்றாகப் புறக்கணித்து விடவில்லை என்பதே அவரின் மேலான குணத்தைக் காட்டியது.



எல்லாமும் பேசி முடித்து அவர் கிளம்பியபோது, 'மேடம், நீங்கள் நல்லபடியாக வீடு போய் சேர்ந்தீர்கள் என்ற செய்தி எனக்கு வரும்வரை நான் சாப்பிடாமல் தான் இருப்பேன். நல்லபடியாக சென்றடைந்தீர்கள் என்ற தகவல் வந்த பிறகே சாப்பிடுவேன். அதனால், நீங்கள் நல்லபடியாக சென்றடைந்தேன் என்ற தகவலை எனக்கு கிடைக்க வழி செய்தால் எனக்கு நிம்மதி' என்று நான் கூறியபோது அவரும் சாந்தமான முகத்தோடு, 'ஒன்றும் பிரச்சினை இல்லை. அப்படியே செய்கிறேன்' என்று கூறிவிட்டுக் கிளம்பிப் போனார்.

நான் இப்படிக் கேட்டதற்கு எனது 17 வருடகால வலியே காரணம். போகிறபோது தற்செயலாக ஏதாவது அவருக்கு நடந்தாலும் அந்தப் 'பழி' என்னை வந்து சேர்ந்துவிடும் என்ற பயம் என்னை கவ்விக்கொண்டிருந்தது. அப்படி மீண்டும் ஒரு பழி வருவதை தாங்கும் சக்தி துளி அளவும் இல்லை. ஏற்கனவே நடைபிணமாக உள்ளோம். இனி என்ன இருக்கிறது?

சொன்னபடியே அடுத்த நாள் மதியம் நான் உணவை மறுத்து இருந்தேன். அந்தத் தகவல் சிறை அதிகாரிக்குப் போனது. அவர் டில்லிவரை தொடர்பு கொண்டு விசாரித்து, 'மேடம் நல்லபடியாக வீடு போய் சேர்ந்திருக்கிறார்' என்ற தகவலை மாலையில் கூறி அனுப்பினார். அதன் பிறகுதான் நான் இரண்டாவது நாளன்று இரவு உணவைச் சாப்பிட்டேன்.

இந்தச் சந்திப்பை பற்றி நான் வெளியில் யாரிடமும் சொல்லவில்லை. சட்டத்தரணியையும் அம்மாவையும் வரவழைத்து அவர்களிடம் மட்டும் சொல்லி வைத்தேன். அவர்களும் அதை வேறு யாரிடமும் கூறவில்லை. கமுக்கமாகவே வைத்திருந்தார்கள். பிரியங்கா அவர்கள் சந்தித்துச் சென்ற பிறகு 11 நாள் கழித்து தான் என் கணவர் என்னைச் சந்திக்க வந்தார். அவரிடம் இதைச் சொன்னேன். ஒரு மாதம் கழித்து வேறு ஒரு சட்டத்தரணி மூலம் அந்தத் தகவல் பரப்பப்பட்டது. அதன் பிறகு எங்கள் சந்திப்பின் சாதக பாதகம் பற்றி ஊடகங்கள் விதம்விதமாக எழுதித் தள்ளின. நாங்கள் வெளியிடாத இரகசியம் வேறு யாரால் தெரியத் தொடங்கியது. அதன் பின் காரியில் இருந்தவர்கள் யார் என்றும் தெரியத் தொடங்கியது.

(வலிகள் தொடரும்...)

நண்பனுக்கு கடன் கொடுத்தால் நண்பனும் போய் விடுவான். கடனும் போய்விடும்.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஆசிரிய இடமாற்றம் தொடர்பில் குழப்பமடையத் தேவையில்லை

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் அறிக்கை

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்குட்பட்ட' மாகாணக் கல்வித் திணைக்களத்தாலும், வலயக் கல்வித் திணைக்களத்தாலும் நடத்தப்படுகின்ற இடமாற்ற சபைக்கூட்டங்களில் சங்கத்தின் பிரதிநிதிகள் முழுமையாக கலந்துகொள்கின்றனர். நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஆசிரிய இடமாற்றங்களில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முழுமையாக பங்கேற்கின்றது.

இது இவ்வாறு இருக்க 2017ஆம் ஆண்டுக்கான ஆசிரிய இடமாற்றங்கள் இரத்துசெய்யப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை. இதனை சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரனிடம் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளரும், வடமாகாணக் கல்விப் பணிப்பாளரும் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வன்னிப் பிரதேச பாடசாலைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்ற சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக அவர்களுக்கான விடுவிப்புக் கடிதங்கள் உரிய வலயங்களுக்கு அனுப்பப்பட்டு பாடசாலைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அவர்கள் 2017ஆம் ஆண்டுபாடசாலை முதலாம் தவணைக்காக தொடங்கும் போது புதிய பாடசாலைகளில் கடமைப் பொறுப்புக்களை ஏற்க முடியும் என சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதைவிட வலயங்களில் நடைபெறும் உள்ளக இடமாற்றங்களில் குழப்ப நிலை தோன்றாதிருக்க ஆசிரிய சமப்படுத்தலைச் சீராக மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் நடைபெறும் சகல ஆசிரிய இடமாற்றங்களையும் இடமாற்ற சபைக்கு ஊடாக செய்யவேண்டும் என்பதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ள அதேவேளை முறையற்ற இடமாற்றங்களை தமக்கு முறையிடுமாறு செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# கீரையை ஆடு தின்னும் ஆட்டைப் புலி கொல்லும்

விடுகதை, புதிர், நொடி என்பன தமிழில் இருக்கக் கூடிய நுண்ணறிவு சார்ந்த விடயங்கள்.

மொழி வழியூடாக நுண்ணறிவைப் பலப்படுத்தும் பொருட்டு விடுகதைகளும் நொடிகளும் புதிர்களும் ஆக்கப்பட்டன. இவ்வாறான புதிர்தான் இது.

ஆடு, கீரை, புலி இந்த மூன்றும் ஓர் இடத்தில் ஒருவரின் கண்காணிப்பில் உள்ளன. இந்த மூன்றையும் படகு மூலம் ஆற்றைக் கடந்து கொண்டு செல்ல வேண்டும். அதிலும் ஒரு தடவையில் ஒன்றை மட்டுமே கொண்டு செல்ல முடியும்.

ஆட்டையும் கீரையையும் விட்டுச் சென்றால், ஆடு கீரையை சாப்பிட்டுவிடும். ஆட்டையும் புலியையும் விட்டுச் சென்றால், புலி ஆட்டைத் தின்றுவிடும். இந்த முரண்பட்ட விடயத்துக்குள் ஆடு, கீரை, புலி இம் மூன்றையும் ஆற்றின் அடுத்த கரைக்குக் கொண்டு செல்வது எப்படி என்பதுதான் கேள்வி.

இந்தக் கேள்விக்கு விடை உள்ளதாயினும் இரண்டு பக்கமும் அடிவாங்கும் நிலை என்பதை விளக்குவதுதான் இந்தப் புதிரின் நோக்கம். அட இந்தக் கதை இங்கு, இப்போது எதற்கானது? என்று கேட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரின் தற்போதைய நிலைமையை விளக்குவதற்கானதுதான்.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நிறைவேறும் என்று தனது நம்பிக்கையை கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தர் வெளிப்படுத்தியுள்ளார். அவரின் நம்பிக்கை பாராட்டுக்குரியது.

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படுவதாயின் அதற்கு பெரும்பான்மை இன மக்களின் ஆதரவு இருத்தல் வேண்டும்.

தனித்து சிறுபான்மை இன மக்கள் ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ எதுவும் நடக்காது என்பதே யதார்த்தம்.

ஆக, அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை சிங்கள மக்கள் ஆதரிப்பதாக இருந்தால், புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் தமிழ் மக்களுக்கு எதுவும் கொடுக்காமல் இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு உரிமை கொடுக்காதவரை அதனை ஏற்று அதனை ஆதரித்து வாக்களிப்பதற்கு சிங்கள மக்கள் தயாராக உள்ளனர்.

மாறாக சீர்திருத்தப்பட்ட அரசியலமைப்பு தமிழ் மக்களுக்கு கடுகளவேனும் உரிமை கொடுத்தால் அதைப் பனையளவாக்கி சிங்களப் பேரினவாதிகள் கத்திக் குளறுவர். பௌத்த பிக்குகள் சிலர் பிரித் தோதி இனங்களைப் பிரிப்பர் என்பது சர்வ நிச்சயம்.

இதேவேளை தங்களுக்கு உரிமை வழங்கப்படாத வரை புதிய அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஆதரிக்கமாட்டார்கள் என்பதும் உண்மை.

எனினும் அவர்களின் எதிர்ப்பு அரசியலமைப்பின் நிறைவேற்றத்துக்கு தடை செய்யாதாயினும் நிறைவேறிய அரசியலமைப்பால் இந்த நாட்டில் இன நல்லுறவு ஏற்படாது என்பதும் உண்மை. இங்குதான் ஆடு, கீரை, புலி என்ற புதிர்க்கதை பொருந்துகிறது.

சிங்களவர்கள் எதிர்த்தால் அரசியலமைப்பு நிறைவேறாது. தமிழர்கள் எதிர்த்தால் நிறைவேறிய அரசியலமைப்பால் எந்த பிரயோசனமும் இருக்காது.

என்ன செய்வது என்று ஆராயும் போதுதான் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அரசியலமைப்புச் சீர்திருத்தம் நிறைவேறும் என்று சம்பந்தர் ஐயா திடமாக நம்புவதால், புதிய அரசியலமைப்பை சிங்கள மக்கள் ஆதரிப்பர் என்பது புலனாகிறது.

அவர்கள் ஆதரிப்பதாக இருந்தால் அந்த அரசியலமைப்பில் தமிழர்களுக்கு எதுவும் இருக்காது என்பது உறுதியாகிவிடும்.

எனவே தமிழருக்கு எதுவும் இல்லாததை தமிழர்களும் ஏற்றுக் கொண்டதாகக் காட்டப்புக் காட்டுவதே சம்பந்தர் ஐயாவின் நோக்கம்.

எப்படியாயினும் அரசியலமைப்பு வென்றாலும் தோற்றாலும் ஆபத்து ஐயாவுக்கு என்றாகி விடும்.

அட இங்குதான் ஆடு, கீரை, புலி என்ற புதிர் சரியாகப் பொருந்துகிறது.

# முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் குறித்த அறிக்கை மீண்டும் தாமதம்

(கொழும்பு)

முஸ்லிம் விவாக. விவாகரத்துச் சட்டத்தில் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் தலைமையிலான குழு மேற்கொண்டுள்ள சிபாரிசுகளை மேலும் ஆராய்வதற்கு உலமா சபை கால அவகாசம் கோரியதால் சட்டத்திருத்தங்கள் தொடர்பான இறுதியறிக்கை எதிர்வரும் ஜனவரி 29 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக குழுவின் தலைவர் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூப் தெரிவித்தார்.

முஸ்லிம் விவாக. விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை சிபாரிசு செய்வதற்கு 2009 ஆம் ஆண்டு அப்போதைய நீதியமைச்சர் மிலிந்த மொரகொடவினால் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சூபின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இக்குழு நேற்று முன்தினம் 13 ஆம் திகதி தனது அறிக்கையை பூரணப்படுத்த திட்டமிட்டிருந்தது.

அறிக்கையில் குழு அங்கத்தவர்களினது கையொப்பங்களையும் பெற்றுக் கொள்ள விருந்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம்.ரிஸ்வி முப்தியும் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.ஏ. முபாரக்கும் கலந்து கொள்ளவில்லை.

உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி வைத்திய சிகிச்சைக்காக கனடா சென்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன் சட்டத் திருத்தங்களை மேலும் ஆராய்வதற்கு உலமா சபை கால அவகாசமும் கோரியிருந்தது.

இதற்கமைவாகவே இறுதியறிக்கை எதிர்வரும் ஜனவரி 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குறிப்பிட்ட அறிக்கை கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி பூரணப்படுத்தப்பட இருந்தாலும் கண்டி போரம், நளீமியா கலாபீட பட்டதாரிகள, பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் ஹுசைன் இஸ்மாயில் ஆகியோர் சில திருத்தங்களை முன் வைத்ததனாலேயே சிபாரிசுகளை பூர்த்தி செய்யும் காலம் நேற்று முன்தினம் வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

யாழ்.மாவட்டத்திற்கான 4 ஆவது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இணைத் தலைவர்கள் தலைமையில் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ-9)

# கண் சிகிச்சை முகாம்

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச கண்சிகிச்சை முகாமும் பொது மருத்துவ முகாமும் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இருந்து பிற்பகல் ஒரு மணிவரை யாழ்.கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையில் நடைபெறும்.

சமரபாகு மற்றும் அயற் கிராம மக்களின் நலன்கருதி நடைபெறும் இவ் இலவச மருத்துவ முகாமில் கலந்து பயன்பெறுமாறு லயன்ஸ் கழகம் அறிவித்துள்ளது. (இ-60)

# ஆயிரத்து 164 அகதிகள் படையினரால் மீட்பு

மத்தியதரைக் கடலில் தத்தளித்த 1,164 அகதிகளைத் தாம் மீட்டதாக இத்தாலிய கடலோர பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போதே நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த அகதிகளை மீட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஆறு இறப்பர் படகுகளிலும் ஒரு மரப்படகிலும் பயணித்துக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் நடுக்கடலில் தத்தளிப்பதை அவதானித்த கடலோர பாதுகாப்புப் படையினர், ரேடியோ கருவி மூலம் நாவ்ஃபோர் மெட் மிஷன் என்கிற ஐரோப்பிய யூனியனின் மீட்புக் கப்பல்களிடம் உதவி கோரியுள்ளனர்.

மீட்புக் கப்பல்களும் படகுகளும் உடனடியாக குறித்த பகுதிக்கு விரைந்து சென்றதையடுத்து அகதிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

அவர்கள் லிபியாவிலிருந்து பயணித்ததாகத் தெரியவந்துள்ளது.

தம்முடன் பயணித்தவர்களில் 6 பேர் வழியிலேயே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்துள்ளனர். (இ-3)

# போயா தினத்தில் மாட்டிறைச்சி விற்பனை செய்தவர் கைதானார்

போயா தினத்தில் மாட்டிறைச்சி விற்பனை செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் 34 கிலோ கிராம் இறைச்சியும் மீட்கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பௌர்ணமி தினத்தன்று இறைச்சி விற்பனை செய்யப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்ததுடன் 34 கிலோ இறைச்சியும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)



# சத்திய தரிசனம்

## பெயர் சொல்லும் பாடம்

❖ குழந்தைக்குப் பெயர் வைப்பது என்பது இல்லற வாழ்வில் முக்கியமானதாகும். குழந்தையை இறைவன் தந்த பிரசாதமாகவே நாம் கருத வேண்டும். அதனால், குழந்தையை அழைக்கும் போதெல்லாம் கடவுளின் நினைவு வரும்படியாக இறைநாமங்களை வைப்பதே முறையாகும். அது நம்முடைய நன்றி உணர்வைக்காட்டுவதாக அமையும்.

❖ பாண்டுரங்கன், வெங்கடேசன், தியாகராஜன் என்று, எவ்வளவோ இறைநாமங்கள் இருக்கின்றன. குழந்தைகளுக்கு இப்படி நல்ல பெயராக வைத்து விட்டு, பாண்டு, வெங்கு, தியாகு என்று அழைப்பதால் பயனில்லை. இன்னும் சிலர் "எஸ்.என்." "ஆர்.டி." என்று இனிஷியல் மட்டுமே வைத்தும் அழைக்கின்றனர். பெயரை இப்படி சுருக்கி அழைப்பதற்காகவா இறைநாமங்களை பெயராக வைத்தது? இல்லவே இல்லை. கூடிய வரையில் பெயரை முழுமையாக அழைப்பதே நல்லது.

❖ ராமன் என்று பெயர் வைத்துக் கொண்டால் மட்டும் போதாது. தந்தை, தாய் சொல்லை மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும். சீதா என்றால் கணவன் அன்பிற்கு இணங்கி காடு செல்லவும் ஆயத்தமாக இருக்க வேண்டும். லட்சுமணன் என்று பெயர் கொண்டவர் அண்ணனுடன் சண்டை போடுபவராக இருந்தால் அப்பெயரை வைக்காமலே இருக்கலாம்.

❖ அதாவது நல்ல பெயர்களை வைத்துக் கொள்வதோடு அப்பெயருக்குரிய நல்ல பண்புகளையும் ஒட்டியதாக நம் வாழ்க்கை முறை இருக்க வேண்டும்

# மன்னார் கில்லறி வெற்றி



மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர்கிங் 2016 உதைபந்தாட்ட போட்டியில் 11/12/2016 அன்று நடைபெற்ற போட்டியில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தனது காலிறுதி வாய்ப்பை தக்க வைத்துள்ளது மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகம். (கு)



அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 12-12-2016 நடைபெற வேண்டிய போட்டியில் காளிகாம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாரதி விளையாட்டுக்கழகம் மோதவிருந்தது. எனினும் காளிகாம்பாள் விளையாட்டுக்கழகம் சமுகம் அளிக்காததனால் பாரதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

# நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சுப்பர் 8 ஆட்டத்திற்கு முன்னேற்றம்





அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் 12.12.2016 அன்று நடைபெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் வி. கழகத்தை எதிர்த்து புங்குடுதீவு நசரேற் வி.கழகம் மோதியது.

போட்டி ஆரம்பித்த நேரம் முதலே இரு அணிகளும் கோல்கள் போட முயற்சித்த போதும் பல சந்தர்ப்பங்களை தவறவிட்டன. எனினும் நீக்கிலஸ் சாதித்தே ஆக வேண்டும் எனும் நோக்கோடு ஆட்டத்தை வேகப்படுத்திய போதும் முதல்பாதியாட்டம் வரை இரு அணிகளும் எந்தவொரு கோலினையும் போட முடியவில்லை. பின்னர் இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பித்த போது நீக்கிலஸ் அணியினர் ஆதிக்கம் செலுத்த 30 ஆவது நிமிடத்தில் நீக்கிலஸ் அணியின் முன்கள வீரர் அஜிந்தன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் கோலாக்கி வெற்றியினை உறுதி செய்தார்.

1:0 என ஆட்டம் தொடர்ந்து செல்ல மீண்டும் 40 ஆவது நிமிடத்தில் அதிரடியாக றோக்சன் நீக்கிலஸ் அணி சார்பில் ஒரு கோலினை போட்டு மேலும் தமது கழக வெற்றிக்கு வலுச்சேர்த்தார். இருப்பினும் நசறேற் அணியினர் சளைக்காது ஆட்ட நேர முடிவுவரை கோலினை போட முயற்சி செய்த போதும் அது முறியடிக்கப்பட்டது. இறுதியில் 2:0 என்ற கோல்கணக்கில் சென்நீக்கிலஸ் அணியினர் வெற்றி பெற்று சுப்பர் 8 ஆட்டத்துக்கு தகுதி பெற்றனர். (கு)

# 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டம் சம்பியனானது மணற்காடு அன்ரனிஸ் வி.கழகம்



உதைபந்தாட்ட சங்கம் நடத்திய 12 அணிகள் பங்கு பற்றிய 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான போட்டியில் 11.12.2016 அன்று நடைபெற்ற போட்டியில் மணற்காடு அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் லெபோன் தலைமையிலான 40 வயது அணியினர் தாங்கள் விளையாடிய அனைத்து போட்டியிலும் வெற்றிபெற்று முதலாவது இடத்தை பெற்றுள்ளார்கள். போட்டியின் ஆட்டநாயகனாக நிமாலும் தொடர் ஆட்டநாயகனாக கமலும் தெரிவாகினர். (சு)

# சம்பியனானது அளவெட்டி விநாயகர்



கீரிமலை உதயதாரகை விளையாட்டுக்கழகம் அண்மையில் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம் மூன்றாவது முறையாக சம்பியன் கிண்ணம் வென்றது. வெற்றி பெற்ற அவ் அணியினரை படத்தில் காணலாம். (கு)

# இன்றைய போட்டி

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் மூன்றாம் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் போட்டியில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# கரவெட்டி பிரதேச செயலகத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வி.விழா

கரவெட்டி பிரதேச செயலகத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு நிகழ்வுகள் தை மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளது.

பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் கழகத்தினை மீள் பதிவு செய்யும் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து இன்று 15 ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஹரிகரனிடம் ஒப்படைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்படைக்காத கழகங்கள் விளையாட்டு விழாவில் கலந்து கொள்ள முடியாது என்பதுடன் குறித்த கழகம் தற்போது செயற்படு நிலையில் இல்லை என கருதப்பட்டு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்படும்.

மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தரிடம் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## ரூ.62 இலட்சம்...

யாழ்ப்பாணத்தின் இரு வேறு பகுதிகளில் பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளினூடாக சுமார் 62இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெனிஸ்லாஸ் கீழ் இயங்கும் விஷேட போதைப்பொருள் தடுப்பு புலனாய்வு பிரிவுக்கு யாழ். புறநகர் பகுதியூடாக கஞ்சா கடத்தல் இடம்பெறுவதாக தகவலொன்று கிடைத்திருந்தது. இதனையடுத்து குறித்த கடத்தல் முயற்சியை முறியடிக்கும் வகையில் குறித்த புலனாய்வு பிரிவால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் நேற்று பிற்பகல் யாழ். செம்மணி சுடலை பகுதியில் வெளிமாவட்டம் ஒன்றுக்கு கடத்தி செல்வதற்காக குப்பை மேட்டில் குப்பைகள் போல போடப்பட்டிருந்த 7கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டிருந்தன. இவ் ஒவ்வொரு கஞ்சா பொதியும் தலா இரண்டு கிலோ நிறையுடையதாக காணப்பட்டதாகவும் இவற்றின் மொத்த பெறுமதி சுமார் 30இலட்சம் ரூபாய்கள் எனவும் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெனிஸ்லாஸ் தெரிவித்திருந்தார். அத்துடன் குறித்த கேரள கஞ்சா கடத்தல் சம்பவம் தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை எனவும் அது தொடர்பான தொடர்ச்சியான விசாரணைகள் இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை யாழ்.பருத்தித்துறை பகுதியிலும் இது போன்றே கேரள கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் பருத்தித்துறை குடத்தனை வடக்கு சுடலைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 8கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகள் ஒவ்வொன்றும் தலா இரண்டு கிலோ நிறையுடையதாகவும் இவற்றின் மொத்த பெறுமதி 32இலட்சம் ரூபாய்கள் எனவும் இவை தொடர்பிலும் யாரும் கைது செய்யப்படாத நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்றுவருவதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-4-60)

## யாழ்.பொது நூல...

யாழ்.பொது நூலகத்தில் கண்ணாடியை உடைத்து புத்தகங்கள் மேசை, கதிரை என்பவற்றினை சேதப்படுத்தி அங்கிருந்த வாசகர்களையும் தாக்க முற்பட்ட நபர் ஒருவரை அங்கிருந்த இளைஞர்கள் மடக்கிப்பிடித்து யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாண பொது நூலகத்தின் இந்தியன் கோணர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.பொது நூலகத்திற்கு வாடிக்கையாக வரும் வாசகர் ஒருவரே மேற்படி தகாத முறையில் நடந்துகொண்டுள்ளார்.

ஏனைய வாசகர்களோடு ஏற்பட்ட கருத்து முரண்பாடோ அல்லது தூண்டுதலின் பேரிலோ மேற்படி அசம்பாவிதம் இடம்பெற்றிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இதுதொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-5)


# இதய அஞ்சலி



திருமதி
சரஸ்வதி ஆறுமுகம்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினதும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினதும் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் அருமைத் தாயார் திருமதி சரஸ்வதி ஆறுமுகம் அவர்கள் அகவை 90இல் அமரத்துவம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா அம்பாளின் திருவடியை சென்றடைய பிரார்த்திக்கிறோம்

நிர்வாகசபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

# கண்ணீர் அஞ்சலி



திருமதி
சரஸ்வதி ஆறுமுகம்

90 ஆவது அகவை நிறைவில் தேகம் விட்ட செய்தி அறிந்து அன்னாரின் ஆத்மா திருக்கைலாயன் திருப்பாதங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

துரை.இளங்குமரன்
விரிவுரையாளர்
(யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)
சிவஸ்ரீ கு.சுமுகலிங்கம் (ஆசிரியர்)



# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி ஆறுமுகம்

(இளைப்பாறிய உப அதிபர், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரஸ்வதி ஆறுமுகம் (இளைப்பாறிய உப அதிபர் - யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை ) அவர்கள் நேற்று (14.12.2016) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பான புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் (இளைப்பாறிய ஆசிரியர் - யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை), அவர்களின் அன்பான மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, வீரசிங்கம், அம்பலவாணர், இலங்கைநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை (ஆசிரியர்), சின்னத்தம்பி, செல்லம்மா, சின்னம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (முன்னாள் அதிபர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை,இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயம்), குகமூர்த்தி (இளைப்பாறிய விரிவுரையாளர் தொழில்நுட்பக் கல்லூரி, மருதனை), குககுமாரி (அதிபர்- நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்), சோணேஸ்வரி (ஆசிரியை- இராமநாதன் கல்லூரி), ஆறுதிருமுருகன் (இளைப்பாறிய அதிபர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி), விக்னேஸ்வரி (விரிவுரையாளர் - கல்வியற் கல்லூரி, யாழ்ப்பாணம்), கேதீஸ்வரி (ஆசிரியை- யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஞானலஷ்மி (ஆசிரியை- நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) மற்றும் கலாநிதி சிவகுமார் (சிரேஷ்ட விரிவுரையாளர் 2-ம்,3-ம் நிலைக்கல்வித்துறைத் தலைவர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்), விஜயரகுநாதன் (இளைப்பாறிய கணக்காளர்- யாழ் போதனா வைத்தியசாலை), இராமச்சந்திரன் (இளைப்பாறிய சேவைக்கால ஆலோசகர் - வலிகாமம் வலயம்), நரேந்திரா (இளைப்பாறிய ஆசிரியர் - உரும்பிராய் இந்துக்கல்லூரி), ஆனந்தராசா (இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை) ஆகியோரின் அன்பு மாமியும், Dr.மயூரேசன் (வைத்திய நிபுணர் - தேசிய வைத்தியசாலை), வைஷ்ணவியா (ஆசிரியை- றோயல் கல்லூரி), Dr.கமலகுமார் (யாழ் போதனா வைத்தியசாலை), சேந்துஷா (ஆசிரியை - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஸ்ரீவிசாகன் (விரிவுரையாளர் - பல்கலைக்கழகக் கல்லூரி, மாத்தளை), ஸ்ரீவித்தகன் (விரிவுரையாளர்- பல்கலைக்கழக கல்லூரி யாழ்ப்பாணம்), கோகுலன் (ஆய்வாளர்-பிரிஸ்ரல் பல்கலைக்கழகம் UK), தாமினி (System Analyst, UK), விசாகன் (Senior Business Analyst, கொழும்பு), உஷேனி, வேதப்பிரியன் (Software Engineer, கொழும்பு), விதுசன் (மாணவன்- யாழ் இந்துக் கல்லூரி), தர்மிதா (மாணவி - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அபிவிராம் (UK), கல்கி ஆகியோரின் அன்புக்குரிய பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2016.12.15) வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4மணியளவில் இணுவில் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

246/4A, கோயில் வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

தகவல் :
ஆறு.திருமுருகன் (மகன்)

## ரூ.32 ஆயிரம்...

கிராமிய வீதிகள், நீர்ப்பாசன வசதிகள், சிறந்த குடிநீர் வசதிகள் ஆகிய திட்டங்களை உள்ளடக்கியதாக இத்திட்டம் அமுல்படுத்தப்படும். ஒருங்கிணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தித்திட்டம் 683.02 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன, வடமாகாணத்தில் 87 பாலங்கள் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விவசாயத் துறையினை நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 25.0 மில்லியன் மதிப்பீட்டில் ஐந்து ஆண்டுத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூபாய் 20மில்லியன் தொகையில் வடமாகாணத்தில் நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் நிறுவனங்களின் இயலளவை அபிவிருத்தி செய்தல் எனும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மேலும் கடந்த வருடம் போன்றே இம்முறையும் உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடாக 6 மில்லியன் ரூபாயே வழங்கப்படவுள்ளது. குறித்த 6 மில்லியன் ரூபாயில் ஒவ்வொரு உறுப்பினரும் தாங்கள் மேற கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்மொழிவுகளை 2017-ம் ஆண்டின் சித்திரை மாதத்திற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

மாகாண சபை உறுப்பினர்கள் தங்களுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடான ரூபாய் 6 மில்லியனை அதிகரித்துத் தருமாறு கோரிக்கை விடுத்ததன் பிரகாரம் அக்கோரிக்கை என்னால் (முதலமைச்சரால்) ஆராயப்பட்டு வழங்கப்படவிருக்கின்ற ரூபாய் 6 மில்லியனுக்கு மேலதிகமாக தலா ஒரு மில்லியன் ரூபாயினை ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினருக்கும் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் இதற்காக ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினரும் காத்திரமான ஒரு திட்ட முன்மொழிவை அதாவது அவர்களுடைய வழமையான 6 மில்லியன் ரூபாயில் மேற்கொள்ளும் சிறிய திட்டங்களைப் போல் இல்லாது தனி ஒரு திட்டமாக குறித்த ஒரு மில்லியன் ரூபாயில் மேற்கொள்ள உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டத்தைத் தர வேண்டும். என முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (செ-4)

## அன்ரன் பால...

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரான தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன்பாலசிங்கத்தின் 10ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் தமிழர் பிரதேசங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி அலுவலகத்திலும், ஜனநாயகப் போராளிகள் கட்சியினரால் சாவகச்சேரியில் அமைந்துள்ள அவர்களது கட்சி அலுவலகத்திலும் இவ் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன. (செ-9)

## பரீட்சை மோசடி...

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து உரிய பரீட்சாத்தியையும் கைது செய்துள்ள முல்லைத்தீவு பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் இவர்களை இன்றைய தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-281)

## ரூ.74 ஆயிரத்து...

உள்நாட்டு நிதியளிப்புகளுக்கூடான கருத்திட்டங்களுக்கு ரூபாய் 3,409.73 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மீண்டுடெழும் செலவின நிதியீட்டமாக மத்திய அரசின் தொகுதிக்கொடையிலிருந்து ரூபாய் 16,476.3 மில்லியனும், மத்திய அரச சேகரிப்பு நிதியிலிருந்து ரூபாய் 2,300.00 மில்லியனும், மாகாணசபை வருமான சேகரிப்பு நிதியிலிருந்து ரூபாய் 545.00 மில்லியனும் ஒதுக்கீடாக கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறாக ரூபாய் 19,321.73 மில்லியன் வடக்கு மாகாண சபையின் மீண்டெழும் செலவினங்களுக்காக 2017-ம் ஆண்டு பயன்படுத்தப்படும். மூலதன செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,208.38 மில்லியனில் பிரமாண அடிப்படையிலான கொடையின் கீழ் ரூபாய் 551.2 மில்லியனும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக்கான நன்கொடையின் கீழ் ரூபாய் 1,657.18 மில்லியனும் ஒதுக்கீடாக கிடைக்கப்பெற்றுள்ளது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 1,657.18 மில்லியனில் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு ரூபாய் 788.0 மில்லியனும், சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு ரூபாய் 737.0 மில்லியனும், பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்காக ரூபாய் 120.0 மில்லியனும், முன்னுரிமைப் படுத்தப்பட்ட அவசியதிட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூபாய் 12.18 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு இணை நிதியளிப்புக்களுக் கூடான அபிவிருத்தித் திட்டங்களுக்கென அனுமதிக்கப்பட்ட தொகையில் பாடசாலைக் கல்வியை ஒரு அறிவு மையத்தின் அடிப்படையாக மாற்றும் செயற்றிட்டத்திற்காக ரூபாய் 315.0 மில்லியனும், சுகாதாரத்துறை அபிவிருத்தித்திட்டங்களுக்காக ரூபாய் 360.0 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் வடக்கு வீதி இணைப்பு அபிவிருத்தித்திட்டத்திற்காக ரூபாய் 748.73 மில்லியனும், இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்திற்காக ரூபாய் 1,077.0 மில்லியனும், யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர்விநியோகத்துக்கும், சுகாதார மேம்பாட்டு கருத்திட்டங்களுக்குமாக ரூபாய் 909.0 மில்லியனும் மத்திய அரசின் நேரடியான நிதி ஆளுகையினால் வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 2017-ம் ஆண்டுக்கு வட மாகாண சபையினால் கோரப்பட்ட நிதித்தேவையின் பிரகாரம் மீண்டெழும் செலவினத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதித்தேவை ரூபாய் 22,329.613 மில்லியன்களாக இருந்தபோதிலும், ரூபாய் 19,321.737 மில்லியன்களே இம்மாகாணத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகையாக கிடைக்கப்பெற்றுள்ளது. இது கோரப்பட்ட தொகையின் 86.5% மட்டுமே ஆகும்.

இதேவேளை மூலதனச்செலவின் கீழ் மாகாண குறித்தொதுக்கப்பட்ட மூலதன நன்கொடையின் மூலம் ரூபாய் 10,672.48 மில்லியன் நிதித்தேவைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் ரூபாய் 1,657.18 மில்லியன்களே அனுமதிக்கப்பட்ட தொகையாக கிடைக்கப்பெற்றுள்ளது. அதாவது 16% ஆன நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையினை பொறுத்தவரையில் 2016ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது 16% ஆன நிதி 2017-ம் ஆண்டுக்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

## வடக்கு பட்ஜெட்டில்...

டங்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன. வீழ்ச்சியடைந்துள்ள வடக்கின் கல்வியை கட்டியெழுப்ப கல்வித்துறையில் பல புதிய திட்டங்களும், கல்விக்கு அடுத்த படியாக விவசாய கூட்டுறவு துறைக்கும் சுகாதார துறைக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று மீன்பிடி, போக்குவரத்து வர்த்தக வாணிப அமைச்சும் புதிய பல திட்டங்களை கொண்டு வரவுள்ளது.

நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு மற்றும் மாகாண பேரவை செயலகம் ஆகியவற்றுக்கான செலவீன தலைப்பு தொடர்பில் விவாதிக்கப்பட்டது. இதில் ஆளுநர் செயலகத்திற்கான 59 மில்லியன் மற்றும் 30.9 மில்லியன் ரூபாவும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுக்கான 28 மில்லியன் ரூபாயும், மாகாண பேரவை செயலகத்திற்கான 314.2 மில்லியன் ரூபாவுக்கான செலவீனங்களும் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

மேலும் எதிர்வரும் இருபதாம் திகதி தொடக்கம் தொடர்ந்து இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள அமர்வில் முதலமைச்சர், அமைச்சுக்கள் மற்றும் பிரதம செயலாளர் செலவீனங்கள் தொடர்பிலான விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது. இதில் முதலமைச்சர் அமைச்சிற்கு மீண்டுவரும் செலவீனமாக 2430.611 மில்லியன், மூலதன செலவீனமாக 301.5 மில்லியனும், பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு மீண்டுவரும் செலவீனமாக 872.78 மில்லியனும், மூலதன செலவீனமாக 393.38 மில்லியனும், மாகாண விவசாய அமைச்சுக்கான மீண்டுவரும் செலவீனமாக 983.784 மில்லியனும், மூலதன செலவீனமாக 289.5 மில்லியனும், மாகாண கல்வி அமைச்சுக்கு மீண்டுவரும் செலவீனமாக 9670.871 மில்லியனும், மூலதன செலவீனமாக 666.5 மில்லியனும், சுகாதார சுதேச மருத்துவ அமைச்சிற்கு மீண்டுவரும் செலவீனமாக 5267.45 மில்லியனும், மூலதன செலவீனமாக 786.5 மில்லியனும், மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப அமைச்சிற்கு மீண்டுவரும் செலவீனமாக 420.726 மில்லியனும், மூலதன செலவீனமாக 293 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றுக்குமான மொத்த ஒதுக்கீடு 22,728.117 மில்லியனாகும்.

மேலும் 2016ஆம் ஆண்டுக்கான மூலதன செலவாக 8,818 மில்லியன் வழங்கப்பட்ட போதும் 2017ஆம் ஆண்டுக்கான மூலதன செலவீனமாக 5618 மில்லியன் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு ஆண்டுகளுக்கும் இடையில் 3200 மில்லியன் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. இதேபோன்று 2016ஆம் ஆண்டுக்கான மீண்டுவரும் செலவீனமாக 16,174 மில்லியனும், 2017ஆம் ஆண்டுக்கான மீண்டுவரும் செலவீனமாக 16,476 மில்லியனும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டை விட மீண்டு வரும் செலவீனத்திற்காக வழங்கப்பட்ட தொகை இம்முறை அதிகமாக காணப்பட்ட போதிலும் மூலதன செலவீனம் மற்றும் மீண்டுவரும் செலவீனங்களுக்காக வழங்கப்பட்ட தொகையின் ஒட்டுமொத்த அடிப்படையில் 2,898 மில்லியன் ஒட்டுமொத்தமாக குறைக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண சபையுடன் தொடர்புடைய செலவில், மாகாண சபையூடான செலவு 22,728 மில்லியன் ரூபாயும், ஏனைய திணைக்களங்களுடனான செலவு 2,734 மில்லியன் ரூபாவும், மொத்தம் 25,462 மில்லியன் ரூபாவும் செலவிடப்படவுள்ளது. (செ-4)


**பணிப்பெண் தேவை**

உரும்பிராயில் தங்கி நின்று வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. ரூபா 15,000 சம்பளம் வழங்கப்படும்.

T.P:-0778202326

(6932)




தரமான பாடசாலை சீருடைத் துணிகளை மொத்தமாக பெற்றுக் கொள்ள விரும்பும் வியாபாரிகள் தொடர்பு கொள்ளவும்.

T.P:-0779001366




**தேக்கம் கதவு விற்பனைக்கு**

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நல்ல நிலையில் உள்ள வசந்த மண்டப நிலையும் பெரிய தேக்கம் கதவும் விற்பனைக்குண்டு.

**0776081693 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்**








இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.